Price 2 As 13th SEPTEMBER 1936 Regd. No. 2514

VOL. 7 NO. 33

# சுதேசமித்திரன்

# SWADESAMITRAN

## ILLUSTRATED WEEKLY



ஸிம்லாவின் தோற்றம்.

## வாரப்பதிப்பு







மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு

## வுட்வர்ட்ஸ்
## கிரைப் வாடர்

எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND




## ஸ்பெயின் கலகம்

மாட்ரிட் நகருக்கு 80 மைல் தூரத்திலுள்ள தலவீரா பிரதேசத்திலிருந்து கலகக்காரர்

களைத் துரத்துவதற்கு சர்க்கார் படையினர் விமானங்களையும், வெடிகுண்டு விமானங்களையும் உபயோகித்தனர். கலகக்காரர்களுக்கு அந்நிய நாடுகளிலிருந்து விமானபலம் உதவப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இதில் சர்க்கார் பலமே அதிகமென்று சொல்லப்படுகிறது. ஐரான் நகரை விட்டுவிடக் கூடாதென்று சர்க்கார் துருப்புகள் முயற்சி செய்தும் கலகக்காரர்கள் பலமான முற்றுகை யிட்டுப் பிடித்துக்கொண்டு விட்டனர். அவர்கள் இப்போரில் இராணுவ மோட்டார்களை பான்படுத்திக்கொண்டனர். இனிமேல் கலகக்காரர்கள் ஸான் ஸபாஸ்டியன் மீது படையெடுத்துச் செல்வார்களென்று கூறப்படுகிறது ஸான் ஸபாஸ்டியனும் ஐரான் நகருக்கேற்பட்ட கதியை அடைய வேண்டி வருமோவென்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாக அந்நிய நாடுகள் என்ன செய்யும் என்பதைக் கவனிக்க வேண்டியி

றக்கிறது. ஸ்பெயின் விஷயத்தில் தலையிடாதிருப்பதுபற்றி பிரிட்டிஷ் பிரெஞ்சு கவர்ன்மெண்டுகள் கையாண்டுவரும்

வழிகள் பிரிட்டிஷ் தொழிற் கட்சியினருக்குச் சிறிதும் திருப்தியளிக்கவில்லை.

---

## பாலஸ்தீன நிலைமை

பாலஸ்தீனத்தில் இன்னும் ஆங்காங்கு சச்சரவுகள் நடந்து வருகின்றன. பாலஸ்தீன நிலைமையைப் பற்றி ஆலோசிக்க பிரிட்டிஷ் மந்திரி சபையின் கூட்டமொன்று நடைபெற்றது

பாலஸ்தீன சர்க்கார் அங்கு வேலை நிறுத்தத்தைத் தீர்க்குமபொருட்டு அராபியருடன் சமரசம் செய்துகொள்ள விரும்புகின்றனராயினும், அந்நாட்டில் யூதர்கள் குடியேறுவது தடுக்கப்படமாட்டாதென மந்திரி சபைக் கூட்டத்தில் உறுதி கூறப்பட்டதாகப் பத்திரிகை நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கு கலகங்களை ஒடுக்க இன்னும தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படுவதுடன் ராணுவச்சட்டமும் அமுலுக்குக்கொண்டு

வரப்படுமென அநநிருபர்கள் கூறுகின்றனர்.

அராபியர் கலகமுறையைக் கை விட்டால், யூதர்குடியே

ற்றத்தைத் தடுப்பதாகப் பாலஸ்தீன ஹை கமிஷனர்

பொருளடக்கம்.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| பிரபஞ்ச வர்த்தமானம் | 1 |
| இந்திய வர்த்தமானம் | 2 |
| நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி | 3 |
| விநோதக்கொத்து | 5 |
| தெய்வ தண்டனை (சிறுகதை) | 6 |
| ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள் (புதிய தொடர்கதை | 8 |
| சங்கீதப்பகுதி | 0 |
| தென்னிந்தியப் பிரமுகர்கள் | 3 |
| ரிஷியின் சாபம் (சிறுவர் பகுதி) | 15 |
| தமிழ்நங்கையின் தவப் பயன் | 17 |
| டெயரில் என்ன இருக்கிறது (ஹாஸ்யக்கதை) | 23 |
| தையல் வேலை | 25 |
| அதிசயம்-ஆனல் உண்மை | 26 |
| நவநாகரீகம் | 29 |
| நகர விஜயம் | 31 |
| அழகா விகாரமா? | 35 |
| மகாபாரதம் | :7 |
| புஸ்தக விமர்சம் | 38 |
| கண்ணோட்டம் - பிரமுகர்கள் (படங்கள்) | 39 |


உறுதி கூறினரென வெளியான செய்தி மறுக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)




சென்னை ஆக்டிங் கவர்னர் ஸர் கே. வி. ரெட்டி நாயுடு மேட்டூரில் பவர் ஹௌஸ் அஸ்திவாரக்கல்லை நாட்டுவித்தார்.




10 வருஷ உத்திரவாதமுள்ள
புது மாதிரியான
பஞ்ச வர்ண கல் செயின்கள்

**ரூபாய் 5-0-0**

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கைகற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.

(கேட்லாக் லவசம்)

**R.S. பிரகாசம் & Co.**

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.
187, சைனபஜார் ரோட், ஜி. டி மதறாஸ்




## இந்தியா சட்ட சபைக் கூட்டம்

இந்தியா சட்ட சபை சென்ற ஆகஸ்டு 31-ந்தேதி பிரஸிடெண்டு ஸர் அப்துர் ரஹிம் தலைமையில் கூடிற்று. இந்தக் கூட்டம் ஒன்றரை மாதத்திற்குமேல் நடக்கும். பல முக்கிய விஷயங்கள் முக்கியமாக மத சமூகச் சீர்திருத்த மசோதாக்கள் இதில் ஆலோசனைக்கு வருவதாகவிருக்கின்றன. கூட்டம் ஆரம்பித்து ஒரு வாரத்திற்குள் நடந்துள்ள விஷயங்களே இக்கூட்டத்தை முக்கியமானதாகச் செய்துவிட்டன.

முதல் தினக் கூட்டத்திலேயே முக்கியப் பிரேரணை விஷயத்தில் கவர்ன்மெண்டிற்குப் பெரிய தோல்வியேற்பட்டது. ஐ ஸி. எஸ். வர்க்கத்திற்கு ஐரோப்பியரை நியமனஞ் செய்வதில் விதிகளை மாற்றி போட்டிப் பரீக்ஷையில் வருவோர் தவிர சில ஐரோப்பியரை நியமனமும் செய்யலாமென்று செய்யப்பட்டுள்ள திருத்தத்தைக் கண்டிக்க ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி கொண்டு வந்த அவசரப் பிரேரணை 5 வோட்டுகள் பெரும்பான்மையுடன் சபையில் நிறைவேறிற்று. இரண்டாம் தினத்தில் ஸ்ரீமான் சுபாஷ் போஸ் நிலைமைபற்றி ஸ்ரீமான் கிரி ஒரு அவசரப் பிரேரணை கொண்டுவந்தார். ஸ்ரீமான் போஸின் சொந்த டாக்டர் அவரைப் பரிசோதிக்க ஏற்பாடு செய்வதாக இந்தியா கவர்ன்மெண்டு சட்ட மெம்பர் கூறிய உறுதிமொழியின் பேரில் இப்பிரேரணை வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டது. மூன்றும் தினமும் ஒரு அவசரப் பிரேரணை காங்கிரஸ் கட்சியினரால் கொண்டுவரப்பட்டது. இது சபையைக் கலக்காது கவர்ன்மெண்டார் விசேஷ காப்பு வரி சபை முடிவை ஏற்று உத்தரவிட்டதைக் கண்டித்து ஸ்ரீமான் அவிநாசிலிங்கஞ் செட்டியாரால் கொண்டுவரப்பட்டது. இப்பிரேரணை மீது சபையில் ஓட்டெடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினர் ஆவல் கொண்டிருந்தனர். இவர்களுக்கு சபையில் பெரும்பான்மை பலமுமிருந்தது. ஆனால் கவர்ன்மெண்டு மெம்பர்கள் வெகு தாமதித்துப் பேச வெழுந்து இதை ஓட்டின்றிப் பேசித் தீர்த்துவிட முயன்றனர். 6-மணிக்கு விவாதம் முடிக்க வேண்டியிருக்க, 5-45-மணிக்கு பொக்கிஷ மெம்பர் பேச வாரம்பித்தார். இதைக் காங்கிரஸ் கக்ஷியினர் ஆக்ஷேபித்தனர். பொக்கிஷ மெம்பர் முன்னதாகவே பேசியிருக்க வேண்டுமாயினும், அவரை இச்சமயத்தில் பேச அனுமதிக்காம லிருப்பதற்கில்லையெனத் தலைவர் கூறவே, காங்கிரஸ் கக்ஷியினரும் காங்கிரஸ் தேசியக் கக்ஷியினரும், சுயேச்சை கக்ஷியினருமாக 54 பேர்கள் ஸ்ரீமான் புலாபாய் தேசாய் தலைமையில் வெட்கம் என்ற ஆரவாரத்துடன் ஆக்ஷேபத்தின்பேரில் சபையைவிட்டு வெளியேறினர். இக்கூட்டத்தில் சுமார் 20 அவசரப் பிரேரணைகள்போல் கொண்டுவருவதாக அறிவிக்கப்பட்டிருந்தன. பிரேரிக்கப்பட்டபோது பாக்கியில் சில வாபீஸ் பெறப்பட்டன. மற்றும் பல சபைத்தலைவாலும் ராஜப் பிரதிநிதியினாலும் ஒழுங்கல்லவென நிராகரிக்கப்பட்டன

சபை கவனிக்க மற்ற அலுவல்களில் ரெயில்வேக்களில் டிக்கட்டில்லாத பிரயாணிகளை கட்டுப்படுத்த கவர்ன்மெண்டார் கொண்டுவந்த மசோதா ஒன்று. அதுபற்றி பொதுஜன அபிப்பிராய மறிய டிசம்பர் 31-ந் தேதி வரை இதைப் பிரசுரிப்பதென்ற திருத்தத்தை இதில் கவர்ன்மெண்டு ஆக்ஷேபித்தும் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டது அதேமாதிரி மோட்டார் வண்டிகள் மசோதாவென பஸ் போக்குவரத்துக் கட்டுப்பாடு மசோதா பற்றியும் அபிப்பிராயம் அறிவதென முடிவு செய்யப்பட்டது.



சமீபத்தில் புதுச்சேரி பிரஞ்சு இந்திய கவர்னர் நாகூருக்கு விஜயம் செய்தபோது நாகூர் மதுரஸா டிரஸ்டிகளால் உபசரிக்கப்பட்டார்.

---

(40-ம் பக்கம் பார்க்க)


## சூதக் கோளாறுகள் தீர்ந்துவிட்டன!

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக வியாதிகளை வென்று சந்தான பாக்யத்தையடைந்தனர்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

(அபூர்வ மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.)

சூதகக் கோளாறுகளை நீக்கி, மலட்டுப் பூச்சிகளைக் கொன்று, கருப்பைக்கு பலந்தந்து, சந்தான பாக்யத்தையளிக்கும் சிறந்த ஒளஷதம். அநேக நற்சாக்ஷிகள் பெற்றது.

ஸெட் விலை ரூ. 5. விவரத்திற்கு எழுதவும்.





வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

# நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி



மைசூர் மஹாராஜாவின் முதலாவது விமானப் பிரயாணம். மஹாராஜா தமது கோஷ்டியினருடன் பர்லினுக்குப் புறப்படுமுன் க்ராய்டனில் எடுத்த படம்.



தாதாபாய் நௌரோஜி தினத்தைக் கொண்டாட பம்பாயில் ஸ்ரீமதி சரோஜினிதேவி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.



சென்னை பெண் பள்ளிக்கூடங்கள் விளையாட்டு கோஷ்டிகளுக்குள் நடைபெறும் …



ஆங்கிலோ-எகிப்திய ஒப்பந்தம லண்டன் லொகார்னே அறையில் கையெழுத்திடபபட்டது. அதன் பிறகு எகிப்திய பிரதம மந்திரி நாஹஸ்பாஷா பேசிய காட்சி.

## பிரபஞ்ச வர்த்தமானப்

(1-ம பக்கம் தொடர்ச்சி)

### பிரெஞ்சுப் படைப் பெருக்கம்

ஜெர்மன் சர்க்கார் ராணுவப் பயிற்சிக் கால அளவை நீடித்திருப்பது கண்டு, பிரெஞ்சு சர்க்காரும் தங்கள் படைப் பலத்தைப் பெருக்க முன்வருவர். துப்பாக்கிகள், மற்ற யுத்த தளவாடங்கள் இவற்றின் அளவையும், சக்தியையும் பெருக்க அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடும். பிரான்ஸில் ராணுவப் பயிற்சிக் கால அளவை நீடிப்பதென்ற யோசனை, பொருளாதார காரணங்களை முன்னிட்டு நிராகரிக்கப்படும். இதே சமயத்தில் பிரான்ஸ் கூட்டு பந்தோபஸ்து முறையை வலுப்படுத்தவும் தீவிரமாக முயற்சி செய்யும். இது சம்பந்தமாக பிரான்ஸ்—போலந்து கூட்டுறவை வலியுறுத்துவது அவசியமாகுமெனக் கருதப்படுகிறது.

ஜெர்மன் சேனையைப்பற்றி மிஸ்டர் டலாடியர் கீழ்க் கண்டவாறு மதிப்பிடுகிறுர்:—அக்டோபர் மாதம் ஜெர்மன் ராணுவம் 8,50,000 துருப்புகளைக் கொண்டதாயிருக்கும். இவர்களில் 2,80,000 பேர் ராணுவத்தையே தொழிலாகக் கொண்டவர்கள். ஆனல், பிரான்ஸிடம் 4 00,000 துருப்புகள் தானிருக்கின்றன. இவர்களில் ராணுவத்தையே தொழிலாகக் கொண்டவர்கள் 80,000 பேர்தான்.

### சில மணி நேரத்தில் 80 லக்ஷம் துருப்புகள்

அபிஸீனியாவில் சமீபத்தில் நடந்த ராணுவ அணிவகுப்பின்போது ஸீனர் முஸோலினி பின் வருமாறு பேசினுர்:-

"எத்தகைய நெருக்கடி ஏற்படினும் அதைத் தைரியமாக திறமையுடன் சமாளிக்க இத்தாலியர் சக்தி பெற்றவர்களாயிருக்க வேண்டும் மற்ற எதையும் விட இதுவே முக்கியமானது.

இத்தாலிய சர்க்கார் நினைத்த நேரத்தில், சில மணி நேரத்திற்குள் 80 லக்ஷம் துருப்புகள் கொண்ட பெரும்படையைத் திரட்டி விடலாம் 14-வருஷ காலமாக நடைபெற்று வரும் பாஸிஸ்ட் ஆட்சியின் பலன் இது. நமது சக்தியில் ஒரு பாகம் ஆப்பிரிக்காவில் செலவழிக்கப் பட்டதாயினும், இப்பொழுது அங்குள்ள பிரதேசம் நம் வசமிருப்பது காரணமாக நாம் அதிகமான திறமையுடன் விளங்குகிறோம்."

### பெண்களின் தற்கொலை ஒப்பந்தம்

சினுப்ஹகின் . மாகாணத்தைச் சேர்ந்த பயுசெக்கில் 16 முதல் 19 வயது வரையுள்ள

போல் தற்கொலை செய்து கொள்ள முயன்றனர். தங்களுக்கு இஷ்டமான கணவர்களை வரிக்க அவர்களுடைய பெற்றோர்கள் அனுமதிக்காததே இதற்குக் காரண மெனத் தெரிகிறது.

இப்பெண்கள் போட்டோ, எடுத்துக்கொண்ட பின்னர் அவர்களில் ஒருத்தியின் வீட்டில் கூடினர். ஒன்பது பேரும் ஒரேசமயத்தில் அபினும், சாராயமும் கலந்து ஒரு பானத்தை அருந்தினர். சில மணி நேரத்திற்குப் பின் ஒரு வேலைக்காரன் அவர்கள் பிரக்ஞையற்றுக்கிடப்பதைக்கண்டான். உடனே அவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனர். மறு நாள் அவர்கள் மயக்கம் தெளிந்தனர்.

### சர்வதேச சங்கத்தின் திருத்தியமைப்பு

சர்வதேச சங்க உடன்படிக்கையைப் பாதுகாக்கும் பொருட்டு நியுஸிலந்து சர்க்கார் சில யோசனைகளைத் தெரிவித்திருக்கின்றனர். அவர்கள் கூறியிருப்பதாவது:—

ஒரு சர்வதேசியப்படை ஏற்படுத்தவேண்டும். அல்லது சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நாடும் தனது சேனையில் ஒரு பாகத்தை சர்வதேசச் சங்கத்துக்கு ஒதுக்கிவைக்கவேண்டும்.

நிர்ப்பந்த முறைகளை தாங்க

கரிக்கத் தயாராயிருக்கின்றனவா வென்பதையும், அங்ஙனமாயின் தங்கள் படைகளில் ஒருபாகத்தை சங்கத்திற்கு ஒதுக்கிவைக்கலாமா வென்பதையும் சங்க நாடுகள் முடிவுசெய்ய அந்நாடுகள் ஒவ்வொன்றிலும் இப் பிரச்னைகள் பற்றி பொதுஜன வாக்குக் கணக்கு எடுக்கவேண்டும்.




### குழந்தைக்கட்டி எனும் ஈரல் பெருக்கம்.

பாலகர்களுக்கு ஏற்பட்டு வரும் கட்டி, பாற்கட்டி, குழந்தைக் கட்டி எனும் இப்பொல்லா வியாதியை வேருடன்களைய இப்புத்தகம் இன்றியமையாத பொக்கிஷம். இதில் இக் கட்டிகளின் உற்பத்தியும் அதற்குரிய காரணங்களும் தாய்மார்கள் இருக்க வேண்டிய அவசியமான முறைகளையும் பற்றி யாவரும் எளிதில் அறியும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—4.

சுதேசமித்திரன் புத்தகசாலை,

சென்னை.




''சுகவாசத்திற்குச் செல்லுமிடங்களில் ஹோட்டல்களில் இடம் கிடைக்காமல் பலர் கஷ்டப்படுகின்றனராம்.''

''இடம் கிடைத்து அவற்றி விருப்பவர்கள் வெளியே வர முடியாதபடிக் கஷ்டப்படுகின்றனர் பலர்.''

---

வீடு புகுந்து திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவன் சமீபத்தில் சிறையிலிருந்து விடுதலையடைந்தான். சிறிது நேரம் கழித்து அவன் ஒரு குதிரையைத் திருடியவன் என்று சந்தேகித்துக் கைது செய்தனர். ஆனால் திருடன் உடனே தான் திருடவில்லையென்றும் வேண்டுமானால் சோதனை போட்டுக்கொள்ளலாமென்றும் சொன்னான்.

---

''யானைகள் அதிகமாகவிருக்கும் தேசங்களில் போக்குவரத்துக்கு அவைகள் உபயோகப்படுத்தப்படுகிறதில்லையாம்''

மோட்டார் விற்பவர்:—புதிய மாடல்கள் வராதது தான் காரணம்.

---

''ஒரு பிரபல நாவலாசிரியர் தம்மைப்பற்றிப் பேசுவதில்லையாம்.''

''யாரோ ஒருவர் அவர் விரும்பும் நாவலாசிரியர் யார் என்று கேட்ட பிறகுதான் மேற்படி நாவலாசிரியர் தம்மைப்பற்றிப் பேசுவதில்லை என்று உறுதி செய்துகொண்டாராம்.''

---

''பித்தளைக் கரண்டி வாங்கி வரும்படி சொல்லியபோது அலுமினியம் கரண்டி வாங்கி வந்ததற்காக ஒரு மனைவி தன் கணவனை அடித்து விட்டாளாம்.''

''இரும்புக் கரண்டி வாங்கி வராமலிருந்தது கணவனின் அதிருஷ்டம்தான்'' என்று அடுத்த வீட்டுக்காரர் சொல்லுகிறார்.

---

''திடுக்கிடும்படியான பலவற்றை நான் படித்திருக்கிறேன்''

''உதாரணம், பிரம்பால் அடிப்பது.''

---

''இந்தரோஜாப்பூக்கள் காகிதத்தினாலல்லவா செய்யப்பட்டிருக்கின்றன? நிஜமான பூக்களை மேஜைமேல் வைத்திருந்தால் அழகாகவும் இருக்கும், வாசனையாகவும்மிருக்கும்.''

''வருகிறவர்களும் போகிறவர்களும் தின்று விடுகிறார்களே.''

---

ஒரு குதிரையும் வண்டியும் விற்பனைக்கு வந்தன. சொந்தக்காரர்:—இந்தக் குதிரை ஒரு இடத்திலும் நிற்காமல் பத்து மைல்கள் ஓடும்.

வாங்கவந்தவர்:—அது பிரயோஜனமில்லை. நான் வசிக்குமிடம் வேலை செய்யுமிடத்திலிருந்து எட்டு மைல் இருக்கிறது. இதை வாங்கினால் பிரதிதினம் நடக்கவேண்டும்.

---

சமீபத்தில் விவாகம் செய்து கொண்ட தம்பதிகள் புதிதாகக் குடித்தனம் வைத்தனர்.

மனைவி:—இவ்விதம் நான் பிரதிதினம் சமையல் செய்து போட்டால் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?

கணவன் (சாப்பிடாமல் இலையைவிட்டு எழுந்து):—என்னுடைய இன்ஷ்யூரன்ஸ் பணம் கிடைக்கும்.

---



விளம்பரம் செய்யவந்தவர்:—இறந்துபோன என் அண்ணன் மரண நோட்டீஸைப் பத்திரிகையில் பிரசுரிக்க என்ன ஆகும்?
விளம்பர மானேஜர்:—ஒரு அங்குலத்திற்கு இரண்டு ரூபாய்.
வந்தவர்:—ஐயோ! என் அண்ணன் ஆறடியிருந்தாரே.

''வருமான வரி ஆபீஸிலிருந்து அத்தகைய கடிதங்களை விடாமல் அனுப்பிக்கொண்டிருக்கின்றனர்'' என்கிறார் ஒரு பிரபல வியாபாரி.

---

''உபாத்தியாயர் செய்யும் ஒரு சிறு செய்கையினால் மாணவர்கள் திருந்தக்கூடும்.''

## ஜோதிஷப் பலன்

ஒரு தசைக்குப் புக்திவாரிப் பலன் ரூ 3. அந்தரப் பலன் ரூ 6. ஆயுள் கணிதம் ரூ $3\frac{1}{2}$ உத்தியோக பாவம் ரூ $1\frac{1}{2}$. வீ. பி. செலவு தனி. ஜாதகநகலும் பிறந்த ஊரும் தேவை. கடிதப் போக்குவரத்து தமிழில்.

வை. பிச்சு சாஸ்திரியார்,
ஜோதிஷ கணிதர்,
கெங்கைகுளத் தெரு,
வைதீஸ்வரன் கோவில்.

## எ து ?

தமிழ் நாட்டில் குறைந்த சந்தாவில் அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

## ''சி த் த ன்''

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளி நாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு,

விபரங்களுக்கு எழுதவும். மானேஜர் ''சித்தன்'' பழனி, S. I.

## குழந்தைகளின் வயிற்று ஜுரக் கட்டிகளை

சந்தேகமின்றி சமனப்படுத்துவது

## பால சஞ்சீவினி

இதுவேதான்

உண்மையான அசல் விஜயநகரம் மருந்து

விஜயநகர சமஸ்தான வைத்திய பரம்பரை பிள்ளா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு பிரதர், விஜயநகரம்.

மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடீஸ் ரோட், மைலாப்பூர்.

(ராமகிருஷ்ண மடம் எதிர்.)

நமது சிறுகதை

# தெய்வ தண்டனை

(வேப்பத்தூர், ஸ்ரீமான் எம். சுப்பிரமணியம்.)

இப்பொழுது சம்பந்தத்தை யாரும் அடையாளம் கண்டுபிடிக்க இயலாது. மூன்று வருஷங்களுக்கு முன் "பகதூரா ஷா அண்டு ஸன்ஸ்" லிமிடெட்டில் அக்கவுண்டண்ட் ஆக இருந்த அவன், மூன்று வருஷச் சிறை வாசத்தால் மிகவும் இளைத்துப் போயிருந்தான்.

சிறையிலிருந்த மூன்று வருஷங்களாக ஒரு தடவை கூட ஜெயராமிடமிருந்து லெட்டர் பெறவில்லை. ஆனால் சம்பந்தம், சந்தேகம் தோன்றியபோதெல்லாம், "சே! அவர் அவ்வளவு மோசமான பெயர்வழியல்ல. அப்படியே சர்வசாதாரணமாக அவர் ஒரு கடிதம் எழுதினாலும், போலீஸார், 'ஒரு கம்பெனியின் டைரக்டராயிருப்பவன் அதே கம்பெனியில் அக்கௌண்டண்டாகவிருந்து ரூ. 20,000 கபளீகரம் செய்தவனுக்குக் கடிதம் எழுதக் காரணமென்ன' என்று சந்தேகிக்க மாட்டார்களா' வெனத் தன்னைத்தானே தேற்றிக்கொள்வான்.

சம்பந்தம் ரூ. 20,000-த்தைக் கம்பெனியிலிருந்து கொள்ளையடித்தானேயாகிலும், அதை யனுபவிப்பதற்குமுன் அதற்காகத் தண்டனையடைந்தவன். ஆனால், அவன் விடுதலையடைந்து டைரக்டர் ஜெயராமைத் தேடியபொழுது சென்னையிலிருந்தே அப்பேர்வழி மறைந்து விட்டதாகத் தோன்றியது. சம்பந்தம் விசாரித்தபொழுது டைரக்டர் ஜெயராம் தன் பதவியை விட்டு விட்டதாகத் தெரிந்தது. அவர் முன்பு வசித்த இடத்திலிருந்தும் சென்றுவிட்டார். டைரக்டர் ஜெயராமுடன் சம்பந்தத்தின் ரூ. 10,000மும் போய்விட்டது.

ஜெயராமை நம்பிய தன் மோசம் சம்பந்தத்திற்கு இப்பொழுதுதான் தெரிந்தது. "ஆனால் தலையிட்டுக் கொண்டாகிவிட்டது. இப்பொழுதென்ன பயன்? அப்பொழுது அப்படுபாவி சொன்னது நியாயமாகவேயிருந்தது. ஒருநாளுமில்லாமல் மிகவும் குறைவாயிருந்த எனது பாங்க் அக்கவுண்டில் ரூ. 20,000 சோக்கப்பட்டால் சந்தேகத்திற்கு இடமுண்டாகும். ஆனால் ஜெயராமைப்போனற பணக்காரர்களின் கணக்கில் கட்டப்பட்டால் யார் சந்தேகப்படுவார்கள் என நான் எண்ணினேன்" எனத் தனக்குள் யோசனை செய்தான் சம்பந்தம்.

மூன்று வருஷங்களுக்கு முன்னால் எற்பட்ட அச்சம்பவம் கொஞ்சம் கொஞ்சமாக அவன் நினைவிற்கு வந்தது. ஒருநாளுமில்லாமலதான் புறப்பட்டு வெளியே செல்லுமசமயம் டைரக்டர் ஜெயராம் கூப்பிட்டனுப்பியது அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது; அறைக்குள் நுழைந்தும் சம்பந்தத்தை மிகப் பரிவுடன் உட்காரும்படிக் கூறினது அவனது வியப்பை அதிகப்படுத்தியது. டைரக்டர் திடீரென, "என்ன சம்பந்தம், உனக்குப் பணக்காரனாகவேண்டுமென விருப்பமில்லையா?" எனக் கேட்டார். இவ்வெதிர்பாராத கேள்வியால் அவன் திகைத்துப்போனான்.

"ஆமாம்...... தாங்கள்...... எனக்கொன்றும் புரியவில்லையே" என்று குழறினான் சம்பந்தம். ஜெயராம் கட்டடமே இடிந்துவிடுவது போல் சிரித்தார். "சம்பந்தம்! பேஷ்! நீர், ரொம்ப கர்நாடகமாயிருக்கிறீர், உமக்கு நான் கூறுவதின் அர்த்தத்தைக் கிரகித்துக் கொள்ளக்கூடிய சக்தியில்லை. அடபாபமே!"

"சரிதான்......ஆனால்..."

"ஆம்! இப்பொழுது கெட்டிக்காரராகிவிட்டீர்! உமக்கு வயதென்ன ஆகிறது?

"எனக்கு 35 ஆகிவிட்டது"

"இதுவரையில் நீர் சம்பாதித்ததில் எவ்வளவு மிச்சம் பிடித்து வைத்திருக்கிறீர்?"

"மிச்சமா? மிகவும் குறைச்சல். ஒரு பெரிய குடும்பத்தைப் போஷிக்க வேண்டிய நான், இவ்வளவு வருஷங்களாக மீற்றது ஆயிரம் ரூபாய்க்குமேயில்லை."

"ஹஹ்ஹா! நீர் வேலைக்கு வந்த இந்தப் பதினைந்துவருஷமாக இவ்வளவுதானா? திடீரென நீர் வேலையை விட்டு நீங்கும்படி நேர்ந்தால் என்ன செய்வீர்? இந்த ஆயிரம் ரூபாய்கள் எந்த மூலைக்கு? "ஆனால் நான் என்ன செய்யக் கூடும். என்னாலானதை முயன்று வருகிறேன்."

"ஆனால்! இன்னும் எத்தனை வருஷம சம்பாதிப்பதாக யோசனை செய்திருக்கிறீர்? நீர் உமக்குப் போதுமானபொருள் சம்பாதிப்பதற்குள் யுகம் புரண்டு விடுமே"

"ஆனால் நான் என்ன செய்யக் கூடும்......"

"என்ன செய்யக் கூடுமா? என்ன செய்யக்கூடும். என இதைச் சொல்லவே உம்மை இங்கு அழைத்திருக்கிறேன். இதோ நான் சொல்வதைக் கேளும். நமது கம்பெனியோ அதன் உயிர் போகும் தருவாயிலிருக்கின்றது நாளுக்கு நாள் போட்டிகள் அதிகரிக்கின்றன. இன்னும் நாலைந்து தினங்களுக்குள் நமது கம்பெனிக்கு ரூ 20,000 ரொக்கமாகக் கிடைக்கப்போகின்றது. நான் உமது நன்மையை உத்தேசித்து நாளையே லீவில் செல்லுகிறேன். என்னுடைய ஸ்தானத்தில் நீர் நான வரும் வரையில் இருக்கப்போகின்றீர். அந்த ரூபாய்கள் இருபதினாயிரத்தையும் தாங்கள் எடுத்து என் கணக்கில் கட்டிவிடுங்கள். ஏன் என் கணக்கில் பாங்கில் கட்டவேண்டுமென நீர் சந்தேகப்படலாம். ஒருநாளுமில்லாத நீர் திடீரென இவ்வளவு தொகை கட்டக் காரணமென்னவெனச் சந்தேகித்தால், நீர் அகப்பட்டுக் கொள்வதோடு பணமும் பறி



காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹாலால் நேருவும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களும். சமீபத்தில் பம்பாயில் நடந்த கூட்டத்தின்போது எடுத்த படம்.

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனபஜார், மதராஸ்.

ரூ. 500 இனாம்!
திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்,
உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானால்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.
SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

முதல் செய்யப்படும். ஆனால் நீர் என் கணக்கில் சேர்ப்பீரானால் அத்தகைய பயமில்லை. அதற்காக நான் பாதி எடுத்துக்கொண்டாலும் உமக்கு பத்தாயிர ரூபாய்கள் கஷ்டமின்றி வந்து சேரும். ஆனால் கம்பெனியில் நீர் செய்த மோசம் வெளியாகும்பொழுது அதற்காக சொல்பதண்டனையடைய நேரிடும். பணத்தைப் பற்றிக் கேட்டால் செலவழித்த வழிகள் அநேகம் கூறிவிடலாம். நீர் சிறையிலிருந்து திரும்பியதும் உமது பங்குப் பணத்தை உம்மிடம் சேர்த்து விடுகிறேன். நீர் என்றும் பயமில்லாது, வேலையும் செய்யாது காலம் கழிக்கலாமல்லவா?'' என்றார் ஜெயராம்.

தண்டனையை நினைத்த பொழுது அவன் தேகம் பதறியது. ஆனால் முதலில் சிறிது தண்டனையடைந்தாலும், பின்னால் கிடைக்கவிருக்கும் சுகத்தை நினைத்தபொழுது அவன் மனம் ஒருவாறு இதை அனுமதித்தது.

சம்பந்தம் தயங்கியபோதெல்லாம் ஜெயராம் அவனை அவ்வப்பொழுது ஆசைவார்த்தைகளால் சரிப்படுத்தி விட்டார்.

காரியங்கள் ஜெயராம் யோசனையின்படியே செய்யப்பட்டன. குற்றவாளியெனத் தண்டிக்கப்பட்டபொழுது சம்பந்தம் அதை லக்ஷியம் செய்யாது தண்டனையை ஏற்றுக்கொண்டான். ஆனால் பாவம்! ஒரு சல்லிகூட கண்ணால் கண்டவனல்ல.

சென்னையில் அவனுக்கு அநேக நண்பர்களிருந்தும் அவனை இப்பொழுது ஒருவரும் லக்ஷியம் செய்யவில்லை. ஒரு மூலை முடுக்குகள்விடாமல் ஆராய்ந்தும் அவன் தேடிய ஆசாமி கிடைக்கவில்லை. பிராட்வே முனையில் நின்றுகொண்டு சில்லரை சாமான்கள் விற்றுக்கொண்டிருந்த அவன் போவோர் வருவோரையெல்லாம் ஆறுமாத காலமாகக் கூர்ந்து கவனித்து அவனது கண்கள் பூத்துப்போயின. ஜெயராமைப் போன்ற முகஜாடையுள்ளவர்களை சில சமயம் மண்ணடி வரையில் துரத்தியிருக்கிறான். ஆனால் ஜெயராம் போனவர் போனவரே.

நாட்கள் மாதங்களாகி ஓடி மறைந்தன. சில்லரை வியாபாரத்தில் கைதேர்ந்தவனாகிவிட்டான் சம்பந்தம். வெயிலும், கானலும், மழையும், பனியும் அவனுக்கு ஸகஜமாகிவிட்டன. முன்போலல்லாமல், மணிக்கணக்காக நின்றாலும் அவனது கால்கள் கடுக்கவில்லை.

ஆனால் சதா அவன் மனக்கண்முன் தான் ஜெயராமைப் பார்க்கும்போது ஏற்படப்போகும் ஒரு காக்ஷியைச் சிந்தித்துக்கொண்டிருந்தான். ''என்றைக்கிருந்தாலும் அப்[illegible] இவ்வழியே வர வேண்டும். அப்பொழுது எப்படியும் அவனைப் பிடித்து அவனிருப்பிடத்தை அறிந்துகொள்வேன். என் பொருளை, என்னை அநியாயமாய் ஒழிக்கக் காரணமாயிருந்த அப்பொருளை என்னிடம் சேர்ப்பித்தாலன்றி அவனைக் கொலை செய்வேன். பழி வாங்குவேன்'' என அவன் மனம் சதா யோசனை செய்துகொண்டிருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக ஒரு வருஷமும் ஓடி மறைந்தது. தற்செயலாய் அவனிடம் கிடைத்த ஒரு தினசரியில் இருந்த ஓர் படத்தைப் பார்த்ததும் அவன் மனம் பிளந்து விடும்போலாகி விட்டது. அப்படத்தின் அடியில், ''ஸ்ரீமான் ராமானுஜம். மைசூரைச் சேர்ந்த இவர் தென்னிந்தியக் கோயில் ஒன்றுக்கு ரூ. 1000 நன்கொடையளித்திருக்கிறார். சீக்கிரம் சென்னைக்கும் வந்து அங்கே பலவித நிதிகளைப் பார்வையிட்டபின் பொருளுதவி செய்வாரெனத் தெரிகிறது''

பெயரென்னவோ ராமானுஜமென்றாலும், படம் ஜெயராமுடையதே எனத் தெரிந்துகொண்டான் சம்பந்தம். கடைசி வாக்யம் அவனுக்குப் பெரிதும் ஆறுதலளித்தது. ''எப்படியும் இங்கு வருவான். என்னை மறுதரம் நிச்சயம் பழிவாங்குவேன்'' என உறுப்போட்டுக்கொண்டேயிருந்தான். அவனது மனம் பதறியது.

அவன் படத்தைப் பார்த்த பிறகு பதினைந்து நாட்கள் கழித்துத் தனது இடத்திலிருந்தே சம்பந்தம் தனது வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். திடீரென எதிர்த்தாற்போல் இடிபோன்ற சத்தத்துடன் தீப்பொறிகள் பறந்தன. டிராம் வண்டியில் மோதப்பட்ட கார் சுக்கலாகப் பக்கங்களில் தெறித்து விழுந்தன. காரிலுள்ள மனிதர் உடனே கொல்லப்பட்டுவிட்டார். ஜனங்கள் ஓட்டமும் நடையுமாக ஆபத்து நேர்ந்த இடத்திற்கு ஓடினர். சம்பந்தம் கையில் தட்டுடன் தானும் ஒருவனாகக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டான்.

ஆனால் கிட்டத்தில் சென்று இறந்துகிடந்த மனிதரைக் கண்டவுடன் அவனது தட்டு ஆகாயத்தில் பறந்தது.

''ஆகா! ஜெயராம்! படுபாவி! என்னை முற்றும் கெடுத்த உன்னைத் தெய்வதண்டனை விடவில்லை ஆனால் இதோ நானும் விடவில்லை'' என்று கையில் பிடித்திருந்த கத்தியால் ஜெயராமின் சவத்தின் மார்பில் ஆழக் குத்திவிட்டான்.

மறுபடி ''தெய்வதண்டனை'' என்ற ஒரு பெரிய கூச்சல் ஒரு பர்லாங்கு தூரத்திற் கப்பால் கேட்டது.







சந்தன வாசனையைக் கலப்பதில் நாம் உபயோகிக்கும் முக்கியமான எண்ணெய்களிலெல்லாம் ஆரோக்கியமூட்டும் சாக்குகள் நிறைந்துள்ளன. மைசூர் சந்தன ஸோப்பு குழந்தைகளின் துல்லிய சருமத்திற்கு கந்தவை. கல்வியிற் சிறந்த பல்லாயிரக் கணக்கான இந்தியத் தாய்மார்கள் இதை அனுபவத்தில் அறிந்திருக்கிறார்கள்.

எங்கும் கிடைக்கும்

**கவர்ன்மெண்ட் ஸோப்பு தொழிற்சாலை,**

**பெங்களூர்.**

**தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!**

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்தமடையுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | ,, 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, 0—8—0 |
| 4. | பகவத் கீதை | ,, 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | ,, 0--10—0 |
| | ,, ,, 2 மாதர் | ,, 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, 0—8—0 |
| | ,, ,, 4 சமூகம | ,, 0--12—0 |

**6. Bharathi and his works**
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

# கெற்ப சஞ்சீவி எண்ணை.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

**குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்**

பழனி வைத்திய ஆசிரியர்

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

சித்த வைத்திய சாலை,
146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

**தலைமை ஆபீஸ், பழனி**

நமது புதிய தொடர் கதை

# ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள்

(ஸ்ரீமான் வ. தே. வரதன் எழுதியது)



**முன் கதைச் சுருக்கம்.**

தவமணி, சக்ரபாணி முதலியாரின் குமாரன். முதலியார் இறக்குந்தருவாயில் தம் நண்பர் வேலாயுத முதலியாரிடம் தவமணியையும் தமது திரண்ட சொத்துக்களையும் ஒப்புவித்தார். பிற்காலத்தில் வேலாயுத முதலியார் சொத்துக்களை எடுத்துக்கொண்டு தவமணி வீட்டை விட்டுச் செல்லும்படிச் செய்துவிட்டார். ஒரு கனவான் ஒரு நாள் தவமணியை மிகவும் கஷ்ட நிலைமையில் கண்டு அவனைப் பராமரித்து வருகிறார்.

ஜம்புலிங்கம் என்பவன் பல கொள்ளைகள் நடத்தி வருகிறான். அவனைப் பிடிப்பது சம்பந்தமாகப் போலீஸ் டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையும் யோசிக்கின்றனர். ஆனால் தன் விஷயங்களில் பிரவேசிக்கவேண்டாமென்று ஜம்புலிங்கம் ஒரு கடிதம் எழுதுகிறான். வேலாயுத முதலியார் தமக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்ததற்காக ஒரு விருந்து நடத்துகிறார் அதற்கு ஜம்புலிங்கம் ஜாலவித்தை காட்டுபவனாகச் சென்று வேலாயுத முதலியார் மனைவியின் ஏராளமான பெறுமானமுடைய நகைகளை துப்பாக்கி முனையில் எடுத்துச் செல்லுகிறான்.

காஸ்மோபாலிடன் கிளப்பில் டெபுடி கமிஷனர் தமது நண்பருடன் ஜம்புலிங்கத்தின் செய்கைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார்!

## IV

இரண்டு நாட்கள் சென்றன. இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளை, கமிஷனர் ஆபீஸில், டெபுடி கமிஷனரது அறைக்கு அடுத்தாற்போலுள்ள தனது அறையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். உள்ளே ஒரு ஆர்டர்லி வந்து 'எஜமான்' டெலிபோனில் கூப்பிட்ராங்க' என்றான். இன்ஸ்பெக்டர் எழுந்து டெபுடி கமிஷனரது அறைக்குச் சென்று இரண்டொரு நிமிஷம் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார். பின்பு வெளியேவந்து, "டேய் 115! இன்ஸ்பெக்டர் ராம்ஸிங்கைக் கூப்பிடு" என்றார். இன்ஸ்பெக்டர் ராம்ஸிங் "என்னைக் கூப்பிட்டீராமே" என்று சொல்லிக்கொண்டே சொக்கலிங்கம் பிள்ளையிடம்வந்தார்.

"ஆம்! புலி கூப்பிட்டது" என்றார். 'புலி' என்பது கிருஷ்ணசாமி நாயுடுவை சங்கேதமாகக் குறிக்கும் பேர். ராம்ஸிங் தன் உடையைச் சரிப்படுத்திக்கொண்டு வெளியே செல்ல யத்தனித்தார்.

சொக்க:—அங்கில்லை.

ராம்:—உம்—பின் எங்கிருக்கிறார்?

சொக்க:—காஸ்மாபாலிட்டனில்.

ராம்:—ஏது! புலிக்கு குஷி பிறந்துவிட்டதா!

சொக்க:—அவர் டெலிபோனில் பேசியதைக் கேட்க அப்படி யிருக்காதென்று நினைக்கிறேன். ஏதோ முக்கியமான வேலையாகத்தான் நம்மைக் கூப்பிட்டிருக்கவேண்டும். டெலிபோனில் கூப்பிடுகிறார் என்று ஆர்டர்லி சொன்னான். போய் டெலிபோனைக் கையிலெடுத்தேன் 'யார் அது? சொக்கலிங்கமா? சரி, சீக்கிரம் ராம்ஸிங்கை அழைத்துக்கொண்டு கிளப்பிற்கு வாரும். கேட்டதா? சீக்கிரம்!' என்றார்.

ராம்:—ஆனால், வாரும் போகலாம்.

இருவரும் வெளியே வந்து பத்தடி தூரம் சென்றிருப்பார்கள். ஒரு சேவகன் இவர்கள் பின்னால் ஓடிவந்து, "இப்பொழுதுதான் இது ஒரு ஆள்வசமாய் வந்தது" என்று ஒரு கடிதத்தைச் சொக்கலிங்கம் பிள்ளையிடம் கொடுத்தான். சொக்கலிங்கம் பிள்ளை அதை வாங்கிப் படித்துவிட்டு, "நாம் இப்பொழுது கிளப்புக்குப் போக வேண்டியதில்லை. இதைப் பாரும்" என்று கடிதத்தை ராம்ஸிங்கிடம் கொடுத்தார். அதில், "ஏற்பாட்டை மாற்ற வேண்டியதாயிற்று. நேராய் என் பங்களாவிற்கு வாருங்கள் சீக்கிரம்" என்றிருந்தது. ராம்ஸிங் கடிதத்தின் கையெழுத்தைக் கவனித்தான். தங்கள் டெபுடிகமிஷனருடையதே!

ராம்:—ஆச்சரியமா யிருக்கிறதே!

சொக்:—எது ஆச்சரியமா யிருக்கிறது?

ராம்:—[சேவகனைப் பார்த்து சரி நீ போ.] புது மாதிரியா யிருக்கிறதே!

சொக்:—ஆச்சரியம்! புது மாதிரி! என்ன விடுகதையா போடுகிறீர்?

ராம்:—[கடிதத்தினடியில் கையொப்பம் வைத்திருந்த இரண்டெழுத்துக்களைக் காண்பித்து] இதைத் தான் சொன்னேன்.

சொக்:—சில சமயங்களில், நீர் மகா பிடிவாதக்காரரா யிருக்கிறீர். விஷயத்தை வெளிப்படையாய்ச் சொல்ல மாட்டேனென்கிறீரே.

ராம்:—இதைவிட இன்னும் எப்படிச் சொல்ல வேண்டும்? இதுவரை அவர் லெட்டர் எழுதினால், அடியில் தன் முழுப் பெயரையும் கை யொப்பம் வைப்பாரே யொழிய இப்படி தன் பெயரின் முதல் இரண்டெழுத்துக்களைமட்டும் ஒப்பம் வைத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

சொக்கலிங்கம் பிள்ளை தன்னால் கூடியவரை இதற்குமுன், டெபுடி கமிஷனர் எந்தக் கடிதத்திலாவது, தன் பெயரின் முதல் இரண்டு அக்ஷரங்களை ஒப்பம் வைத்திருக்கிறாரா என்று ஞாபகப்படுத்திப் பார்த்தார். அப்படி ஒன்றும் செய்திருப்பதாகத் தன் ஞாபகத்திற்கு வரவில்லை.

சொக்:— அப்படியானால்—இந்தக் கடிதம் அவர் எழுதவில்லை என்றெண்ணுகிறீரா?

ராம்:—கையெழுத்து அவருடையது போலத்தானிருக்கிறது.

சொக்:—இது அவருடைய கையெழுத்தேதான். அதிற் சந்தேகமே யில்லை.

அந்த வழியே வந்துகொண்டிருந்த ஓர் காலி வாடகை மோட்டாரை நிறுத்தும்படி சைகை செய்தார். மோட்டார் நின்றது.

"உம். வண்டியில் ஏறுங்களேன். நேரமாகிறதே, அவர் கோபித்துக் கொள்ளப்போகிறார்" என்றார். ராம்ஸிங்

அதைக் காதிற் போட்டுக் கொள்ளாமல் நின்றுகொண்டு என்னவோ யோசித்துக் கொண்டிருந்தார்.

சொக்:—ஏன் நிற்கிறீர்கள்? நேரமாகவில்லையா?

ராம்:—நீங்கள் வேண்டுமானால் போங்கள். நான் கிளப்புக்குப் போகிறேன்

சொக்:—கிளப்புக்கா?

ராம்:—ஆம்.

சொக்:—உமக்கென்ன ஒன்றும் புரியவில்லையா?

ராம்:—நான் யோசித்துத்தான் சொல்கிறேன்.

சொக்:—அவர் கோபித்துக் கொள்ளமாட்டாரா?

ராம்:— கோபித்துக்கொண்டாலும் பாதகமல்லை.

சொக்:—உம்மை எங்கே யென்று கேட்டால்—?

ராம்:—நாம் பேசிக்கொண்டதைச் சொல்லி, கிளப்புக்குப் போவதாகச் சொல்லும்.

சொக்:—சரி. எழும்பூருக்கு ஓட்டு. [தனக்குள்ளேயே] மனிதன் மகா சண்டி!

வண்டி புறப்பட்டுச் சென்றது. ராம்ஸிங் சற்றுநேரம் சொக்கலிங்கம் பிள்ளை ஏறிச் சென்ற வண்டியையே கவனித்துக்கொண்டிருந்தார். அவ்வழியே "ஹாரிஸ் பிரிட்ஜு"க்குச் செல்லும் பஸ் ஒன்று வர, அதிலேறி, காஸ்மாபாலிட்டன் கிளப்பையடைந்தார். சொக்கலிங்கம் பிள்ளையிடம் மட்டும் கண்டிப்பாய் தான் கிளப்பிற்குப் போவதாகக்கூறி விட்டாரேயொழிய மனதில் தான் செய்வது பிசகாயிருக்குமோ என்ற சந்தேகங்கிளம்பி வாட்டியது. "நாம் எண்ணியது சரியாயிருக்குமா? சரியாயிருந்தால் சொக்கலிங்கம் பிள்ளை எந்தவிதமான ஆபத்திற்குள்ளாவாரோ. ஒருவேளை நாம் எண்ணியது பிசகாயிருக்குமானால் புலியின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமே! பெரிய தர்ம சங்கடமாகவல்லவோயிருக்கிறது" என்று எண்ணமிட்டுக்கொண்டே, கிளப்பையடைந்து அங்கிருந்த ஓர் வேலைக்காரனை "எஜமான் உள்ளே யிருக்கிறாரா?" என்றான்.

வேலை:—இல்லெலங்களே.

ராம:—இல்லையா!

வேலை:—இல்லெங்கெ. இப்பதான் வெளியே போனார்.

ராம்ஸிங்கின் மனம் 'பகீர்' என்று திகிற்பட்டது. ஒரு க்ஷணமும் தாமதிக்காமல் அவரது பங்களாவிற்குச் செல்லத் திரும்பினார். அதற்குள் அவர் மனதில் ஒரு சந்தேகந் தோன்றவே, மறுபடியும் திரும்பி அவனைக் கூப்பிட்டு, "நீ போலீஸ் டெபுடி கமிஷனர் ஐயாவைத்தானே சொன்னாய்?" என்றார்.

வேலை:—என்னுங்க, நம்பளைத் தெரியாதுங்களா. அவுங்க இல்லீங்க.

ராம்:—இப்பொழுது தானா போனார்?



"கிருஷ்ணசாமி நாயுடுவின் பார்வை மோட்டார் ஓட்டியின்மீது சென்றது. அவனுடைய தோற்றத்தில் ஏதோ மாறுதலைக் கண்டார்."

வேலை:—அவுங்க போய் எல்லாம்—ரெண்டு நிமிசம்போலே இருக்கும்.

ராம்ஸிங்கின் மூளை பரபரவென்று வேலை செய்யவாரம்பித்தது. அக்கடிதம் எழுதப்பட்ட காயிதம் என்னமோ டிபுடி கமிஷனருடையதுதான். அவருடைய பெயரும் விலாஸமும் அச்சடித்திருந்தது. அதிற் சந்தேகமேயில்லை. வேலைக்காரன், கமிஷனர் இரண்டு நிமிஷங்களுக்கு முன்புதான் வெளியே சென்றதாகச் சொல்லுகிறான். ஆகையால் அக்கடிதத்தை அவர் இங்குதான் எழுதியிருக்கவேண்டும். இந்தக் கிளப்பின் பெயர் அச்சடித்த கடிதத்தில் அவ்விரண்டு வரிகளை எழுதாமல், தன்னுடைய பெயர் அச்சடித்தகாயிதத்தில் எழுதியிருப்பாரா என்றுதான் சந்தேகமாயிருக்கிறது. என்று யோசித்து வேலைக்காரனை நோக்கி "டெலிபோன் எந்த அறையிலிருக்கிறது?" என்று கேட்டார். அவன் அவரை டெலிபோன் இருந்த அறைக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டுச் சென்றான். டெலிபோனை யெடுத்து கமிஷனர் ஆபிசைக் கூப்பிட்டார். யார் அது? சரி! சப் இன்ஸ்பெக்டர்குருராவைக் கூப்பிடு" என்றார். சற்றுப் பொறுத்து, குருராவ் டெலிபோனண்டையில் வந்ததையறிந்து, யார்? குருராவா? சரி, இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம்பிள்ளை டெபுடி கமிஷனரின் பங்களாவுக்குச் செல்வதாய்ச் சென்றார்; அவர் ஏறிச் சென்றடாக்ஸியின்நெ எம். சி. 5238 அல்லது 5233 சரியாகத் தெரியவில்லை. அதைத்தொடர்ந்து போய், சங்கதியை ஆபீசுக்கு ரிப்போர்ட்செய்யும—என்ன?—இதோ வருகிறேன்" என்று டெலிபோனை வைத்துவிட்டு வெளியே சென்றார்.

"எல்லாம் அதிசயமாகயிருக்கிறதே!" என்று யோசித்துக்கொண்டே பஸ் நிற்குமிடம் வந்தார், தயாராய் புறப்படக் கூடிய பஸ் ஒன்றுமில்லை. 'புதுப்பேட்டைக்குள் நுழைந்துசென்றால் சீக்கிரம் சென்றுவிடலாம்' என்று கால் நடையாகவே 'ஹாரிஸ் ரோட்' வழியாகச் செல்லலானார். நல்ல காலம்! சொக்கலிங்கம்பிள்ளை ஏறிச்சென்ற வண்டியின் நம்பரை சுமாராகவாவது கவனிக்க நேரிட்டது. டெபுடி கமிஷனர் தங்களை அவசரமாக வரும்படிக்குச் சொல்லிவிட்டு, நாம் வருவதற்குள் புறப்பட்டுப் போகும்படியான வேலை என்னவாயிருக்கலாம்? சொக்கலிங்கம்பிள்ளை கிருஷ்ணஸ்வாமி நாயுடுவே நேரில் டெலிபோன் செய்ததாகச் சொன்னாரே. ஏன்? கடிதங்கூட அவர் கையெழுத்துதான் என்று சொன்னார். அதுபோல டெலிபோனில் கேட்ட குரலும்—ஆ! அப்படித்தானிருக்க வேண்டும். டெலிபோனில் பேசியது கூட அவராயிராது என்று நினைக்கிறேன். டெலிபோனில் சில சமயங்களில் குரல் மாறிக் கேட்கிறது. ஆகையால் வேறு யாரேனும் அவர் மாதிரி குரலை மாற்றிப் பேசியிருக்கலாம். அடடா! இப்பொழுது சீமையில் புதிதாகக் கண்டு பிடித்திருக்கப்பட்ட டெலிபோனில் பேசுகிற ஆளின் உருவம் கூட தெரியும் என்று பத்திரிகைகளில் வந்ததே. அதுபோலிங்கிருந்தால் பேசியவரைச்சுலபமாகக் கண்டு கொள்ளலாம். ஏமாற நேரிடாது. கிருஷ்ணசாமி நாயுடுவைப் போலப் பேசியது யாராயிருக்கலாம்? ஆ!—ஆமப்படித்தானிருக்கும். அவன்தான்!' என்று யோசித்துக் கொண்டே போய்க்கொண்டிருக்கும்பொழுது, தன்னைத் தாண்டி ஓர் மோட்டார் சென்று தனக்குமுன் ஓர் வீட்டின் வாயிலில் நிறுத்தப்பட்டது. அதனுள்ளிருந்து ஒரு மனிதன், அவசரமாக இறங்கி, தன்னை ஒருவரும் கண்டு கொள்ளக்கூடாதென்ற எண்ணமுடையவன்போல, அவ்வீட்டினுள் சட்டென்று நுழைந்துவிட்டான். அந்த சமயம், ராம்ஸிங் ஜம்புலிங்கத்தைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்ததனாலோ, அல்லது வேறெதனாலோ. உள்ளே நுழைந்த அம்மனிதன் செய்கையில் இவருக்கு சந்தேகம் தோன்றியது. அதைச் சற்று கவனிக்க வேண்டும் என்று உறுதி செய்துகொண்டு, அவ்வீட்டுப் படியின்மீது ஒரு காலை வைக்கும் போதே உள்ளிருந்து ஒரு ஸ்திரீ மிகப்பரிதாபமான குரலில் 'ஐயோ!' என்று அலறும் சப்தம் கேட்டது. உடனே வெகு துரிதமாய் உள்ளே ஓடினார். உள் வாயிற்படியைத் தாண்டியதுதான் இவருக்குத் தெரியும். மறு விநாடி தன் தலைமீது ஒரு பலமான அடி விழுந்தது. தலை சுற்றி, மூர்ச்சையிழந்து, அடியற்ற மரம்போல தரையிற் சாய்ந்தார்.

(33-ம் பக்கம் பார்க்க)

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம் எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.




## த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

['சுதேச மித்திரன்' வாரப்பதிப்பில் சுமார் ஆறரை வருஷங்களாக இந்த ஸங்கீதப் பகுதியை கீர்த்தனாசார்ய, அபிநவ த்யாகப்ரம்ஹம், ஸ்ரீமான், ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ. அவர்கள் திறம்பட நடத்திவந்ததை நேயர்கள் அறிவர். நமது துரதிர்ஷ்ட வசத்தினால் அப்பெரியார் காலமாய் விட்டார். அதனால் ஸங்கீதப் பகுதியை மேற்கொண்டு நடத்தி வரும்படி 'மித்திரன்' ஆசிரியர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். இதற்குக் காரணம், நான் மேற்கூறிய பெரியாரைப் போன்ற அபார யோக்யதையை யுடையவனென்பதன்று; அவரோடு ஒரே சலாசாலையில் ஆசிரியனாக அமர்ந்த கால முதல் வெகு காலமாக நெருங்கிப் பழகியதாலும், கீர்த்தனாதிகளைச் சேகரிக்கும் பணியில் அவருக்கு உதவியதாலும், அவற்றின் பரிசிலனை முதலியவற்றில் ஈடுபட்டிருந்ததனாலும், அவருடைய மனோபாவங்களை நான் உணர்ந்திருக்கக் கூடுமென்று 'மித்திரன்' ஆசிரியர் கருதுவதாலுமே அவர் இப்பெரும்பணியை நடத்தி வரும்படி என்னை ஆஞ்ஞாபித்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். கீர்த்தனாசார்யர் செய்துவந்த பணியின் தொடர்ச்சியை நான் செய்வதென்பது கஷ்ட சாத்தியமான காரியம். எனினும் அவருடைய ஆசீர்வாத பலத்தை முன்னிட்டும், மித்திரன் ஆசிரியருடைய விசுவாஸ பலத்தை முன்னிட்டும் இதனை மேற்கொண்டுள்ளேன். ஆதலின், இப்பகுதியின் அபிவிருத்தி, திருத்தங்கள் முதலியவற்றைக் குறித்து நண்பர்கள் ஏதேனும் எனக்கு அவ்வப்போது தெரிவிப்பார்களாயின், அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவனாயிருப்பேன்.—P. B. ஸ்ரீ.]

I

பல்லவி

கிரிராஜஸுதா தநய! ஸதய! (கிரி)

அனுபல்லவி

ஸுரநாத முகார்ச்சித பாதயுக!
பரிபாலயமாம், இபராஜ முக! (கிரி)

சரணம்

கண நாத! பராத்பர! சங்கரா—
—கம வாரிநிதி ரஜனீகர!
பணிராஜ கங்கண! விக்ந நிவா—
—ரண! சாம்பவ! ஸ்ரீ த்யாகராஜநுத! (கிரி)

II

| | |
|---|---|
| கிரிராஜ ஸுதா தநய | —மலையரசன் பெண்ணான பார்வதியின் புத்ரரே! |
| ஸதய | —தயையோடு கூடியவரே! |
| ஸுரநாத முகார்ச்சித பாதயுக | —தேவேந்திராதிகளால் பூஜிக்கப்பட்ட இரு பாதங்களையுடையவரே! |
| இபராஜ முக | —அரச யானையினுடையதைப்போன்ற முகத்தை யுடையவரே! |
| கண நாத | —சிவகணங்களுக்குத் தலைவரே! |
| பராத்பர | —எல்லாங் கடந்த பரம்பொருளே! |
| சங்கராகம வாரிநிதி ரஜனீகர | —சிவாகமங்களாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவரே! |
| பணிராஜ கங்கண | —ஸர்ப்பராஜனைக் கங்கணமாக அணிந்தவரே! |
| விக்ந நிவாரண | —இடையூறுகளைப் போக்குபவரே! |
| சாம்பவ | —சம்பு குமாரரே! |
| ஸ்ரீ த்யாகராஜனுத | —ஸ்ரீ த்யாகராஜனால் கொண்டாடப்பட்டவரே! |
| மாம் பரிபாலய | —என்னைக் காப்பாற்றும். |

III

ஸ்வாமிகளின் கீர்த்தனைகளைத் தொடர்ச்சியாக வெளியிடுவதில் விக்னேச்வரருடைய அருளை முன்னிட்டு இந்த இதழில் அவரைப்பற்றிய ஸ்தோத்ரமொன்றை வெளியிடுகிறேன். பிறகு ஸ்வாமிகளைப்பற்றி அவருடைய ப்ரிய சிஷ்யர்களுள் ஒருவரான திருவொற்றியூர் வீணை குப்பையர் என்ற மஹானுபாவர் செய்த ஸ்தோத்ரக் கீர்த்தனையொன்றை வெளியிடுவேன். அதன் பிறகு ஸ்வாமிகளின் கீர்த்தனைகள் தொடர்ச்சியாக வெளிவரும்.

இபராஜமுக:—இதற்கு இபமுகன், ராஜமுகன, என்று இருவிதமாக அர்த்தம் பண்ணுவதுமுண்டு. யானை முகத்தையுடையவர், சந்திரனைப்போன்ற முகத்தையுடையவர்என்று அர்த்தம்.

சங்கராகம வாரிநிதி ரஜனீகர:—மேலே ப்ரதிபதத்தில் கொடுக்கப்பட்டிருப்பதுபோலல்லாமல், சங்கர-பக்தர்களுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுபவரே! ஆகமவாரிநிதி ரஜனீகர—ஆகமங்களாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன்போன்றவரே என்றும் சிலர் அர்த்தம் கூறுகிறார்கள்.

பணிராஜ கங்கண:—சிவபெருமானுடைய திருக்குமாரராதலால், அவருக்குரிய சின்னங்கள் இவருக்கும் உண்டு. ஆகையால் விநாயகரும் "பணிராஜ கங்கண" முடையவரானார்.

(12-ம் பக்கம் பார்க்க).

# வெகு நேரம் பாடும் Broadcast வெகு அருமை யாகப் பாடும்

ஒவ்வொரு பிராட்காஸ்ட் வெளியீடையும் மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கும் பிராட்காஸ்ட் நேயர்களுக்கோர் விண்ணப்பம். அஃது யாதெனில், எங்களால் ஆயிரக்கணக்காக விற்கப் பட்ட சில ரிகார்டுகளைக் கீழ் கூறுவோம். அவைகளின் சுவை நீங்கள் நேரில் கேட்டு வாங்கி அனுபவிக்கவும்.

சோக்கலிங்க பாகவதர்



B. 2030

{ தென்றல் கடலோரன் —ஷ பிரியா
{ மாமயிலே மடமானே —பைரவி

இந்த ரிகார்டு சங்கீத கியானச் சுவை முற்றும் பெற்றது. இவரது மற்ற ரிகார்டுகள்

R. E. 4029 B.N. 2120 B. E. 2323

மிஸ் கண்ணுமணி

இச்சினிமா ஹாஸ்ய நடிகர் உங்கள் விலா எலும்பு முறியும்படி சிரிக்கச் செய்வார்.



R. E. 4082

{ மாமனுக்கு எந்தன் —காமிக்
{ கண்டி குடியிருப்பு —காமிக்

B. 2108 — R. E. 4027

சங்கீத வித்வான்

## விளாத்திகுளம் ஸ்வாமிகள்

ஒரு ராகத்தை எடுத்துக்கொண்டால் அதை பல நாட்கள் பாட இவரில்லாது வேறு எவராலும் பாட முடியாது. இதனை இவ் ரிகார்டில் கேளுங்கள்.



B. T 2357 { ராக ஆலாபனை பாகம் 1 & 2 —கரஹரப்ரியா

சங்கீத வித்வான்

சுப்பய்ய பாகவதர்



இந்நாடக திலகம்

கோவலன் — லலிதாங்கி
இந்நாடக பகுதியில் சில தர்க்கங்கள்

மிஸ் M. S விஜயாள்

இச்சினிமா மாது



இவர்களது தர்க்கமாகுமிது.

பழூன் ஷண்முகம்



B. 2371

{ கட்டபொம்மை —தர்க்கம்
{ சொன்னபடி கேட்டும் —காமிக்

B. 2321—B. 2029—B: 2042

மிஸ் ரத்தினம்பாள்



B. N. 2080

{ தாய்நாட்டுக்கே —பிலஹரி
{ எந்தவிதமாய் —கலியாணி

இம்மாதின் ரிகார்டு கேட்க நல்ல தருணம் பிராட்காஸ்டால் வாய்த்திருப்பது சங்கீத உலகத்திற்கு ஓர் நன்மையாகும்.

## தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,

167, மவுண்ட் ரோட், மதராஸ்.

ஏஜன்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை. ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கு மேற் குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்.

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பினங், சிங்கப்பூர்.

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜேம்ஸ் ஸ்டோர்ஸ், 167, மவுண்ட்ரோட், மதராஸ்.

விக்ந நிவாரண:—ஸகல கார்யங்களையும் தொடங்கும்போது விக்னேசுவரரைக்கோரித் துதித்தபின்பு தொடங்கினல் அவை முட்டின்றி முடியுமென்பது ஆன்ருேர் கொள்கை. தம்மைப் பூஜிக்காமல் தொடங்குவோருடைய காரியங்களுக்கு விக்னத்தை யுண்டுபண்ணுபவராகையால் விக்னேசுவரரென்று திருநாமம் பெற்ருரென்று ஒரு சுலோகமும் வழங்கி வருகிறது.

[ஸ்வாமிகள் செய்தருளிய சுத்த ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகளில் இஃது ஒன்று. இந்தக் கீர்த்தனையை முதலில் இயற்றி, விக்னேசுவரருடைய அனுக்ரஹத்தைப் பெற்றுப்பின்பு "நின்னேபஜன" என்ற கீர்த்தனையும் "ஜகதாநந்தகாரக" முதலான பஞ்சரத்னக் கீர்த்தனைகளையும் இயற்றினரென்றும், அதன் பிறகு பலப்பல ராகங்களிலும் நவம் நவமான வர்ணமெட்டுக்களிலும் கீர்த்தனைகளை இயற்றலானர் என்றும் தி. நாஸிம்ஹ பாகவதரவர்களுடைய பதிப்பில், ஸ்வாமியின் சரித்ரச் சுருக்கத்தில் 6-வது பக்கத்தில் முதல் பத்து வரிகளிலும், வாலாஜாபேட்டை சிஷ்ய பரம்பரையினர் ஸஹாயத்தைக் கொண்டு எம். ஆதி அண்டு கம்பெனியாரால் 1916-ம் வருஷத்தில் பதிப்பிக்கப்பட்ட "ஸ்ரீ த்யாகராஜ கீர்த்தனைகள்" என்ற கிரந்தத்தில் காணப்படும் சரித்திரச் சுருக்கத்தில் 2-வது பக்கத்தில் 5-வது முதல் 14-வது வரையிலுள்ள வரிகளிலும் விருத்தாந்தம் காணப்படுகிறது. (இதன் பிறகு ஸ்வாமிகள் 24,000 கீர்த்தனைகளில் ஸ்ரீராமபிரானுடைய கல்யாண குணங்களை விஸ்தரித்துப் பாட முற்பட்டாரென்று கூறப்படுகிறது.) அன்றியும், ஸ்வாமிகள் முதன் முதலில் சுத்த ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகளையும், பிறகு ஸம்ஸ்க்ருதமும் தெலுங்கும் கலந்த கீர்த்தனைகளையும் கடைசியில்தான் சுத்தத் தெலுங்குக் கீர்த்தனைகளையும் இயற்றினரென்று காலஞ்சென்ற கீர்த்தனுசார்யர், "மித்திரன்" வாரப்பதிப்பு 1933ஷ ஜனவரிமீ 1உ வெளியான இதழில், 1514 இலக்கமிட்ட பக்கத்தில் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிருர். இவற்றைக் கவனிக்கும்போது "கிரிராஜஸுதா தநய" என்ற கீர்த்தனையே முதன் முதலாகப் பாடப்பட்டதாகுமென்று அறியக் கிடக்கிறது. ஆனல், சிலர், ஸ்வாமிகள் ஸ்ரீராம தாரக மந்த்ரத்தை 96 கோடி முறை ஜபித்த பின்பு ஸ்ரீராமன் தரிசனம்தந்த காலத்தில் முதன் முதலாக "ஏல நீதயராது" என்ற அற்புதமான கீர்த்தனத்தைப் பாடினரென்று கூறுகிருர்கள்.]

72 மேள கர்த்தா முறைப்படி, இந்த ராகம் 28-வது ஹரிகாம்போஜியில் ஜன்யம் ஆஸரி கமபமரிபஸ—ஸ்நிதபமரிகரிஸ—என்ற நடையை யுடையது. 29-வது சங்கராபரணத்தில் ஜன்யமென்றும், ஸரிகமபமரிபஸ்—ஸ்நிபமரிகரிஸ என்ற நடையுடையதென்றும் சிலர் அபிப்பிராயம்.

IV

பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | ரீபாமா ; | ரீ | காரீ ; | ஸா | ஸநிஸா ; | ரிக |
| ; ; ; * | கிரிரா ; | ஜ | ஸுதா ; | த | ந ய ; | ஸ |
| மபமா ; * | பமரிகமா ; | ரீ | காரீ ; | ஸரி | ஸநிபா ; | ரீ |
| த. ய ; * | கி. ரி. ரா ; | ஜ | ஸுதா ; | த | ந. ய ; | ஸ |
| ஸரிகமபா * | பமரிகமா ; | ரீ | காரீ ; | ஸரி | கரிஸநிபா ; | ரீ |
| த. ய. * | கி. ரி. ரா ; | ஜ | ஸுதா ; | த | ந. ய ; | ஸ |
| ஸரிகமபா * | ரீபாமா ; | ரீ | காரீ ; | ஸரி | காஸா ; ; | |
| த. ய. * | கிரிரா ; | ஜ | ஸுதா ; | த | நய ; ; | |

அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | பாஸாரீ ; | ரீ | ஸ்ரிக்ா ; | ரிக் | ம்ாரீ ; | க்ா |
| ; ; ; * | ஸுரநா ; | த | முகார் ; | ச்சி. | தபா; | த |
| க்ரிஸ்ா ; * | ஸ்ரிஸ்நிபா ; | மா | ரீபா ; | ஸ்ரி | க்ரி-ஸ்ரிஸ்நி | ஸ்ரி |
| யு. க ; * | ப. ரி. பா ; | ல | யமாம் ; | இ | ப-ரா | ஜ |
| ஸ்நி-பநிபம * | | | | | | |
| மு. க. * | (கிரிராஜ ஸுதா தநயா) | | | | | |

சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | பாபாபா ; | பா | ரீஸா ; | ஸ்ரி | ஸ்நி-ஸநிபம | ரீ |
| ; ; ; * | கணநா ; | த | பராத் ; | ப | ர-சங். | க |
| காரீ ; * | ஸாரீ-கமபா | ம" | ரீபா ; | ஸ்நி | பாமா ; | ரீ |
| ரா. ; * | மக-வா. | ரி | நிதி ; | ர | ஜனீ ; | க |
| காரீ ; * | பாஸ்ாரீ ; | ரீ | ஸ்ரிக்ா ; | ரிக் | ம்ாரீ ; | க்ா |
| ரா. ; * | பணிரா ; | ஜ | கங். ; | க | ணவிக் ; | ன |
| க்ரிஸ்ா ; * | ஸ்ரிஸ்ரிபா ; | மா | ரீபா ; | ஸ்ரி | க்ரி-ஸ்ரிஸ்நி | ஸ்ரி |
| நி. வா ; * | ர. ண. சாம் ; | ப | வஸ்ரீ ; | த்ய" | க. ரா | ஜ |
| ஸ்நி-பநிபம * | | | | | | |
| நு—த * | (கிரிராஜ ஸுதா தநய) | | | | | |

ஜகப்பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.
1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8
TRADE MARK
ஏஜண்டுகள் தேவை:—
விலாசம் : ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW


வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாருது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 நய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 டெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு நய லீல்களும் இருக்கிறதெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாருதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.
Sole Agents:-M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்,

வலுவூட்டும் சிறந்த டானிக்
வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்
கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

### ஆசிரியர்

# பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார், எம். ஏ.

(1863—1931)

(கே. எஸ். ஆர்.)



### பிரபல சரித்திராசிரியர்

காலஞ்சென்ற ஆசிரியர் பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் இத்தென்னாட்டில் பிரபல வித்தியாதிகாரியாகப் புகழ்பெற்றவர். இவரது பெயர் பிரதானமாக இந்து சரித்திர கால நிர்ணய சம்பந்தமாகவே முன்னணியில் நின்று வருகின்றபோதிலும், வித்தியாபிவிருத்திக்காக இவர் பெரிதும் உழைத்தவராவார். இவரது திறமை ஆச்சரியகரமானது. இவரது ஆற்றல்கள் அதிசயிக்கத்தக்கவை. இவர் தாம் வாழ்ந்து வந்த காலம் முழுமையும் தமது அறிவை வளர்ப்பதிலேயே நோக்கம் கொண்டு, அதற்கேற்ப உழைத்து வந்தார். ஆகையால் இவரிடம் குடிகொண்டிருந்த விஷய ஞானம் பலரும் போற்றத்தக்கதாகவிருந்தது என்பது இங்கு குறிப்பிடாமலே விளங்கும். பற்பல துறைகளில் பற்பல சமாச்சாரங்களை நன்கு கிரஹித்திருந்தபோதிலும், இவர் தமது ஞானத்தை ஆடம்பரமாக வெளிக்காட்டியது கிடையாது. அறிவாளிக்குரிய உயர் குணங்கள் யாவும் இவரிடம் காணப்பட்டன என்று குறிப்பிடுவது மிகையாகாது. சமயம் சம்பவிக்கும்போது இவர் தமது ஞானத்தைப் பலருக்குப் பயன்படுமாறு உபயோகிப்பார். பொதுவாக அநேகர் ஞானவான்களாகவிருக்கக்கூடும். ஆனால் வெகு சிலர் தான் தங்களது ஞானத்தைப் பிறருக்கு உபயோககரமாகச் செய்யக்கூடியவர்கள். பரந்த ஞானம்படைத்தவர்கள் பலருக்கு பொதுஜன சமூகத்தின் முன்பு பிரசங்கம் புரிவது அசாத்தியமாகவிருக்கின்றது என்பதும் அனுபவபூர்வமாக நாம் அறிந்துள்ள விஷயம். ஆனால் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார் விஷயத்தில் இவருக்கு உபந்நியாஸம் செய்யும் சக்தியும் விசேஷமாக அமைந்திருந்தது. இவ்வாசிரியர் அநேக சந்தர்ப்பங்களில் வெகு கடினமான ஆராய்ச்சி விவரங்களைப்பற்றிப் பேசிய போதும், அவை கேட்பவர்களால் கிரஹிக்கக் கூடியவைகளாகவே இருந்தன என்பது ஏகோபித்த அபிப்பிராயம். சபையோர்களுக்கு இவரது பிரசங்கங்கள் பிரயோஜனகாமான பொழுதுபோக்காக இருந்துவந்தது. இது தவிர இவருக்கு ஆங்கில பாஷையில் விசேஷ நைபுண்ணியம் இருந்தது. ஆகவே இவரது வார்த்தைகள் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு அமைந்து அர்த்தத்தைத் தெளிவாகக் கோஷித்து வந்ததுடன் கேட்போர்களுக்குத் திருப்தியை விளைவித்து வந்தன. இவர் விஷயங்களை எடுத்துக் காட்டுவதும் வெகு அழகாகவிருக்கும். சரித்திராசிரியருக்கு அவசியமான இக்குணாதிசயங்கள் இவரிடம் தாராளமாக அமைந்திருந்தனவாதலால், இவரை மாணவர்கள் யாவரும் விசுவாசத்துடன் நேசித்தனர். மேற்கூறிய வார்த்தைகள் இவரது பெருமையின் ஒரு பகுதியை மட்டும் சுட்டிக்காட்டுகின்றன.

### பிரதி வகுப்புகளிலும் முதல்வர்

ஆசிரியர் பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஒரு உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்தில் 1863-ம் வருஷத்தில் தஞ்சை ஜில்லாவில் பிறந்தார். இவரது ஊரான புள்ளபூதங்குடி ஆழ்வார்கள் பாடல் பெற்ற திவ்விய ஸ்தலங்களுள் ஒன்றாகும். இவரது பிதாவின் பெயர் திருவேங்கடத்தய்யங்கார் என்பதாகும். இவரது பெற்றோர்கள் மிகசாதாரண ஸ்திதியில் இருந்து வந்தவர்கள் எனினும் இவரது வித்தியாப்பியாஸம் சம்பந்தமாக அவர்கள் அக்கரை கொண்டுவந்தனர். ஸ்ரீமான் அய்யங்காருக்கு ஆரம்ப காலத்திலிருந்தே தமது வித்தியாப்யாஸத்தில் விசேஷ உத்ஸாஹமும் ஊக்கமும் இருந்து வந்தது. விஷயங்களை வெகு சுலபமாக சீக்கிரத்தில் கிரஹித்துக் கொள்ளும் சக்தி இவரிடம் அந்நாளிலேயே காணப்பட்டது. பள்ளிக்கூடத்தில் பிரதி வகுப்பிலும் முதல்வராகவிருந்தவர் நம் ஆசிரியர்தான். இவரது வித்தியாப்யாஸம் நாகப்பட்டணத்தில் நடைபெற்றது. ஸெயிண்ட் ஜோஸப் கலாசாலை அதிகாரிகளான பாதிரிகள் இவரது படிப்பிற்குப் பெரிதும் உதவினர். இவர்களுடைய உதவியினால் இவருக்கு உயர்தர வித்யாப்யாஸமும் கிட்டிற்று. 18-வது வயதில் "பி. ஏ" பட்டம் பெற்றுக்கொண்டதுடன் நின்றுவிடாமல் இவர் "எம். ஏ" பரீக்ஷைக்கும் ஆஜராகி, 1884-ம் வருஷத்தில் தேறினார்.

### மாணவர்களின் வித்தியாபி விருத்தியும் க்ஷேமமும் பிரதான நோக்கங்கள்

இவ்வுயர் பட்டம் பெற்றுக்கொண்டவுடன் இவர் திருச்சினாப்பள்ளியில் உள்ள ஸெயிண்ட் ஜோஸப் கலாசாலையில் ஒரு உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவருக்குக் கலாசாலையில் இருந்து வந்த காலத்திலிருந்தே இந்து தேச சரித்திரத்தில் விசேஷ விருப்பம் இருந்து வந்தது. திருச்சினாப்பள்ளியில் இவர் ஐந்து வருஷ காலம்தான் இருந்தார். 1889-ம் ஆண்டில் விசாகப்பட்டணத்திலிருக்கும் ஹிந்து காலேஜின் பிரின்ஸிபாலாக நியமிக்கப்பட்டார். (இக் கலாசாலை இப்போது மிஸஸ் ஏ. வி. என். கலாசாலை என அழைக்கப்பட்டு வருகின்றது) இக்கலாசாலையின் அதிபராக இவர் தமது ஜீவியத்தில் பெருத்த பகுதியைக் கழித்தார். இங்கு இவர் சற்றேறக்குறைய முப்பது வருஷ காலத்திற்கு மேலாகவே இருந்தார். இக்கலாசாலையின் முன்னேற்றத்திற்காக இவர் இக்காலத்தில் இடைவிடாது சிரமப்பட்டு வந்தார். இதனிடையே இவர் போதனா பயிற்சியும் பெற்று 'எல். டி.' பட்டம் வாங்கிக்கொண்டார். கலாசாலைத் தலைவராகவிருந்த இவர் கீழ் அநேக மாணவர்கள் படித்துப் பிரபலஸ்தர்களாகியுள்ளனர். இக்காலம் எல்லாம் மாணவர்களின் வித்தியாபிவிருத்தியும் அவர்களுடைய க்ஷேமமும் தான் இவரது பிரதான நோக்கங்களாகவிருந்து வந்தன.

### "இலக்கிய மணிகள்"

பின்பு மிஸஸ் ஏ. வி. என். கலாசாலைத் தலைவர் பதவியிலிருந்து விலகிய பின்பு இவர் மீண்டும் திருச்சினாப்பள்ளி ஸெயிண்ட் ஜோஸப் கலாசாலைக்கு ஆசிரியராக வந்து சேர்ந்தார். பெங்களூரிலும் திருச்சினாப்பள்ளியிலும் இவர் சரித்திர ஆசிரியராகவிருந்து வந்தார். முன்பு குறிப்பிட்டுள்ளபடி இவர் இந்து தேச சரித்திர கால நிர்ணயத்தில் தமக்கிருந்து வந்த அபீஷ்டத்தைச் சரியானபடி வளர்த்து வந்தார். இவர் அடிக்கடி ஆராய்ச்சிகள் தொடர்ந்து வருவாராயினர். இவரது ஆராய்ச்சிகளில் முக்கிய விஷயம் யாதெனில் இவரது முடிவுகள் விஷயங்களைப் பின்பற்றியவைக



ளாகவிருப்பன; ஆகையால் அவைகளில் பிசகுகள் கண்டு பிடிப்பது எளிதல்ல. இவரது கட்டுரைகளும் இனிய நடையில் கோர்வையாக எழுதப்பட்டு வந்தனவாதலால் மாணவர்களும் ஆராய்ச்சிப் பிரியர்களும், அவைகளை ஆராய்ச்சிகள் என்று மட்டுமேயல்லாமல் இலக்கிய மணிகள் எனவும் மதித்து வந்தனர். நுட்பமான சூக்ஷ்மங்களையும் இவர் வெகு சுலபமாக விவரித்து விடுவார்? பலரும் இதை எளிதில் அறிந்துகொண்டு விடலாம்.

இந்துதேசத்தின் சிறப்பு

1926-ம் வருஷத்தில் இவர் சென்னை சர்வகலாசாலை அதிகாரிகளால் இந்து தேச சரித்திர "ரீடராக" நியமிக்கப்பட்டார். இது ஆசிரியருக்கு அடுத்த ஸ்தானமாகும். சர்வகலாசாலையில் இத்தகைய பதவி ஏற்பட்ட பின்பு இவர் இந்து தேசசரித்திரத்துறையில் மிக மும்முரமாக ஈடுபட்டார். சதா இவர் ஆராய்ச்சிகளைத் தொடர்வதிலேயே தமது காலத்தை அல்லும் பகலும் கழிப்பாராயினர். 1925-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் இவர் சர்வகலாசாலை ஆதரவில் "ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யர் பிரசங்க"த்தை நிகழ்த்தினர். "இப்பிரசங்கம் தற்போது புத்தக ரூபமாக வெளிவந்துள்ளது. இது "இந்தியாவில் சிலகாலம்" என்பதைப் பற்றியதாகும். அதாவது இவ்வுபந்நியாசத்தில் இவர் இத்தேசம் ஆதிகாலத்தில் எப்படிப்பட்ட நிலைமையில் இருந்தது என்பதை வர்ணித்திருக்கிறார். ஆதி மனிதனைப்பற்றியும், நாகரீக வளர்ச்சியைப் பற்றியும் இவர் வெகு திறமையுடன் விவரித்துள்ளார். "இந்து தேசத்தின் சிறப்பு இதர தேசங்களுடையதைக் காட்டிலும் வெகு சிறந்தது" என்பது இவரது துணிபு. "மனிதன் பூமியில் தோன்றிய காலத்திலேயே இந்தியாவின் சரித்திரம் ஆரம்பித்துவிட்டது. அது முதற்கொண்டு இந்தியர்கள் மட்டும் இப்புவியிலிருக்கும் மற்ற தேசத்தினர்களைக் காட்டிலும் தங்கு தடையின்றி கைத்தொழில், சாஸ்திரம், மரம், கல், தந்தம் ஆகியவற்றில் சிற்பவேலை, சமூக சமரஸம், மதாபிமானம் ஆகியவற்றில் உயர்ந்து வருபவர்கள்" என்று இவர் தமது பிரசங்கத்தில் சொன்னர். நம் தேசத்தின் பெருமையைக் கோஷிக்கும் இப்புஸ்தகத்தை யாவரும் படிக்கவேண்டும். இது தவிர இவர் இதர உபந்நியாசங்களும் சர்வகலாசாலை ஆதரவில் புரிந்துள்ளார். ஒரு சமயம் இவர் "தென்னிந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் இருந்து வந்த சம்பந்தம்" எனும் விஷயத்தைப்பற்றி நான்கு அரிய உபந்நியாசங்களை நிகழ்த்தினர்.

தமிழர் சரித்திரம்

இவர் பத்திரிகைகளுக்கும் ஏராளமாக விஷயதானம் செய்துவந்தார். "ஹிந்து" பத்திரிகையில் இவர் அடிக்கடி வியாசங்கள் எழுதிவந்தார். இவை பெரும்பாலும் சரித்திர சம்பந்தமானவைகள். "ஆலயப் பிரகாரத்தின் எதிரொலி" என்ற மகுடத்தின் கீழ் இவர் வியாசங்கள் எழுதி வந்தார். இவைகளில் சில சிற்பசாஸ்திரம் போன்ற அதிசயக் கலைகளைப் பற்றியவைகளாக விருந்து வந்தன. சென்னை சர்வகலாசாலையில் இருக்கையில் இவர் "தமிழர் சரித்திரம்" என்ற சிறந்த புத்தகத்தை வெளியிட்டார். இவருக்கு வெகுகாலமாகவே தென்னடு பெருமை பொருந்தியது என்பதையும், தமிழர்கள் நாகரீகத்தில் குறைந்தவர்கள் அல்லர் என்பதையுட் எடுத்துக்காட்ட வேண்டும் என்ற திடமான அவா இருந்து வந்தது. இந்தப் புத்தகத்தை வெளியிட்டு இவர் தமது அவாவைத் தணித்துக்கொண்டதுடன், தென்ன

(27-ம் பக்கம் பார்க்க)




டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

சரசமான விலை ! பகட்டுக்கு குறைவு இல்லை !

டால்விசும்

பர்மா அவுத்த பையா கல்

உருவு கற்கள் ரதி ஒன்றிற்கு ரூபா 3 வீதம் விற்கப்படும்.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ரதி ஒன்றுக்கு | 1 | கல்கொண்டது | நூறுகல்லுக்கு | ரூபா | 300 | 0 | 0 |
| ,, | 2 | ,, | ,, | ,, | 200 | 0 | 0 |
| ,, | 3 | ,, | ,, | ,, | 150 | 0 | 0 |
| ,, | 4 | ,, | ,, | ,, | 135 | 0 | 0 |
| ,, | 5 | ,, | ,, | ,, | 125 | 0 | 0 |
| ,, | 6 விருந்து 10 | ,, | ,, | ,, | 115 | 0 | 0 |
| ,, | 10 மேல் | ,, | ,, | ,, | 100 | 0 | 0 |

இந்த பர்மா அவுத்த பையா கல் அசல்வைரங்களுக்கு இரண்டாவதாக ஒப்பிடக்கூடியது. கல் பரிசோதனை செய்யக்கூடியவர்களையும் பிரமிக்கச் செய்யும்படியான அவ்வளவு டள பளப்பும், கலரும், பட்டையும் இதற்கு அமைந்திருக்கிறது.

இந்த ஜாப்தாவில் குறிக்கப்பட்டுள்ள விலைகள் சொற்ப லாபத்துடன் ரொக்கத்திற்கு விற்கப்படும். இந்த அவுத்த பையா கல்லானது மற்ற எல்லா கற்களையும்விட அதிக மேலானதும் குன்றாத ஜோதியும் மாறாத நிறமும் வாய்ந்த உயர்வான ரகங்களாகும். அரத்திற்கும் நெருப்பிற்கும் எண்ணெய்க்கும் திராவகத்திற்கும் திடமான உத்திரவாதம் அளிக்கப்படும். மேலே காண்பிக்கப்பட்டுள்ள அளவுகளை விட பெரிய அளவுகளிலும் கல்லுகள் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும்.

பர்மா அவுத்த பையா கல் வியாபாரம்:—மொத்தத்திலும் சில்லரையிலும் விற்கப்படும்.

ஜே. எச். டோரஸ், 313, மங்கமாரி வீதி, இரங்கூன்.

## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.




**வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்துபணத்தைமிதிசெய்யலாம்!**

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு. இத்துடன் வேதுமதிகள்:—1 பாக்கெட் ஆல்கனெட் ரூட் (எண்ணெய்க்கு கலர் கொடுக்க) வாசனை திரவியம் தயாரிக்கும் விதம் 1936ம் வருஷத்திய ஒரு பாக்கட் காலண்டர் இவைகள் தரப்படும்.

**சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.**

| | | | |
|---|---|---|---|
| சாம்பாக் | ரூ. 2-0 | போகுல் | ரூ. 1-8 |
| காஷ் | ,, 2-0 | ஹீனு | ,, 1-8 |
| கொயிரோ | ,, 2-0 | லில்லி | ,, 1-0 |
| மஸ்க் | ,, 2-0 | தாமரை | ,, 1-0 |
| கதம்பம் | ,, 1-8 | கோலாகீ | ,, 1-0 |
| மல்லிகை | ,, 1-8 | மோடியா | ,, 1-0 |
| ரோஸ் | ,, 1-8 | ஸ்வீட் | ,, 1-0 |

அரை அவுன்ஸ் பாட்டில்களாக கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு.

S PAUL & Co, Perfumers, (Dept. S. W.) 4, Hospital Street, Dharamtola, Calcutta.

## ரூ. 100 இனாம்

(மாந்திரீக மோதிரம்)




காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGAL.


சிறுவர் பகுதி

# ரிஷியின் சாபம்

(ஸ்ரீமான் டி. சக்ரவர்த்தி)

ஓர் ஊரில் ஒரு பிராமணர் இருந்தார். அவருக்கு ஸ்ரீனிவாஸன் என்ற ஒரு குமாரன் இருந்தான். ஸ்ரீனிவாஸனும் தக்க வயதை யடைந்தவுடன் வெளியூர் சென்று பணம் சம்பாதிக்கவேண்டுமென்று எண்ணி அதன்படியே வெளிப் புறப்பட்டான்.

அவன் வீட்டைவிட்டுக் கிளம்பி ஒரு காடு வழியாகச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு ரிஷி மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, இரண்டு கொடிகளை எடுத்து ஒன்றை ஒன்றோடு முடிபோட்டுக் கொண்டிருந்தார். ஸ்ரீனிவாஸனுக்குக் கேலி செய்வதில் பிரியம் அதிகம். ஆதலால் அவனுக்கு ரிஷி செய்வதைக் கண்டதும் சிரிப்பு உண்டாயிற்று. ரிஷியைக் கேலி செய்ய வேண்டுமென்று மனதில் நினைத்துக்கொண்டு, அவர் அருகில் சென்றான். "ஏன் சாமி, இம்மாதிரியாக முடி போடுகிறீர்கள்" என்று கேலியாகக் கேட்டான். ரிஷி தன் வேலையை விட்டு நிமிர்ந்து பார்த்தார். தன்



வேலையைக் கெடுத்ததினால் கோபம் உண்டாயிற்று. பையனைப் பார்த்து, "அப்பா, நான் இவ்வுலகத்திலுள்ள மனிதரில் இன்னவருக்கு இன்ன பெண் வாழ்க்கைத் துணைவியாவாள் என்பதை நான் முடி போடுகிறேன்" என்று கோபமாகப் பதிலளித்தார்.

"சாமி! அப்படியானால் எனக்கு எந்தப் பெண் முடிவாகுமென்பதை முடிபோடும் பார்ப்போம்!" என்று விளையாட்டாகக் கேட்டான். ரிஷிக்குக் கோபம் அதிகரித்தது. "உனக்கும் பக்கத்து கிராமத்திலிருக்கும் ஆதி திராவிடப் பெண்ணுக்கும் கலியாணமாகும்" என்று முடிபோட்டார்.

ஸ்ரீனிவாஸனுக்கு எல்லாம் விளையாட்டாகத் தோன்றிற்று. கோபமேலீட்டினால், ரிஷியைப் பலவிதமாகக் கேலி செய்ய ஆரம்பித்தான். ரிஷி இவைகளைக் கவனியாமல், தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார். ஸ்ரீனிவாஸன் தன்னாலியன்ற மட்டும் ரிஷியைத் திட்டிவிட்டுத் தன் வழியே சென்றான்.

மேற்சொன்ன சம்பவங்கள் நடந்த பனிரண்டு வருடத்துக்குமுன், பக்கத்தூரிலுள்ள விவாகமாகாத ஒரு ஆதிதிராவிடப் பெண்ணுக்கு, ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தை மிகவும் அழகாயிருந்தது.

"குழந்தை பிறந்திருப்பது தெரிந்தால், நம்மை ஊரை விட்டுத் துரத்திவிடுவார்களே" என்று பயந்த அந்தப் பெண், அக் குழந்தைக்காக பெட்டி



ஒன்று செய்து, அதில் அக்குழந்தையை வைத்து,


உயர்ந்த வைரங்கள்

**T. R. ஜோஷி & சன்ஸ்,**

**Diamond Merchants**

38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம் பி டி. மதராஸ்.

**மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.**

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான, தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

**வாரம் பூராவும் பரீட்சியுங்கள்!**

இதைவிட 4 பங்கு விலைக்கு விற்கப்படும் பல வாட்சுகளுக்கிணையானது.

திருப்திக்கு உத்தரவாதம் அல்லது பூராப்பணமும் வாபீஸ்.

5 வருஷ உத்தரவாதம் டாஸன் லீவர் ரிஸ்ட் வாட்சு



ஒன்றுக்கு ஆர்டர் செய்து பல வருஷ வாட்சுத் தொல்லையை ஒழியுங்கள்.

உயர்தர லீவர் ஓட்டம்.

சிறிய அளவு; அழகிய அமைப்பு; சரியான மணிகாட்டுவது. ரிப்பேரில்லாது பல வருஷங்களுக்குழைக்கும்.

**மிகக் குறைந்த விலைகள்:**

பிரகாசமான நிக்கல் வெள்ளிக் கேஸ் ரூபா 6-4-0

கோல்ட் பிளேட் கேஸ் ரூபா 6-12-0

மேற்படி ரேடியம் டயலுடன் 8 அணா தனி.

பாக்கிங் & தபால் செலவு 4 அணா தனி.

சோல் ஏஜண்டுகள்:

THE UNION TRADING Co.,
2, Doyehatta St, (D/1) Calcutta

அவ்வூரில் செல்லும் ஆற்றில் விட்டுவிட்டாள். அப்பெட்டி மிதந்து சென்று கொண்டிருந்தது. நிற்க,

ஸ்ரீனிவாஸன் சென்றடையப்போகும் ஊரில் முக்கால் வாசிக்குமேல் பிராமணர்கள். அவர்களில் சுந்தரேச ஐயர் என்பவருக்குப் பிள்ளையே கிடையாது. அவருடைய மனைவி கமலம் தினம்காலையில் ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு வருவது வழக்கம். ஒரு நாள் காலை வழக்கம்போல் நதிக்குச் சென்றிருக்கையில் ஒரு பெட்டி மிதந்து வருவதைக் கண்டாள். பெட்டி வரும் வரையில் காத்துக்கொண்டிருந்து, அது அருகாமையில் வந்ததும், எடுத்துக்கொண்டு வீடு சேர்ந்தாள். பெட்டியை ஆவலோடு திறந்து பார்த்தாள். அதில் பெண்



குழந்தையிருப்பதைக் கண்டு ஆனந்தங்கொண்டாள். நடந்த செய்தியை கணவனுக்குத் தெரிவித்தாள். அவரும் சந்தோஷமடைந்தார்.

இச்செய்தி ஊரெங்கும் காட்டுத் தீபோல் பரவிற்று. ஜனங்கள் இதைப்பற்றி ஒன்றும் குறைகூற வில்லை. சுந்தரேச ஐயர் அப்பெண் குழந்தைக்கு சுந்தரி என்று பெயரிட்டு வளர்த்து வந்தார்.

பிரயாணத்தை ஆரம்பித்த ஸ்ரீனிவாஸன், மேற்சொன்ன ஊருக்கு மாலையில் போய்ச் சேர்ந்தான். சுந்தரேச ஐயர் வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தான். கொஞ்ச நேரத்திற்குள் கமலமும், சுந்தரியும் வெளியில் வந்தார்கள். ஸ்ரீனிவாஸனைக் கண்டதும் சுந்தரி உள்ளே சென்றாள். அப்பொழுதே ஸ்ரீனிவாஸனுக்கு சுந்தரி மேல் ஆசை உண்டாயிற்று. கமலம் அருகில் வந்தாள். "நீ யார், உன் வரலாறு யாது?" என்று மெதுவாகக் கேட்டாள். தான் ஒரு பிராமணச் சிறுவனென்றும், வேலைக்காக இவ்வூர் வர நேர்ந்ததென்றும், தனக்கு அன்றிரவு போஜனமளித்தால் நலமாயிருக்குமென்றும் பதிலளித்தான் ஸ்ரீனிவாஸன்.

எப்படியாவது ஸ்ரீனிவாஸனுக்கு, சுந்தரியைக் கலியாணம் செய்து வைத்துவிடலாம் என்று கமலம் தீர்மானித்தாள். ஆகவே அவள் அவனை உள்ளே அழைத்துச் சென்று போஜனமளித்தாள். ஸ்ரீனிவாஸனும் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு, ஒரு அறையில் போய் படுத்து உறங்கிவிட்டான். ஐயர் வந்ததும், கமலம், நடந்த செய்தியையும், தான் நினைத்ததையும் அவருக்குச் சொன்னாள். அதற்கு அவரும் ஒப்புக்கொண்டார்.

மறுநாள் காலை ஸ்ரீனிவாஸனுக்குத் தாங்கள் தீர்மானித்ததைச் சொன்னார்கள். ஸ்ரீனிவாஸனும் ஒப்புக்கொண்டான். சில தினங்கள் சென்றதும், ஸ்ரீனிவாஸனுக்கும், சுந்தரிக்கும் ஒரு நன்னாளில் முகூர்த்தம் நடந்தது. அன்று முதல் ஸ்ரீனிவாஸன் அங்கேயே தங்கிவிட்டான். இவ்வாறு பல தினங்கள் கழிந்தன.

ஒரு நாள் ஸ்ரீனிவாஸன் தன்னைப்பற்றியும் தன் மனைவியைப் பற்றியும் அவளது பூர்வ விருத்தாந்தத்தைப் பற்றியும் ஊரார் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து தெரிந்துகொண்டான். அப்பொழுதுதான் அவனுக்கு ரிஷி கூறியது நினைவிற்கு வந்தது. உடனே அவன் பாஷாணம் வாங்கி வந்து மனைவிக்குக் கொடுத்துத் தானும் சாப்பிட்டான். சிறிது நேரத்தில் இருவரும் இறந்துபோனார்கள்.


நீலகிரி

## காப்பிக் கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை **சகல சார்ஜும் உள்பட** சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்கு தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் வி. பி. ரெயில்வே பார்சல் (Passenger Train) மூலமாய் அனுப்பப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 10 ரா எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக் கொட்டை | ரூபா | 5 | 7 | 0 |
| கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train) | | | | |
| 1 × 30 ரா மூட்டை நீலகிரி "O" சைஸ் | ,, | 15 | 1 | 0 |
| 1 × 30 ரா மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு | ,, | 13 | 3 | 0 |

இன்னும் இதர காப்பிப் பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:-T. ஸ்டேன்ஸ் & Co: Ltd, கோயம்புத்தூர்





## ... ஆரோக்கியக் குறைவு –

### அதற்கான காரணம்

எவ்வளவு பெரிய கட்டிடத்தையும் செல்லரித்துவிடவில்லையா? அதுபோல் ஒருவனது வஜ்ரசரீரம் துரும்பாக இளைத்து விடுவதற்கு அதிக நாழிகை ஆகாது. இதற்குக் காரணமில்லாமலில்லை; அது என்னவென்றால் தேகத்தில் "உலோக சத்துக்கள்" குறைந்திருப்பதுதான்.

தேகம் மெலிந்தும், ஆரோக்கியம் குறைந்துமிருப்பவர்களது தேகத்தில் இவ்"வுலோக சத்துக்கள்" கிடையாது. மீண்டும் இவற்றைத் தேகத்தினுள் புகுத்தினாலல்லாது அவர்கள் திட ஆரோக்கியத்தைப் பெற முடியாது. இதற்காகத்தான் வைத்தியர்கள் கல்ஸானா கண்டு பிடித்திருக்கிறார்கள். அன்றாடம் ஒரு சில கல்ஸானா மாத்திரைகளைச் சாப்பிட்டால் மீண்டும் ஆரோக்கியமுண்டாகிவிடும்.

ஒரு சமயத்தில் ஆரோக்கியம் கெட்டுக்கிடந்த ஒருவர் சொல்வதைக் கேளுங்கள்.

"முன்னெல்லாம் நான் ஓயாத தலைவலியால் அவஸ்தைப்படுவேன்; இரத்தமிழந்து, களைப்பு மிகுந்து தவிப்பேன். ஆனால் கல்ஸானா சாப்பிட்டதும் எல்லாம் மாயமாக மறைந்துவிட்டன. இப்பொழுது புதிய ஆரோக்கியமும், ஜீவசக்தியும் பெற்றுச் சுகமாக இருக்கிறேன்."

இன்றே கல்ஸானா உட்கொள்ளத் தொடங்குங்கள். நீங்களும் புதிய ஆரோக்கியமும், ஜீவசக்தியும் பெறுவீர்கள்.

# Kalzana

மேலான ஆரோக்கியத்திற்கான உலோக உணவு.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

கைபடாமல் தயாரிக்கப்படுவது.

# தமிழன்னையின் தவப்பயன்

(ஆர் நால அய்யலு சோமயாஜுலு, பி. ஏ.)

தேனை மறந்த வண்டு; ஒளியை மறந்த பூ; இசையை மறந்த குயில்; இவை உண்டா? உண்டாயின் தமிழ்ச்சுவை மறந்த பாரதி மாணவனும் உண்டு. பாரதியார் பள்ளிக்கூடம் வைத்து மாணவர்களுக்குப் போதித்தாரில்லை. தமிழ் உலகமே அவர் பள்ளிக்கூடம். தமிழரனைவரும் அவருக்கு மாணவர்கள்; இயற்கையே அவர் போதித்த நூல், அதை இசைமூலம் போதித்தார். இசைக்கு அழிவில்லை; இயற்கைக்கும் அழிவில்லை; தன்னைவிளக்க இயற்கையன்னை கருவியாகக் கொண்ட பாரதிக்கழிவில்லை; தமிழன்னை நித்திய யவனசுந்தரி; அவளுக்கும் அழிவே கிடையாது. அவளை வழிபடுவோருக்கு வந்தனை செய்வோருக்கு என்நாளும் அழிவில்லை. பூதவுடல் இறைநிற்கும், நாளைபோம். புகழுடம்பு என்றென்றும் நிலைத்து நிற்கும். மூவகைக்காலமும் கடந்த நிலையே அந்நிலை. அந்நிலையை ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியார் பெற்றார்.

## என் பெற்றார்?

தமிழன்னை அவரை என் பெற்றாள்? இதற்குப் பதில் கூறுவோர் மேற்கண்ட கேள்விக்கும் பதில் கூறுவர். ஏனையோர் பதில் கூற அஞ்சுவர். ஆதிசிவனிடம் தமிழ் கற்று அகத்தியன் வாழும் நாட்டில் பாரதியார் பிறந்தார். அவரது வாழ்க்கை நமக்குப் பலவகையாகத் தோற்றலாம். அவர் வறுமை வாய்ப்பட்டிருந்ததாகச் சொல்லுவோர் பலர்; கொடிய துன்பங்களுக்குள்ளாகி மனம் நொந்ததாகக் கூறுவோர் இன்னும் பலர். ஆனால் "இந்தத் தேகம் பொய்யென்றுணர் தீரரை என் செய்வாய் மாயையே" என்று பாடிய பாரதியாரா வறுமைக்காக உள்ளமுடைந்து மனம் நோவார்? அச்சந்தவிர்த்தலை அமரத்வத்திற்கு மார்க்கமென்று கண்ட ஆண்டகையா இவ்வுலக இன்ப துன்பங்களைப் பொருட்டாக்குவான்? இந்தத் தேகம் பொய் என்றபோது அவர் குறித்தது இன்று தோன்றி நாளை நசிக்கும் பூதவுடலை? அமரத்வத்தைக் கண்டார். அவர் அமரத்வம் பெற்றார்.

## அழியாப் பொருள்

ஸ்ரீமான் பாரதியாரின் குணங்கள் ஆச்சரியமானவை. தயை, தாக்ஷண்யம், கருணை இவற்றின் வடிவென்றே அவரைச் சொல்லலாம். தம்மிடமுள்ளதைப் பிறருடன் பகிர்ந்துண்பதிலேயே அவருக்குத் திருப்தி. அவர் உள்ளத்தின் சீரிய நிலையைக் காட்டும் உரிய சம்பவம்; காண்க. இது அவரது நெருங்கிய உறவினரொருவர் கூறியது.

'இந்தியா' பத்திரிகை நடந்துகொண்டிருந்தபோது, காரியாலயத்திற்கு வரும் பணத்தையெல்லாம் பூட்டப்படாத ஒரு பெட்டியில் அவர் வைத்திருப்பார். தேவையானவர் தேவையானபோது அதிலிருந்து பணத்தை யெடுத்துக் கொள்ளுவர். அவரது உறவினரும் காரியாலயத்தில் பொறுப்பான உத்தியோகம் வகித்து வந்தவருமான ஒருவருக்கு இது பிடிக்கவில்லை. பெட்டியைப் பூட்டிவிட்டார். எங்கேயோ போயிருந்த பாரதியார் மாலையில் வந்தபோது பெட்டி பூட்டப்பட்டிருந்தது. உடனே ஒரு கொல்லனையழைத்தார். எத்தனை குமாஸ்தாக்களிருந்தனரோ அத்தனை சாவிகளைச் செய்வித்தார். இதுவல்லவோ பொது உடைமை! தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையழித்திடுவோம் என்று கூறும் மகா கவியே உணர்ச்சியிலும் செய்கையிலும் ஒரே வகையாகவிருத்தல் கூடும்.

## விடுதலை

பாரதியாரை 'விடுதலை'க் கவி என்று சொல்லுதல் பொருந்தும். நாட்டின் அரசியல் விடுதலையை வேண்டி அவர் பாடியுள்ளாரென்பதற்காக நான் அப்படிச் சொல்லவில்லை. எல்லாப் பந்தகங்களிலிருந்தும் விடுதலை வேண்டுமென அவர் பாடினர் அரசியல் விடுதலை, சமூக விடுதலை, பெண்கள் விடுதலை, ஆன்ம விடுதலை இப்படி எத்தனையோ. 'பந்த'த்தை நீக்கிவிடு அல்லாலுயிர்ப் பாரத்தைப் போக்கிவிடும்; பறையர் தீயர் புலையருக்குமிங்கு விடுதலை' முதலிய கூற்றுகள் இவ்வுண்மையைக் காட்டும். குருட்டு நம்பிக்கைகளுக்கும் பொய் வேதாந்தத்திற்கும் அவர் இடம் கொடுப்பவரல்ல. உலகம் மாயை என்று யார் சொல்லலாம்?. சந்நியாசிகள் சொல்லலாம். வயது முதிர்ந்தவர்கள் சொல்லலாம். பெரிய குடும்பத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பை வகிக்கும் வாலிபன் சொல்லும் வார்த்தைகளா இவை? இதையவர் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். உலகில் 'எத்தனை கோடி யின்பம் படைத்தாய் எங்கள் இறைவா' என்று அவர் பாடியுள்ளார்.



## சம்பிரதாய நிக்ரஹம்

அர்த்தமற்ற சம்பிரதாயத்தை எவ்விஷயத்திலும் பாரதியார் ஒப்புக்கொள்ளுவதில்லை. கவிதையில் கூட சம்பிரதாயத்திற்காக அவர் காத்திருந்ததில்லை. ஆற்றொழுக்குபோல் கவிதையவருக்குத் தானாக வந்தது. மோனையும் எதுகையும் சரியாக வரவேண்டுமேயென்று அவர் காத்துக்கிடந்ததில்லை. கவிதையாவது உணர்ச்சியின் புறத்தோற்றம்; உள்ளத்தின் பாஷை இதில் எதுகையேன்? மோனையேன்? இலக்கண விதிகளேன்! மேலும் கண்ட இலக்கியத்திற்குத் தானே இலக்கணம் கூறுவர் பா, பாவின விதிகளைக்கொண்டு அவர் கவிதையைச் சீர்தூக்கப் போவது பயனற்ற வேலை.

மேலும், பாரதியார் கவிதையின் போக்கு புதிய வகையைச் சார்ந்தது அவரைப் புதுமைக் கவியென்றே சொல்லுதல் வேண்டும். பொதுப்படக் கூறப்படும் நீதிகளும் உபதேசங்களும் அவர் கையில் புது நயத்தைப் பெறும். அதர்மத்தை வெறுத்தும் அதற்கு எதிர்ப்பைப்பாராட்டியும் அவர் பாடியுள்ள 'பெல்ஜியத்திற்கு வாழ்த்து' 'ஜார் அரசன் வீழ்ச்சு' முதலிய பாக்கள் இவ்வுண்மையைக் காட்டும். ஜெர்மனி மறப்போரில் புகுந்து பெல்ஜியம் நாட்டின் வழியாகத் தன் படைகளைச் செலுத்திற்று. பெல்ஜியம் சிறு நாடு; ஜெர்மனிக்குச் சமமான வலிமையுள்ளதல்ல. எனினும் அது அஞ்சவில்லை. 'முறத்தினால் புலியைக் காக்கும் மொய் வரைக் குறத்தி போலத் திறத்தினால் எளியையாகிச் செய்கையால் உயர்ந்து நின்றாய்' என்று பெல்ஜியத்தின் எதிர்ப்பையவர் வியந்திருக்கின்றார். இத்தாலியின் விடுதலை வீரனான மாஜினியின் சபதத்தை விஷயமாகக் கொண்ட பாக்கள் உலகுள்ளளவும் நிலைத்து நிற்கும்.

## காதற் கவிதை

பாரதியார் கவிதையையும் மற்ற நூல்களையும், சிறுகதைகளையும் முற்றிலும் படித்தவர்


## வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

**Vaidyaraj Akhil Kishore Ram,**
No. 32/5, P. O. Katrisarai (Gaya)

சிலர். தேசீயப் பாட்டுகளைப் பாடியிருப்பதாகவே அவரைப் பலர் அறிவர். ஆனால், பாரதியார் கவியின் ஜீவநாடி காதலேயாகும். இக்காதலுணர்ச்சியே அவர் கவிதையின் ஒவ்வொரு வரியிலும் ஊடுருவி நிற்கிறது. மக்கள்பாற் காதல், இறைவன்பாற் காதல் அல்லது பக்தி என்று இருவகையாக அவர் கவிதையைப் பிரித்துவிடலாம். காதல் காதல் காதல்- காதல் போயிற் சாதல் சாதல் சாதல் என்று அவர் கூறியுள்ளார். கேவலம் சாரீரமான காதலையவர் போற்றவில்லை; அதற்குக் காதலென்பதே பொருந்தாது. ஆன்மாக்களுக்குள் பேதமில்லை. அனைத்தும் ஒன்றே என்பது அவருடைய சித்தாந்தம். அவருடைய கண்ணன் பாட்டை ஊன்றிப் படித்தவர்கள் இதை உணருவர். 'நேற்று முன்னாளில் வந்த உறவன்றடி. இது நெடும் பண்டைக் கால முதல் வந்ததுவாம். இன்னும் கடைசிவரை ஒட்டிருக்குமாம். இதில் எதுக்கு 'நாணமுற்றுக் கண் புதைப்பதே' என்று காதலன் தன் காதலியை நோக்கிக் கூறுவதாகவுள்ள பாகம் பாரதியாரின் உள்ளப் பக்குவத்தையும் பரபக்தியையும் ஒருங்கே காட்டும்.

நாயக நாயகி, குரு சிஷ்யன், எஜமான சேவகன், ஆண்டான் அடிமை முதலிய பாவங்களில் இவர் கண்ணனை வழிபட்டிருக்கிறார். இவ்வழிபாடு முழுவதும் ஜீவ களை நிரம்பியது. உள்ளம் பறி கொடுத்த உண்மை பக்தனின் உயரிய நிலையைக் காட்டுவது. கரும்பு இனிக்குமென்பது பொது விதி. அதைச் சொல்லத்தான் முடியும். அதன் உண்மையை அறிய விரும்புவோர் சுவைத்துப் பார்த்தல் வேண்டும். பாரதியார் கவியும் அப்படிப்பட்டதே. பாரதி நூல் எதாயினும் சரி; படிக்கத் தொடங்கிவிட்டால் போதும். அதைக் கீழேவைப்பது அவர் சுவாதீனத்திலிராது, அவையனைத்தும் நெஞ்சையள்ளும் நூல்கள். படிக்கப்படிக்க உள்ளங்கள் வெறி கொள்ளும்.

நேற்றைக்கு முந்திய நாள் தமிழ்நாடு முழுவதிலும் பாரதியார் தினம் கொண்டாடப்பட்டிருக்கும். பாரதியாருக்கென்று ஒரு தினமில்லை. தமிழன்னைக்கு நாளெல்லாம் திருநாள். அவளது தவப்புதல்வனை பாரதிக்குமப்படியே. ஆகதால் தமிழரெல்லோரும் பாரதி நூல்களைப் படித்துப் பிறருக்குப் போதித்தல் கடமை. அக்கடமையைச் செய்யும் நாளெல்லாம் பாரதிதினம். செப். 11-ந்தேதியில் விசேஷமென்ன?

கனவுகண்டதிலே
  ஒரு நாள்
கண்ணுக்குத்
  தோன்றாமல்
இனம் விளங்க
  வில்லை—எவனோ
என்னகம் தொட்டு
  விட்டான்
வினவக் கண்
  விழித்தேன்—சகியே
மேனி மறந்து
  விட்டான்
மனதில் மட்டிலுமே—
  புதிதோர்
மகிழ்ச்சி
  கண்டதடி.
உச்சி குளிர்ந்ததடி—
  சகியே
உடப்பு சோர்ச்சு
மச்சுலும் வீடுமெல்லாம்—
  முன்போல்
மனத்துக்
  கொத்ததடி.

* * * *

தமிழ்நாடு உறங்கிக் கொண்டிருந்தது. பாரதியார் கனவில் தோன்றினார். கனவிலேயே மறைந்தார். தமிழ் மக்களின் செம்மைக்காக அவர் தம் செய்தியை உலகுக்களித்தார். அதனுடன் அவர் கடமை தீர்ந்தது. இனி நம் கடமை. நாம் இதைச் சரிவர நிறைவேற்றுவோமா?


## நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பேனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜும்மா மஸ்ஜித்



## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.



இந்தியா கவர்ன்மேண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மேண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மேண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(*Sastriar in Govt. Medical dress*)

### மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

### ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

### ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எக்ஸலென்ஸி ஸர் கே. வி. ரெட்டி நாயுடு காரு, Kt, சென்னை மாகாண கவர்னர் அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால் தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்திற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவர் நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானாக இருக்கிறார். இவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்றாய் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அப்பேர்க்கொத்த இவருடைய மருந்துகளை நான் உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் வீர்யமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**
வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



1 & 2 மேலக்கோபுர வீதி

## மதுரையில்

# நரசுஸ்

சுத்தமான

காபித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை தேயிலை

முதலியவைகளை விற்பனை செய்ய 12-வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த சரக்கு ! நயமான விலை !!

நாகரீக மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

**நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,**
மதுரை, பிராஞ்சு:
H. O. SALEM.

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—



நஞ்சன்கூடு சத்வைத்யசாலை

# ச்யாவனப்ராச

சுவாச டானிக்

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதராஸ்

(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)



தேவி பிலிம்ஸாரின ''ஸம்ஸார நௌகா'' என்ற கன்னட பாஷைப் பேசும படத்தல் சரளாவாக நடிக்கும் ஸ்ரீமதி ராஜம்மா.




கணேஷ் பிலிம்ஸின் ''கவிரதன காளி தாஸ்'' என்ற படத்தி லிருந்து காட்சிகள்.



மிஸ். கஜ்ஜன் நடிக்கும் ''மிஸ்' மனோரமா'' என்ற ஹிந்தி பாஷைப் பேசும் படத்தில் ஒரு காட்சி

# இந்திய ஸ்த்ரீகள்







பர்மிய ஸ்திரீ





இடதுபக்கம்

(மேல்படம்) மஹார்ராஷ்டிர

(கீழ்ப்படம்) தக்ஷிணி

வலதுபக்கம்

(மேல்படம்) ஸிந்தி

(கீழ்ப்படம்) வங்காளி



குடகு



பார்ஸி



மேமன்.

# ஆடை அணிவதில் பலவிதம்



பஞ்சாபி



தென்னிந்தியா



கோஜா



சென்னைக்கு சமீபத்தில் விஜயம் செய்த பிரெஞ்சு யுத்தக் கப்பல் ''போகேயின்வில்''



ஸ்விட்ஜர்லாந்திலுள்ள பிரயன்ஸ் ஏரியின் தோற்றம்.

ஹாஸ்யப்பகுதி



"ராமானுஜம் என்று பெயர் வைத்தால் கணக்கில் மேதாவியாய் விடுவான். பிறகு குமாஸ்தா உத்தியோகம் பார்த்து விட்டுச் சீமைக்குப் போவான். அங்கே கணித ஆராய்ச்சி செய்வான்."

# பெயரில் என்ன இருக்கிறது?

"பூரி"

"பெயரில் என்ன இருக்கிறது?" என்று வெறும் வாய் வேதாந்தம் பேசலாம். ஆனால் உண்மையில் பெயரில் விசேஷம் இருக்கத்தான் இருக்கிறது.

பிரபலமான அநேக மேனாட்டு ஸினிமா நட்சத்திரங்கள் பெயர்கள் எல்லாம் அவர்களது நிஜமான பெயர்களல்ல. தங்கள் பெற்றோர் வைத்த பெயர்கள் நன்றாயில்லை என்று கருதி அவர்கள் புதிதாகப் பெயர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வோட்ஹௌஸ் என்ற ஆசிரியரின் கதாநாயகன் ஒருவனுக்கு அவன் தாய் தந்தையர் ஸ்மித் என்று பெயர் வைத்திருந்தனர். உலகத்திலுள்ள எத்தனையோ லக்ஷக்கணக்கான ஸ்மித்களுள் ஒருவனாகத் தானும் காலங்கழிக்க அந்த கதாநாயகன் விரும்பவில்லை! அவன், தான் மற்ற சாதாரண ஜனங்களினின்றும் வேறுபட்டவன் என்று காண்பித்துக் கொள்வதற்காக தன் பெயரை "பிஸ்மித்" என்று மாற்றி வைத்துக்கொண்டானாம்.

சிறந்த கதாசிரியர்கள், கட்டுரையாளர்கள் பலர் கதைகளையும் கட்டுரைகளையும் மிக சுலபமாக எழுதித் தள்ளி விடுவார்கள். ஆனால் அவற்றிற்குப் பெயர் கொடுப்பதற்கு மட்டும் மிகவும் சிரமப்பட்டிருப்பதாகப் படித்திருக்கிறோம்.

வியாபாரத்தில்இந்தப்பெயர் விஷயத்தில் சிரத்தை செலுத்தினால் நல்ல பயனடையலாம். உதாரணமாக அப்பளம் வியாபாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பெயரிலுள்ள சூக்ஷ்மத்தை அறியாதவர்கள் "ரயில் மார்க் அப்பளாம்," 'ஸரஸ்வதி மார்க் அப்பளாம்'' என்றெல்லாம் பெயரிடுவார்கள். இதில் ஒரு விசேஷமும் நமக்குத் தெரியவில்லை. ஆனால் "அம்மாமி அப்பளாம்" என்ற பெயர் மனதில் தோன்றிக் கொண்டேயிருக்கும். ஆகவே பெயரில் என்ன இருக்கிறது என்று அலக்ஷியமாகச் சொல்வதற்கில்லை.

* * * *

ஸ்ரீமான் பிச்சை நல்ல பெயர்களாய் வைக்கவேண்டுமென்பதில் மிகவும் நம்பிக்கையுள்ளவர். அவருக்கும் பிச்சை என்ற பெயர் ஏற்பட்டதற்கு அந்த நம்பிக்கை ஒரு காரணமாயிருக்கலாம். பாவம், அவர் குழந்தையாயிருந்தபோது பேசியிருக்க முடியுமானால் கட்டாயம் அந்தப் பெயருக்கு ஆக்ஷேபணை செய்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஒன்றன்பின் ஒன்றாக அரைடஜன் குழந்தைகளை இழந்துவிட்ட பிச்சையின் தாயார் யமதர்மராஜனை ஏமாற்றுவதற்காகவே அப்படிப் பெயர் வைத்தார்.

பிச்சை ஐயங்கார் நாளடைவில் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானார். நாமகரணம் செய்ய வேண்டிய தினமன்று மத்தியானம் அவரும் மற்றவர்களும் என்னபெயர் வைக்கலாமென்பதைப் பற்றி மும்முரமாக யோசனை செய்துகொண்டிருந்தனர்.

"ராமானுஜம் என்று கூப்பிடலாமென்றிருக்கிறேன்" என்று பிச்சை தமது அபிப்பிராயத்தை முதலில் தெரிவித்தார்.

"நல்ல பெயர்தான். ராமானுஜம் என்று வைத்தால் குழந்தை வளர்ந்து கணக்கில் மேதாவியாய் விடுவான். பிறகு குமாஸ்தா உத்தியோகம் பார்த்து விட்டுச் சீமைக்குப் போவான். அங்கே கணித ஆராய்ச்சி செய்வான்" என்று பிச்சையின் மைத்துனர் குப்பய்யங்கார் மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டே போனார். அவர் ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியர். வேடிக்கையாகப் பேசும் சுபாவமுள்ளவர். "ஆனால் ஒன்று, என்ன கணித மேதாவியாயிருந்தாலும் பரீக்ஷை பாஸ் செய்ய முடியாது. இங்கிலீஷில் 'பிளக்' ஆகிவிடும். அப்புறம் என்னைக் கேட்காதேயுங்கள்" என்று குப்பய்யங்கார் மேலும் தொடர்ந்து சொல்லி எச்சரித்தார்.

"இங்கிலீஷில் மார்க் வரா விட்டால் போகிறது போ. ராமானுஜம் என்றே வைத்துவிடுவோம்" என்றார் பிச்சை.

இந்த சம்பாஷணைகளை அரைகுறையாகக் கேட்டுக்கொண்டு படித்துக்கொண்டிருந்த பிச்சையின் தம்பி நச்சு குறுக்கிட்டு,

"ஏன் அண்ணா! இருபது இருபத்தைந்து வயஸிலேயே இறந்து போனதாகச் சொல்கிறார்களே! அந்த ராமாநுஜத்தைப் பற்றியா பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அவன் இப்படிக் கேட்டதும் அங்கிருந்த எவர் முகத்திலும் ஈயாடவில்லை. பிச்சை அதை அபசகுனமாகக் கருதி வேறு பெயருக்காகச் சிறிது யோசனை செய்து பார்த்துவிட்டு "ராஜம் என்று வைத்துவிடுவோம்" என்றார்.

"அதுவும் நல்ல பெயர்தான். ராஜம் என்று வைத்தால் ராஜா என்று கூப்பிடலாம். வீட்டில் ஒரு ராஜா இருந்தால் நமக்கெல்லாம் பெருமைதானே? இன்னும் ராஜம் என்ற

பெயரிருந்தால் நாவல் எழுதக்கூடும். ராஜம் அய்யர் கமலாம்பாள் சரித்திரம் எழுதியது மாதிரி நம்ப ராஜம் அய்யங்கார் 'மோஹனும்பாள் சரித்திரம்' எழுதட்டுமே! எங்கள் பத்திரிகையில் அதைத் தொடர்ச்சியாக வெளியிடுகிறோம்'' என்றார்.

பிச்சையின் தாயார் அப்பொழுது அங்கு வந்து சேர்ந்தாள். ''என்னமோ பிரமாதமாக யோசனை செய்துகொண்டிருக்கிறீர்களே, குழந்தைகளுக்குப் பெரியவர்கள் பெயரை வைக்கவேண்டியதுதான் சம்பிரதாயம். நான் இன்ன பெயர் என்று போனவருஷமேபிடித்து யோசனை பண்ணி வைத்துக்கொண்டிருக்கிறேன். குழந்தை பிறந்தபிறகு சொல்லலாம் என்று பேசாதிருந்தேன்'' என்றாள்.

''அதென்ன பெய்ரோ?'' என்று குப்பய்யங்கார் ஆவலுடன் கேட்டார்.

''அதான் எங்க தாத்தா பெயர்? அப்பளாச்சாரி! ஏண்டா பிச்சை சரித்தானேடா?'' என்று பாட்டி பிள்ளையைக் கேட்டாள்.

பிச்சை வாய்திறக்கவில்லை. குப்பய்யங்கார் மிகவும் சிரமப்பட்டுச் சிரிப்பு வெளிவராமல் அடக்கிக்கொண்டிருந்தார். சற்றுத் தூரத்தில் ஓர் அறையின் வாசற்படி சமீபம் உட்கார்ந்திருந்த பிச்சையின் தர்மபத்தினி ருக்மணி அம்மாள் முகத்தில் எள்ளு, கொள்ளு, துவரை, கடுகு முதலிய சாமான்கள் வெடித்துக்கொண்டிருந்தன. அப்பொழுது நச்சு புஸ்தகத்தை மூடிக்கீழே வைத்துவிட்டு ''திலக்,'' 'தாஸ்' என்று ஏதாவது ஒரு பெயர்வைக்கலாமே'' என்றான்.

குப்பய்யங்கார் தமது சிரிப்பு அடங்கியதும் தொண்டையைக் கனைத்துக்கொண்டு ''மணி இரண்டாகிவிட்டது. சும்மாபேசிக்கொண்டிருந்தால் பிரயோசனமில்லை. நீங்கள் ஒருவர் சொல்கிறபெயர் மற்றொருவருக்குப் பிடிக்கவில்லை. இதைத் தீர்க்க ஒரு வழியிருக்கிறது. பெயர்களையெல்லாம் தனித் தனி கடிதத்தில் எழுதி குலுக்கிப்போட்டுப் பார்த்துவிடுவோம்'' என்றார்.

''குப்பு! உன் பரியாசம் எல்லாம் போதும்'' என்று பிச்சை சிறிது கோபித்துக்கொண்டான்.

''நான் பரியாசம் பண்ணவில்லை; நிஜமாகவே சொல்கிறேன் எல்லாருக்கும் பிடித்த பெயர் வேண்டுமென்றால் வேறு என்ன செய்கிறது? இல்லை, இன்னொன்று பண்ணலாமா? இன்றைக்கு 'ராமானுஜம்' என்று கூப்பிடுவோம். நாளைக்கு 'ஜனார்த்தனம்' என்றழைப்போம். நாளை மறுநாள் 'சடகோபன்' என்போம். இப்படியே தினம் ஒரு பெயராக வைத்துக் கூப்பிட்டுக் கொண்டே வந்தால் கடைசியில் எது நன்றாய், எல்லோருக்கும் பிடித்ததாய் அமைகிறதோ அதையே வைத்து விடுவோம்'' என்று குப்பய்யங்கார் பேசி முடித்தார்.

இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். பிறகு கொஞ்ச நேரம்வரை யாரும் பேசவில்லை. கடைசியில் ருக்மணி அம்மாள் மிகவும் நிதானமாக அழுத்தந்திருத்தமாகச் சொன்னாள்:—

''நீங்கள் என்னென்னமோ எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் என் குழந்தையைச் சக்ரவர்த்தி என்றுதான் கூப்பிடப் போகிறேன்''

ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் இவ்வாறு சொல்லிப் புன்னகை பூத்த வண்ணம் பக்கத்திலிருந்த குழந்தையைப் பார்த்து, ''சக்ரவர்த்தி'' என்று கூப்பிட்டாள். அந்தக்குழந்தையும் அந்தப்பெயரைக் கேட்டுக் கண்ணைத்திறந்து சிரித்தது. ருக்மணி அம்மாள் முகத்தில் உலகத்தையாளும் ஒரு சக்ரவர்த்தியின் தாய்க்குரிய பெருமை தாண்டவமாடியது.

அவள் பெற்ற குழந்தைக்கு அவளிஷ்டப்படிப் பெயர் வைத்துக் கூப்பிட அவளுக்கில்லாத உரிமை வேறு யாருக்கு உண்டு?





TEA BEST & CHEAPEST
GIVE US A TRIAL & BE CONVINCED.
LOOSE 56 & PACKETS 48 LBS PER BOX, FREE DELIVERY PER LB. LOOSE: O.P -/8/-, BROKEN -/7/-, DUST -/7/6. FLAVOURY DARJEELING BROKEN -/9/6, P.F. -/10/-. 1 LB LEAD PKT (LEAF): RED (DARJEELING) -/11/-. BLUE -/8/6. 1 LB YELLOW PAPER PACKETS: LEAF -/8/-, DUST -/8/6. DELEARS' REBATE 3 PIES PER LB. 24 LBS BOXES AVAILABLE WITHOUT REBATE. ADVANCE 25%.
G.T.CO, 185 MANICKTOLLA ST, CALCUTTA

## நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்

BALA KALA STORES,
P. C. Kansi Simri, (Darbhanga)



உங்கள்
சருமக்
கோளாறுகளுக்கு
இராத்திரியில்
ஜாம் பெக்
தேடுங்கள்.

வேர்க்கூர், சொறி இவையெல்லாம்ரொம்ப கவலையூட்டுபவை; இராத்ரி வேளைகளில் சருமத்தின்மீது ஜாம்-பெக்கைத்தடவி ஆரோக்கிய மூட்டுங்கள். ஜாம் பெக் தழும்பின்றி ரணமாற்றுகிறது. கத்தி வெட்டுகள், தீப்புண்கள், நமைச்சல், சொறி, சிரங்கு, வண்ணாரப்புண் முதலியவற்றிற்கு உபயோகியுங்கள். ஜாம்-பெக் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் பெட்டி 1-க்கு ரூபா 1 அல்லது ரூபா 2-4 வீதம் கிடைக்கும்.




மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam Buk

நஞ்சன்கூடுபல்பொடி
டப்பி 1. ம.ட. №61. மெடிகேடட் (அணா 4

உக்கம் உற்சாகம் ஊட்ட ஜிஞ்சிப் அஜீர்ண பித்த சமனி

லெடன்ஸால்
வீர்யவிருத்திக்கும் சுகநித்திரைக்கும்






## புதுமாதிரி நிட்டிங் லேஸ்

(ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.)
[காபிரைட்]

தொடக்கத் தையல் 16 போட்டுக்கொள்ளவும்.

முதல் வரிசை:—ஊசிமேல் நூல் நிட் 2, ஊசிமேல் நூல் பரல் 1, ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம் நிட் 6 ஊசிமேல் மூன்று முறை நூல் பரல் 1, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

2-ம் வரிசை:— இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 2, பரல் 1, நிட் 12, 1 பரல் உள்ளடக்கம்.

3-ம் வரிசை:—ஊசிமேல் நூல், நிட் 3, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1, பரல் உள்ளடக்கம் நிட் 9, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1, பரல் உள்ளடக்கம்.

4-ம், 6-ம், 8-ம் வரிசை:— இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 15, 1 பரல் உள்ளடக்கம்.

5-ம் வரிசை:—ஊசி மேல் நூல், நிட் 4, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 8, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும், ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

7-ம் வரிசை:—ஊசிமேல் நூல் நிட் 5, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 7, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம்.

9-ம் வரிசை:—ஊசிமேல் நூல், நிட் 6, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 6 இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம்.

10-ம், 12-ம், 14-ம் வரிசை:— இரண்டு முறை மாறிமாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 15,

11-ம் வரிசை:—ஊசிமேல் நூல், நிட் 7, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 5, இரண்டுமுறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம்.



13-ம் வரிசை:— ஊசிமேல் நூல், நிட் 8, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 4, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல, 1 பரல் உள்ளடக்கம்.

15-ம் வரிசை:—ஊசிமேல் நூல், நிட் 9 இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும் ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 3, இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம்.

16-ம் வரிசை:—இரண்டு முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், 4 தையலைச் சேர்த்து 1 பரல் உள்ளடக்கம் நிட் 11, 1 பரல் உள்ளடக்கம்.

17-ம் வரிசை:—ஊசிமேல் நூல், நிட் 2, ஊசிமேல் நூல் பரல் 1, ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம். நிட் 6, ஊசிமேல் 3 தடவை நூல் போடவும்; 1 பரல் உள்ளடக்கம், இரண்டு முறை மாறி மாறித்தைக்கவும், ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம்.

2-ம் வரிசையிலிருந்து மாறி மாறித் தைக்கவும்.


### "குப்த் மந்திரம்"

ரூபா 100 இனம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM
No 33/6, P.O. Katrisarai (Gaya)

வருகிறது! வருகிறது!!

### விநாயக சதுர்த்தி

உபாத்தியாயர் உதவியின்றி காலாகாலத்தில் பூஜை செய்ய விரும்புகிறவர்கள் தமிழில் விநாயகர், ஸரஸ்வதி, வரலக்ஷிமி பூஜைகள் அடங்கிய "கல்பத்ரயம்" என்னும் புத்தகத்தை வாங்குங்கள். விலை அணா 4. வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

T. ஸ்வாமிநாதன் பிரதர்ஸ்,
பழனிவிலாஸ்,
64, அக்பர்ஸாகிப் முதல் சந்து,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

Tele:—"SIMILICURE" Box 643 CAL.

வெளிவந்து விட்டன!

## ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

# அதிசயம் ஆனால் உண்மை



## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டு சரித்திரத்திற்குப் பேருதவி புரிந்துள்ளார். இதற்கு முன்பு இவ்வளவு கோர்வையாக ஒருவரும் எழுதியது கிடையாது. இவை தவிர இப்புஸ்தகம் இவரது ஆராய்ச்சி வல்லமையை ஸ்பஷ்டமாகக் காட்டுகின்றது.

இவர் இவ்வாறு ஆங்கிலத்தில் மட்டுமே புஸ்தகங்கள் எழுதவில்லை. தமிழிலும் இவர் சில கிரந்தங்கள் இயற்றினர். தமிழிலும் அநேக வியாசங்கள் இவர் எழுதியதுண்டு. 'இந்து தேச சரித்திரம்,' 'பல்லவர்கள் சரித்திரம்,' 'ஆழ்வார்கள் சரித்திரம்' ஆகிய சில தமிழ்ப் புஸ்தகங்கள் இவர் இயற்றினர். இவரால் இயற்றப்பட்ட இத்தமிழ் நூல்கள சென்னை "சுதேசமித்திரன்" பத்திரிகாலயத்தில் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டவை; இவை அங்கு கிடைக்கின்றன. இவை தவி, இவர் பாடபுத்தக உபயோகத்திற்காக "இந்து தேச சரித்திர"த்தை எழுதியிருக்கிறார்; இப்புத்தகங்கள் பள்ளிக்கூட மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாக இன்றும் இருந்துவருகின்றன. நம் தேச சரித்திரத்தின பெரியார்களைப் பற்றியும், வீரர்களைப் பற்றியும், முக்கியாம்சங்களைப் பற்றியும் இவர் அழகாக எழுதி மாணவர்களுக்கு சுதேசத்தில் அபிமானத்தை விருத்திசெய்ய பெரிதும் உதவியுள்ளார். ஆங்கில வித்யார்த்திகளுக்காக இவர் சில பாட புத்தகங்களும் எழுதியதுண்டு. பொதுவாக இவர் எழுதிய புத்தகங்கள் யாவும் இவரது விஸ்தாரமான அறிவைப் பிரகாசப்படுத்துவதுடன், வித்யா விஷயத்தில் இவருக்கு இருந்து வந்த என்றும் குறையாத சிரத்தையையும் ஆர்வத்தையும் காண்பிக்கின்றன. இந்து தேச சரித்திர சம்பந்தமாக இவர் பிரபல ஆராய்ச்சிகள் செய்து உலகினர் தம்முன் வணங்கச் செய்யாவிடினும், இவர் செய்துவந்தவை நம் தேசத்திற்கும் பிரதானமாக தென்னாட்டிற்கும் பெருமை யளிப்பவை. நம் தேசத்தின் ஆரம்ப காலத்தைப் பற்றியும், மிகத் தொன்மையான நாகரீகத்தின் வளர்ச்சியைப்பற்றியும் இவர் பிரசங்கங்கள் செய்தும், வியாசங்கள் எழுதியும், ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கினர்.

### சென்னை சர்வகலாசாலை இழைத்த தவறு

1904-ம் வருஷம் முதற்கொண்டு 1915-ம் வருஷ பரியந்தம் இவர் சென்னை சர்வகலாசாலை செனேட் சபை அங்கத்தினராக விருந்தார். திவான் ணஸ்வாமி அய்யங்கார் சென்னை சர்வகலாசாலை இந்து தேசசரித்திர ஆசிரியர் ஸ்தானத்திலிருந்து விலகிக் கொண்டபோது, இவருக்கு அந்தஸ்தானம் கொடுக்கப்படவில்லை. பலகாலமாகவே சர்வகலாசாலையில் இருந்து உழைத்தவரும், இந்தியா சரித்திர வாராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டவரும் ஆன இவருக்கு சர்வகலாசாலை அதிகாரிகள் பெருத்த தவறிழைத்தனர். இவரை அப்பதவிக்கு உயர்த்தியிருந்தால் சர்வகலாசாலைக்கு அதி மதிப்பையும் கௌரவத்தையும் அதிகமாக அளித்திருக்கும். ஆயினும் இவர் சர்வகலாசாலை சம்பந்தத்தை விடாமல் இருந்து வந்தார்.

### போஜ ராஜன் சரித்திரம்

1930ல் இவரது மஹிமையை யுத்தேசித்து இவரை அண்ணாமலை சர்வகலாசாலை இந்துதேச சரித்திர பிரதான ஆசிரியராக நியமித்தனர். இந்த சர்வகலசாலையுடன் இவர் தமது மரணகால பரியந்தம் சம்பந்தப்பட்டு வாழ்ந்து வந்தார். அண்ணாமலை சர்வகலாசாலையில் இவர் அநேக நற்காரியங்களை முடிக்க உத்தேசித்திருந்தார். இங்கிருக்கையில்தான் இவர், "போஜ ராஜ"னின் சரித்திர வரலாற்றை எழுதினர். இது சர்வகலாசாலையாரால் இவரது மரணத்திற்குப் பின்பு பிரசுரமாக்கபபட்டது. இந்நூலில் இவர் நம் தேச சரித்திரத்தில் மிகுந்த கியாதிபெற்ற போஜ ராஜனின் காலத்தையும், அவனுடைய விசேஷங்களைப்பற்றியும், அவனது அரசியலைப்பற்றியும் எழுதினர். இது பரியந்தம் ஜனங்களுக்கு போஜன் காளிதாஸனை ஆதரித்து வந்த அரசன் என்பது மட்டும்தான் தெரிந்திருந்தது இவ்விதமாக இவர் நிறைவேற்றக் கோரியிருந்த அநேக முயற்சிகள் முடிவு பெறுமற்போனது நம் துர்பாக்யமாகும்!

### பரீக்ஷைகள் அமானுஷ்யகரமானவை

ஏற்கெனவே இவர் ஒரு பிரபல வித்தயாதிகாரியென குறிப்பிக்கப்பட்டுள்ளது. மூன்று தடவைகள் இவர் சென்னை மாகாண கல்வி மஹாநாட்டில் தலைமை வஹித்தார். 1916-ல் மதுரையில் தலைமை வஹித்தபோது இவர் செய்த பிரசங்கம் மிகப்பாராட்டப்பட்டது. இச்சமயம் மாணாக்கர்களுக்கு சாஸ்திரம் முதலிய பகுதிகளைத்தாய்ப்பாஷை மூலம் போதிக்க வேண்டியதன் அவசியத்தை இவர் வற்புறுத்தினர். சுமார் 1900-ல் மிஸ்டர் ஜி. எச் ஸ்டுவர்ட் வித்யா இலாகா அதிபராக இங்கு வந்தவுடன், அவர் முன்னிலையில் கூட்டப்பட்ட ஒரு சிறு மஹாநாட்டில் இவர் ஆங்கிலபாஷையைத் தவிர


உன்னுடைய தோலைச் சுத்தமாகவும் சுகமாகவும் வைத்துக்கோள்.

ரணங்கள், சொரிகள், மருவுகள், பருவுகள் இல்லாமல் உன் உடம்பின் தோலை சுகமாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் நீ




குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) தினந்தோறும் உபயோகிக்க வேண்டும். வாசனையுள்ள புண்தடுக்கும் குடிகூரா சோப்புக்கட்டியின் (Cuticura Soap) நுரை தோலைச் சுத்தி செய்து, அழுக்கையும், தூசியையும் நீக்கி தோலை அவலக்ஷணமாக்கும் கஷ்டங்களைப் போக்கடிக்கும். ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் தங்கள் உடம்பைச் சுத்திசெய்வதற்கு மற்ற எதையும் உபயோகிக்கிறதில்லை. குடிகூரா சோப்புக்கட்டியின் (Cuticura Soap) உபயோகம் உடம்பை அழகாக அனேக மணி நேரம் வைத்திருக்கும். ஊக்கு சரப்பான் முதலிய தோல் வியாதிகளிருந்தால் குடிகூரா சோப்புக்கட்டியால் கழுவமுன், குடிகூரா தைலத்தை (Cuticura Ointment) உபயோகிக்கவும்; ஏனென்றால் அது தோலைத் தேற்றித் தெளிவாக்கும்.

குடிகூரா சோப்புக்கட்டி

CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும், பஜார்களிலும் விற்கப்படும்





இருமடங்கு அழகு...

—தலைமயிரை வாரி விட்டிருப்பதால்

வர்சனைத் தேங்காய் எண்ணெய்



உங்கள் தலைமயிர் அழகுடனில்லையா? அப்படியாயின் வாசனைத் தேங்காய் எண்ணெயைக்கொண்டு நன்கு தேயுங்கள்; மயிர்க்கால்களில் இரத்த ஓட்டம் பெருகும். தலை மயிர் புதிய அழகுடன் விளங்கும்—ஆரோக்கியமாகவும் வளரும்.

கேட்டியர்ன பிரிலியண்டைன்.



உங்கள் தலையும், மயிரும் மிகவும் வறண்டு கிடந்தால் 'டாம்கோ' கெட்டி பிரிலியண்டைனை உபயோகியுங்கள்; மினுமினுப்பு ஏற்படும். தலை "பிசுக்"காகாது

TOMCO

டாம்கோ விற்பனை இலாகா
19, A வாணியர் தெரு
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை மிகுந்த மருந்து பூர்வமான கூந்தல் டானிக், லைம்ஸ் & கிளிஸரின் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்., பம்பாய்.

(T H 409)

முழுமையும் மாத்ருபாஷையில் நடக்க வேண்டுமென்று பிரேரேபித்தார். அச்சமயம் சிலர் இதை ஆக்ஷேபித்தனர். ஆயினும் இதன் காரணமாக உடனே 1, 2, 3-வது பாரங்களில் கணிதம், சரித்திரம், பூகோளம் முதலியவை தாய் பாஷையில் போதிக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்து அமுலுக்கு வந்தது. இந்த முறையைத் தீவிரமாக இவர் தமது கலாசாலை ஹைஸ்கூல் வகுப்புகளில் பின்பற்றினார். மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் நேர்ந்துவரும் விபரீதங்களை எடுத்துக்காட்டி, பரீக்ஷைகள்தான் தற்போது மாணவர்கள், ஆசிரியர்கள் இவர்கள் முன்பு வெகு பிரதானமாகவிருக்கின்றது எனவும், அறிவின் வளர்ச்சிக்கு பரீக்ஷை ஒரு கருவியாகவிராமல் முடிவாகிவிட்டதென்றும், இதனால் உண்மையான போதனை தற்போது கிடைக்காமல் எல்லாப் பாடங்களையும் தலைகால் தெரியாமல் மனப்பாடம் செய்து எழுதுவதுதான் சகஜமாகிவிட்டதென்றும் இவர் கூறினார். இத்தகைய நிலைமையினால் மாணவர்களுக்குச் சரியான வித்கியாப்யாஸம் ஏற்படுவதில்லை என்பதை இவர் கோஷித்தார்; பரீக்ஷைகள் அமானுஷ்யகரமாக விருப்பதாகவும் இவர் சொன்னார்.

சிதம்பரத்தில் தேசீய சரித்திரத்தை வளர்க்காவிடில் சர்வகலாசாலை இருந்து என்ன? மாகாண கல்வி மகாநாட்டில் தலைமை வகித்து இவர் கூறியதாவது:— “நமது அறிவை வளாப்பதற்கு விதேசக் கல்வியை விட தேசியக் கல்விதான் பொருத்தமானது. வாழ்க்கை பயனாக மனதில் நொந்து சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில் நமக்கு பர்த்ருஹரி, திருவள்ளுவர் ஆகிய மஹான்கள் எழுதிய அருமையான வாக்கியங்கள், ஷேக்ஸ்பியர் எழுதிய ஜ்வலிக்கும் வரிகளைக் காட்டிலும் எவ்வளவோ ஆறுதல் அளிக்கின்றன. ஆகவே நமது சர்வகலாசாலை வித்யா முறையில் சம்ஸ்கிருதத்திற்கும், தமிழிற்கும் முக்கிய ஸ்தானம் அளிக்கப்படவேண்டும்...தேசீய சரித்திரத்தை வளர்க்காவிட்டால், சர்வகலாசாலை இருந்து என்ன பயன்?” இப்பிரசங்கத்தில் இவர் சில பிரச்னைகளையும் குறிப்பிட்டுவிட்டு, முடிவில் மாணவர்கள் தமது தேசத்தின் பிரதானப் பெருமையைப் பங்கமில்லாமல் பாதுகாத்து வருவதற்கு வழிகளைத்தேட வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

### 50 வருஷங்கள் கல்வித்துறையில் உழைப்பு

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யங்காருக்கு நம் தேசீயத்தில் அளவு கடந்த அபிலாஷை இருந்து வந்தது. இவர் தம்மாலியன்றவரை இதைவளர்த்து வந்தார். இந்துதேச சரித்திரம் கோர்வையாக எழுதப்படவில்லை என்று ஒரு குறை வெகுகாலமாக விருந்ததுண்டு. இதை அகற்ற எண்ணி இவர் சென்னை சர்வகலாசாலையிலிருக்கும் போதும் பின்பும், ஒரு புத்தகம் கோர்வையாக எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். இவரது அகால மரணம்தான் இது நிறைவேறுவதற்குத் தடங்கலாகியது. 1931-ம் வருஷம் ஜுன்மதம் 16-ம் தேதியன்று சென்னையில் அண்ணாமலை சர்வகலாசாலை சரித்திர ஆசிரியர் பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் தமது 68-வது வயதில் காலமானார். இவரது மரணத்தினால் நம் தென்னாட்டிற்கும், அறிவாளிகள் கோஷ்டிக்கும் பெருத்த நஷ்டம் சம்பவித்தது. இவர் ஒரு பெரிய மேதாவி. இவர் மஹா உழைப்பாளி. ஐம்பது வருஷமாக கல்வி சம்பந்தமான துறைகளில் உழைத்தும் கடைசி காலம்வரை இவர் வேலை செய்யவேண்டிய அவசியம் இருந்துவந்தது. தமக்கு வயது அதிகரித்துவந்த சமயத்திலும் இவர் இளைஞன்போல் உழைத்து வந்தது ஆச்சரியத்தை விளைவித்து வந்தது. கல்விபுலகில் இவரது பெயர் வெகுகாலமாகவே பிரசித்தமாக விளங்கி வந்துள்ளதாகும்!


வெண் குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.



ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலை முறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் “உலக சிரேஷ்டர்” என வெற்றி பாமாலையும் தங்க சன்ன தங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 2. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 5-க்கு அணா 12. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் N. சுப்பிரமணியம்,
(ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை






ஜலதோஷம்
வரும்போலிருக்கையில்
இதை உபயோகியுங்கள்—
அது நின்று விடும்.
Mistol
— மூளையிலேயே கிள்ளுகிறது

M 54



ஸ்தாபிதம் 1910

5 வருஷ உத்திரவாதம். 800 ரூபா மதிப்புள்ளது.

22 காரட் ரோல்டுகோல்டு தங்க ஒட்டியாணங்கள்



விலைகள் சாசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினால் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியககூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ 6-8-0; ஷை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 3-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ. 2-8-0. கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ 2-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ 1-8-0; கழுத்து செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0 வி. பி. தபால் சார்ஜ்வேறு.

கே நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனாபஜார் ரோடு, மதராஸ்.



வெய்யிற்காலம் வந்துவிட்டது.

பெண்மணிகள் இந்த வெய்யிற்காலத்தில்
அடுப்பண்டை இருந்து நெருப்பினால்
ஏன் வருந்த வேண்டும்?

ருக்மணி குக்கர்

ஒன்றை வாங்கிப் புது முறையைக் கைக் கொண்டால்
நெருப்பினால் வாடவேண்டியதில்லை.

குறைந்த விலை ! நிறைந்த சுகம் !





1 முதல் 16 பேர்களுக்குத் தகுந்த அளவுகள் :
ரூபா 9, 12, 16, 21, 26, 32, 38.

ருக்மணி குக்கர் கம்பெனி,
ராயபுரம், (12) சென்னை

எமது ஏஜெண்டுகள் :
திருப்பாப்புலியூர்:—R. மீனாக்ஷிசுந்தரஞ்செட்டியார் சோடாபாக்டரி
மாயவரம்:—டீச்சர்ஸ் அண்டு பியூபில்ஸ் கோவாபரேடிவ்சொஸைட்டி லிமிட்டெட், மகாதானத்தெரு.
கும்பகோணம்:—சுதேசிஸ் ஸ்டோர்ஸ் Ltd, பெரிய கடைத்தெரு.
தஞ்சாவூர்:—பெனாரிஸ் ஸில்க் எம்போரியம் கீழ ராஜவீதி.




## மேஜை, நாற்காலி

(காசினி எழுதியது.)

* * * 'எங்கள் பக்கத் தாத்து மாட்டுப்பெண் நேற்று மத்தியானம் எங்காத்துக்கு வந்திருந்தாள். நான் புதிசாக இரண்டு நாற்காலிகள் செய்யச் சொல்லியிருந்தேன்.

கருங்காலி மாத்தில் நல்ல கனமாகச்செய்யப்பட்ட இந்த நாற்காலிகள் இரண்டும் இருபது ரூபாய்கள் வரையில் ஆச்சுது.

என் பெண், ஆத்திலிருந்த ஒரு மேஜையை எடுத்து அதன் மேல் ஒரு வெள்ளைத் துணியை விரித்து நாற்காலிகள் இரண்டையும் மேஜையின் அருகில் போட்டிருந்தாள். இதைப் பார்த்துவிட்டு, எங்கள் பக்கத் தாத்து மாட்டுப் பெண் இடி, இடியென்று சிரித்து "என் மாமி, ட்ராயிங் ரூம் 'ஸ்வீட் போட்டிருக்கேள்' என்று அர்த்தமோ?" என்றாள்

"என்னமோ, குழந்தை எடுத்துப் போட்டாள், யாரா வது வந்தால், உட்காருவதற்கு உதவுமே, என்று இரண்டு நாற்காலிகள் செய்தேன். இந்தப் பட்டிக்காட்டில் டிராயிங்ரூம் யாருக்குவேண்டிக்கிடக்கிறது" என்று சொன்னேன். அது என்னமோ வாஸ்தவம் தான். இது என்னமோ, சுத்தக் குக்கிராமமாகத்தான் இருக்கிறது நாசூக்கா, பவுஷா ஒன்றையுமே காணோம். நாற்காலி பண்ணியிருக்கிறதைத் தான் பாருங்கோளேன். ஜன்ம ஜன்மத்திற்கும் அப்படியே இருக்கும் போலிருக்கு. அனுவசியமாக ஒரு இடத்திலும் மரத்தைச்செதுக்கவில்லை. பட்டணத்தில் எங்க ஆத்தில் போன மாசம் ஒரு டிராயிங் ரூம்செட் வாங்கினார்கள். புது மாதிரியாக:வளைவு, வளைவாகச் செய்து, எவ்வளவோ நேர்த்தியாக இருந்தது. "பெக்டாப்"பிற்குக் கண்ணாடி அடித்து, அழுக்கடையாமல் செய்திருந்தார்கள்" என்றாள்.

"வளைவான மேஜையாவது "பெக் டேபிள்" ஆவது," எனக்கு ஒன்றுமேபுரியவில்லை.



ஐந்தாம் ஜார்ஜ் ஞாபகார்த்த நிதிக்கு உதவுவதற்காக திண்டுக்கல் ஸப் கலெக்டர் மிஸ்டர் எப். ஜி. M2 சாப்பல் ஆதரவில் "சாகுந்தலா" என்ற நாடகம் நடிக்கப்பட்டது.


BOERICKE&TAFEL'S

"அசல் ஹோமியோபதிக் டைல்யூஷன் மருந்துகள் (உபயோகமற்றவையைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையல்ல) டிஷ்யூ நிவாரணிகளும்-½ அவுன்ஸ் முதல் 4 அவுன்ஸ் வரையில் டிரைசுரேஷன்ஸ் & மாத்திரைகள்; அசல் சீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும். கேட்லாக் இனும்.

GUERNSEY'S OBSTETRICS AND DISEASES OF WOMEN AND YOUNG CHILDREN Rs. 13/-

SETT DEY & CO.,
40-A, Strand Road, Calcutta.

சிவாஜி
ஸ்டோர்ஸ்
12, அவனாசி ரோட்,
கோயமுத்தூர்.

கவலைவேண்டாம்.

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்லமருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்கத் தக்க வழிகளைத் தெரிவிப்போம்

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி, S. I. R

பிரபல ஸங்கீத வித்வான் எழுதியது.



மூசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர், 6, ஆலிவர் ரோடு
மயிலாப்பூர், 2-5-35.

என் குடும்பத்தினர் நெடுநாளாகக் கேசவர்த்தினியை உபயோகித்து வருகின்றனர். கூந்தலை உதிராமல் தடுத்து, நன்றாக வளரச்செய்வதை அனுபவத்தில் கண்டு, இதைப் புகழ்ந்து சிபார்சு செய்து வருகின்றனர். ஸகல கேச உபாதிகளையும் இது தீர்க்கவல்லது என்பதைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம திருப்தி.

(கையொப்பம்) மூசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அணா 12;
கேசவர்த்தினி ஷாம்பு விலை அணா 12; மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை"
ஜி. டி. எஸ். மகரத்வஜம் D. L.
ஆரோக்ய சஞ்சீவி

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

இவளைக் கேட்பானேன் என்று சும்மா இருந்தேன். இது விஷயம் விவரமாய் எழுதவும்'' என்று நீ கேட்டிருக்கிறாய்.

ஆமாம், மேஜை நாற்காலிகளை எத்தனையோ புது தினுசில்செய்கிறார்கள். சாமான்கள் மிகவும் கனமாய் இருப்பதை விட இலேசாகவும் நாசூக்காகவும் இருப்பதுதான் தற்காலத்தில் நாகரீகமாக எண்ணப் படுகிறது. அதுவும் பூவேலைகள், நகாசு வேலைகள் அதிகமில்லாமல் அழுக்குப்படிவதற்கு இடமில்லாமல் சாமான்களைச் செய்கிறார்கள்.

போன மாசம், லேடி சுந்திராசாரி, புதிதாகக் குடித்தனம் போகும் தன் தம்பிக்கு டிராயிங் ரூம் ஒன்று வாங்கிக் கொடுத்தாள். ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள், ஒரு சோபா, இரண்டு பெக் டேபிள்கள், ஒரு ''டம்பி'' எல்லாம் சேர்ந்து 250 ரூபாய்கள் ஆச்சுது. மேஜை, புது தினுசில் செய்யப்பட்டிருந்தது. அதாவது, மூன்று கால், நாலு கால் மேஜையில்லை; மேஜைக்குக் காலே இல்லை. கறுப்பு மரத்தில் செய்யப்பட்ட இந்த மேஜை, சற்று நீள வாட்டத்தில் அடி, மேல் பக்கங்கள் உள்ளதாக இருந்தது. அதாவது, நீளப் பக்கங்கள் இரண்டும் மட்டுமில்லாமல், ஒரு பெட்டிபோல் இருந்தது என்றும் சொல்லலாம். மேல் பலகையை வளைத்து, இரண்டு பக்கத்துப் பலகைகளுடன் சேர்த்து, அடிப் பலகையுடன் இணைத்து இருந்தது. அடிப் பாகத்திற்கு இரண்டு சிறிய, அதிக உயரமில்லாத கட்டைகள் கொடுத்து இருந்தது. நான் முதலில் சொன்ன மாதிரியில் மேஜை பார்வைக்கு இரண்டு பக்கங்கள் இல்லாத ஒரு வளைந்த பெட்டிபோல் இருந்தது.

இதைப் பார்த்துவிட்டு, லேடி சுந்திராசாரியின் தம்பி ''இது ஒரு மேஜையா, அல்லது தடுக்கு விளையாட்டுச் சாமானா?'' என்றுகேட்டான்.

லேடி சுந்திராசாரிக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. இதற்குள் உள்ளே வந்த அவர்கள் சிநேகிதர் ஒருத்தர் டிராயிங்ரூம் செட்டைப் பார்வையிட்டு, மேஜையை ஒரு பிரதக்ஷிணம் செய்து, ''இதன் மேல்பாகம் எங்கே'' என்று கேட்டார்.

அதேதான் மேஜை என்று புரிந்துகொள்ளுவதற்கு அவருக்குச் சில நிமிஷங்கள் ஆயிற்று. எல்லோருமாகடேசிக் கொண்டே வாசல் பக்கம் வந்தோம். இதற்குள், ஒரு வயதான தன் குழந்தையைக் காணோம் என்று லேடி சுந்திராசாரியின் தம்பி ஆம்படையாள் தேடினாள்; கடைசியில் குழந்தை மேஜையின் உள்ளே சொஸ்தமாக உட்கார்ந்திருக்கக் கண்டோம்.

இந்த மேஜைக்கு, மேஜைத் துணி போடுவதும் விசித்திரமாகவே இருக்கும். மேஜையை மூடித் துணி போடக்கூடாது.

நடுவில் இரண்டு சாண் அகலத்திற்கு மட்டும், குறுக்கு வாட்டமாகப் பூவேலை செய்த ஒரு துணியைப் போட வேண்டும். அது இரண்டு பக்கமும் நீளமாகத் தொங்க வேண்டும்.

### பெக்டேபிள்

பெக்டேபிள் என்றால் குடிப்பதற்கு உரிய, சிறிய 'ஸ்டூல்' என்றுவைத்துக் கொள்ளேன். இதின் மேல் கனமாகக் கண்ணாடியைப் பொதிந்து முடுக்கி விடுகிறார்கள்.

இதனால்] பானங்கள் சிந்துவதாலும் சூடான பானங்களை வைப்பதாலும் பலகை கெடுவதில்லை. கண்ணாடி ஆகையால், அடியில் இருக்கும் மரமும் கண்ணுக்கு அழகாகத் தெரியும்.

### ''டம்பி'

டம்பி என்றால் என்ன என்பது உனக்குப் புதிது என்றே எண்ணுகிறேன். நாற்காலி, மேஜை இவைகளின் வர்ணத்திற்கு ஏற்றாப் போல் வண்ணான் மூட்டையைப்போல் ஒன்றைத் தைத்து வைப்பதே 'டம்பி.' இது முற்றிலும் வண்ணான் மூட்டையைப்போல் இல்லாமல், சற்று யானைக்கால் போலிருக்கும். இதை எங்கு வேண்டுமானாலும் இழுத்துப்போட்டுக் கொண்டு உட்காரலாம்

இதையெல்லாம், எழுதுவதில் என்னால் உனக்கு விளங்க வர்ணிக்க முடியவில்லை! ஒரு நடை, பட்டணத்திற்கு வாயேன். இதையெல்லாம் பார்க்கலாமே.




சோல்ஜர் உரவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி.டி கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

வைத்திய ரத்னம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களால்
ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை.

இரண்டு பிரபல வைத்திய நூல்கள்.

1. சார்ங்கதர ஸம்ஹிதை
வைத்தியர்களுக்கும். எல்லாக் குடும்பங்களுக்கும் வெகுஉபயோகமானது. வைத்திய பரிபாஷைகள், எல்லா ரோகங்களுடையவும் விவரணம், சூர்ண - கஷாய- லேஹ்ய- தைல-கிருத -லேபந- பஸ்ம-ஸிந்தூராதி ஸகல முக்கியமான ஔஷத முறைகள், எல்லா வியாதிகளுக்கும் ஸவித சிகித்ஸா முறைகள் ஆக எல்லாம் ஒழுங்காக விவரிக்கப்படுகின்றன. முகவுரை, உரை, விஷய அகராதி முதலியவை விஸ்தாரமானவை. 3 கண்டங்களும் 32அத்தியாயங்களும் அடங்கியது. 3-ம் பதிப்பு.
உயர்ந்த பைண்டு விலை ரூ. 5-4-0
2-ம் தரம் பைண்டு ,, ரூ. 4-4-0

2. இரஸரத்தின ஸமுச்சயம்
எனனும் சித்த ரஸாயன நூல் காதகம, தாளகம், இரஸம, பொன், வெள்ளி, அயம் முதலியவற்றை சுத்தி-பஸ்ம - ஸிந்தூராதிகளாகச்செய்யும் நூற்றுக்கணக்கான சிறந்த முறைகளும், புடபாகாதிகளுக்கான கருவிகளின் விவரணங்களும் அடங்கியது. முகவுரை, உரை, விஷயஅகராதி முதலியவை விஸ்தாரமானவை.
உயர்நத பைண்டு விலை ரூ. 4-8-0
2-ம் தரம் பைண்டு ,, ரூ. 3-8-0

இரண்டு பிரபல காவ்ய நூல்கள்.

1. காதம்பரி
1300-வருடங்களுக்கு முன் பட்டபாண மஹா கவி ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய அத்புத வசன காவ்யத்தின மொழி பெயர்ப்பு. கதையின் வரலாறு ஆச்சர்யகரமானது. இந்தியாவின் பிராசீன நாகரீக மேன்மையை விளக்குவது. இரம்யமான எளிய வசன நடை. மஹா மேதாவிகளும் உவந்திடும் வர்ணனைகள் ''காதம்பரியைப் படிக்க முயன்றால் இரஸிகருக்கு உணவிலும் மனம் செல்லாது'' என்பது வித்வான்களின் பழமொழி. காதம்பரியின் விமர்சமும் பிரயோஜனமும் முகவுரையாய் அமைக்கப்பட்டுள்ளது.
விலை ரூ. 1-8-0.

2. மேக ஸந்தேசம்
இந்தஅழகிய சிருங்கார காவ்யம் ஸம்ஸ்க்ருதத்தில மிகப் பிரஸித்தமானது. காளிதாஸ மஹாகவியினுடையதென்றால் அதைப்பற்றி வேறு விவரணம் தேவையில்லை. ஒரு யக்ஷன் குபேர சாபத்தினால் தன் மனைவியை விட்டுப் பிரிந்து, பின்னா அவன் அவளுக்குத்தூது செல்லும் விஷயம் வெகு அழகானது. வர்ணனைகளும் வசன நடையும் இனியவை. விஸ்தாரமான முகவுரை. விலை அணா 14.

ஒரே தடவையில் எந்த இரண்டு புஸ்தகங்கள் வாங்கினாலும் ரூபா 1-க்கு 2-அணா வீதம் குறைக்கப்படும். தபாற் செலவு முதலியது வேறு.
வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

''குஜராத்சமாச்சார்'' (தினப் பதிப்பு)
''பிரஜாபந்து'' (வாரப் பதிப்பு)
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]
குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்திலிருந்து பிரசுரிக்கப்படுபவை.
குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.
Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD.

# நகர விஜயம்

(ஸ்ரீமான் மஞ்சேரி ஈச்வரன்)

I

பல விஷயங்களில் சென்னை இப்பொழுது புதுச் சென்னையாகிவிட்டது. நாம் பின் சொல்லப்போகும் கதை பழஞ் சென்னையில் நடந்தது. நம் கதாநாயகன் நகர விஜயம் செய்தபொழுது 'ஸெண்டிரல் ஸ்டேஷன்' புது மாதிரியாகக் கட்டப்படவில்லை, 'சோதா', 'சோமாரி' முதலிய கூட்டத்தாரின் எண்ணிக்கை இப்பொழுதிருப்பதுபோல் குறைவாயில்லை; முக்யமாய், சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களுக்கும், நகரத்திலுள்ள பெருநோக்கமுடைய ஸமூகச் சீர்திருத்த இயக்கத்தில் பாடுபட்டுவரும் பெரியோர்களுக்கும், ஜனங்களின் நடத்தையைப்பற்றி வந்த கவலை அப்பொழுது அவ்வளவாயில்லை; அதாவது, பெண்ணுடல் பண்டமாக விற்கப்படும் கடைகளை எல்லாம் ஒழித்து விட்டதாக நாமும், அதைக் கொண்டு வந்தவர்களும் நம்பிக்கொண்டிருக்கும் 'பராதல்ஸ் பில்' என்ற சட்டம் அப்பொழுது இல்லை. ஆனாலும், பின்வரும் கதையின் முக்யமான அம்ச ஸம்பந்தமாய் சென்னை புதிதாகப் போய்விடவில்லை

மேற்சொல்லப்பட்ட அப்பழஞ் சென்னையில், பழயமாதிரியாயிருந்த ஸெண்டிரல் ஸ்டேஷனில் பெரிய மலைப்பாம்பைப் போல் வளைந்து, வளைந்து, சிறிக்கொண்டு நீலகிரி எக்ஸ்பிரஸ் புகைக்கரி எறிய பிளாட்பாரத்தில் வந்து நின்றது. வண்டி நின்ற ஒரு நிமிஷத்திற்கெல்லாம் பிளாட்பாரம் சப்தமயமாயும் மனுஷ்ய மயமாயுமாயிற்று. படபடவென்று கதவுகள் திறக்கப்பட்டன. டிரங்குகளும் படுக்கைகளும் வெளியே இழுக்கப்பட்டன; நீல ஷர்ட்டும் நீல டிராயரும் தரித்த போர்ட்டர்கள் டிராலிகளுடனும், தனியாகவும், இங்குமங்குமாய் ஓடினார்கள்; இடுப்பில் குழந்தையும், ஒரு கையில், கூஜாவுமாய் மாதர் பலர் இறங்கி நின்றனர். தேனடையொன்றின்மேல் கல்லை விட்டெறிந்தால் அது எப்படியாகுமோ அது மாதிரி பிளாட்பாரம் ஆயிற்று வந்த களைப்பால் பெருமூச்சு விடுவதுபோல பெரிய ராக்ஷஸனைப் போலிருந்த இஞ்சின் ஆவியை விட்டுக்கொண்டிருந்தது.

மேற்கூரையில்லா வடக்கு மூலையில் கூட்டத்திற்கு அப்பால் சுமார் பதினெட்டு வயதுத் தோற்றமுள்ள யுவன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். உள்ளே வலை பனியனும், அதன்மேல் ஜெவ்வுத்தாளோ சிறுபனியோ என்று தோன்றும் ஸில்க் ஷர்ட்டும், அரையில் ஒரு மயில்கண்; மேலே விசிறி மடிப்பாய் மடித்து 'டை' போலக் கழுத்தில் போட்டுக்கொள்ளப்பட்ட மற்றொரு மயில்கண்; தேய்க்கப்பட்ட சந்தனக் கட்டையின் நிறம்; நல்ல முகவெட்டு; அழகிய மாதின் புருவத்தைப் போல் மேல் உதட்டின்மேல் கொஞ்சமாய்த் தோன்றியிருக்கும் இளம் மீசை; இன்னும் உப்புத்தாளாகாத கன்னங்கள், கட்டுமயிர்; பின்பக்கம் வழக்கமாய் மயிர் எடுக்கப்படுமிடத்தில் இரண்டு மாதமாய் வளர்க்கப்பட்டு, நடுவில் ஸ்திரீ போல வகுடு எடுத்து வாரப்பட்டிருந்தது; பெண் தோற்றமாகவே இருந்த இந்த வ்யக்திக்கு



திருவிடைமருதூரிலிருக்கும் சிங்கக் கிணறு

போதாதற்குக் காதில் தோடு போல் இரண்டு வைர ஆபரணங்கள்.

இப்படி நின்ற யுவாவின் காலடியில் காக்கித் துணியால் உறை போடப்பட்டு மேலே சிகப்புத் தோம்பினால் ஆங்கில அக்ஷரங்களால் தன் எஜமானனின் பெயர் குறிக்கப்பட்டிருந்த டிரங்கு பெட்டியொன்றும் அதன் பக்கத்தில் படுக்கையொன்றும் கிடந்தன. மேற்படியாரின் ஸாமான்கள் அவ்வளவுதான். வண்டி வந்து பத்து நிமிஷங்கள் ஆயின; ஆனாலும், அவன் தன் மோதிரத்தை விரலால் திருப்பிக்கொண்டு, பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கப்பட்ட பத்துத் திக்குகளையும் பார்த்துக் கொண்டு நின்றான். அதுவரையில் போர்ட்டர்களில் ஒருவனும் அவனையண்டவில்லை. இதில் போர்டர்த் தொழில் ரஹஸ்யமொன்று இருக்கிறது. 'போர்ட்டரே கிடைக்காது போலிருக்கிறதே' என்று வந்தவனுக்குத் தோன்றிப் போய் விடும். 'இது வெளியூர், இது பட்டிக்காடு' என்று நோட்டம் போட்டுக் கொண்டு, போர்ட்டர்கள் தலையில் கை வைக்க ஸாவகாசமாய் வருவார்கள். வந்த ஊரிலிருந்துள்ள ரயில் சார்ஜில் பாதியில் தங்கள்கூலியை ஆரம்பிப்பார்கள்; வந்தவன் ஏமாந்தால் லாபம்; அவன் விஷயம் தெரிந்தவனாகவோ, கிருபணசிகாமணியாய் நாலு போர்ட்டர் மூட்டையை அலக்ஷ்யமாய்த் தானே தூக்கிக் கொண்டு போய் விடுபவனாகவோ இருந்துவிட்டால், என்றுமுள்ள இரண்டணாவுக்கு ஒரு நாளும் நஷ்டமே இல்லை.

"டேய், போர்ட்டர்" என்றான் நம் யுவா. மெள்ள நட நடந்து வந்து "ஒண்ணரை ரூபா கொடுத்துடுங்க, ஸார், வெளியிலே குதிர வண்டிலே கொணாந்து வச்சுட்ரேன்' என்று சொல்லிக்கொண்டே ஒரு போர்ட்டர் அவனுடைய பெட்டியை எடுத்தான் "எட்டணா" என்று, நம் யுவா பெட்டியை யெடுக்கும் போர்ட்டரைத் தடுத்தான். 'போனாப் போவுது ஸார், ஒரு ரூபா கொடுத்துடுங்க, நாங்க பங்கு போட்டுக்கணம் ஸார்; புச்சாரூலெல்லாம் போட்டாங்க" என்று சொல்லிக்கொண்டே போர்ட்டர் பெட்டியையும் படுக்கையையும் எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு, "வாங்க ஸாமி, அடுத்தவண்டி வரப்போரது" என்றும், போகும்பொழுது, "இன்னொரு ரண்டணாப் போட்டுக்கொடுத்துடுங்க ஸாமி, நாஷ்டாவுக்கு," என்றும் கேட்டுக்கொண்டே வெளியே வந்து, ஒத்தவாடை ரோட்டில் நின்றுகொண்டிருந்த ஜட்காவொன்றில் பெட்டியையும் படுக்கையையும் போட்டான். நம் யுவா 'மணிபர்ஸை, எடுத்து, ரூபாய்களையும், சில்லரைகளையும் கவிழ்த்து, ஒருரூபாயைப் போர்ட்டரிடம் கொடுத்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஜட்காவாலா போர்ட்டரைப்பார்த்துப் புன்னகை செய்தான். போர்ட்டர் கண்ணடித்து விட்டுப் போய்ச்சேர்ந்தான் நகர விஜய நாடகத்தில் அங்கம் 1 களம் 1 முற்றிற்று.

"தேவ பவன்" ஹோட்டல் எங்கே இருக்கென்று தெரியுமா?" என்று யுவா கேட்டான்.

"வண்டிலே ஒக்காருங்க ஸார், என்ன "தேவ பவன்" தெர்யுமானு கேக்ரங்களே, ஏறுங்க" என்றான் ஜட்காவாலா.

"என்ன சத்தம்?"

"ஏதோ கொடுங்க ஸார்; பஸ், கிஸ் வந்து குதிரவண்டிக்காரங்க எல்லாம் பட்னி போட்டுட்டானுக; யஜமான் எது கொடுத்தாலும் ஸரி."

"எவ்வளவுன்னு சொல்லிப்புடு; அப்புறம் தகரார் செய்


## வெற்றி கிட்டியது

என மிஸ்டர்..........22-6-36௳ பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"தங்கள் "தீபெத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரிக்ஷையில் தேறினேன்."

"தீபெத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



**வசீகரன்** ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் துன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. **வியாபாரமும், தொழிலும்:**— நிச்சயமான தொழில்விருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. **வியாஜ்யங்கள்:**— இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. **வியாதிகள்:**— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. **உத்தியோகம்:**—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6 **பரீக்ஷைகள்:**- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. **சத்ருக்களை ஜெயித்தல்:**—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. **கிரஹ தோஷம்:**-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. **ஆரோக்யமும், செல்வமும்:**— எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்து சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.M.W.)**
**P. O. SALKIA HOWRAH.**

யாதே ஆமாம், தேவ பவன் இங்கிருந்து எவ்வளவு தூரமிருக்கு? அது "மிண்ட் ஸ்ட்ரீட் லேல்லே?"

"ஆமாம் ஸார், தங்க ஸாலே தான்."

"தங்க சாலைத்தெரு எவ்வளவு தூரம்?"

"அது கடக்கு ஸார், ரொம்ப தூரம் போகணும் ஸார்!" "தேவ பவன்" தங்க சாலைத் தெரு என்று கேள்வி மட்டும் உண்டு நம் யுவாவுக்கு. அதைப்பற்றிச் சில விளம்பரங்களும் கண்டிருந்தான். பக்கத்திலுள்ள தங்க சாலைத் தெருவில் கால்மணி நேரத்தில் போய்ச்சேர வேண்டிய "தேவ பவன்" ஹோட்டலுக்கு, சுமார் 11 மணிக்கு பற்பல இடங்களைச் சுற்றிச் சுற்றி, தன் வண்டியை ஜட்காவாலா கொண்டு வந்து சேர்த்துவிட்டு, மூன்று ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு மறைந்தான்.

II

"தேவ பவன்" என்று கில்ட் எழுத்துக்கள், வாசலில், நுழையும் படிக்கட்டின் இரு பக்கங்களிலும் க்ரோடன்ஸ், கேட்டில் ஒரு காக்கிச் சட்டை டவாலியொருவன் 'பிராஸோபாலிஷ்' போட்டுத் தேய்க்கப்பட்ட "தேவபவன்" என்ற பில்லையொன்றைப் போட்டுக்கொண்டு நின்றான். நுழைந்ததும், நாற்புறமும் பளபளவென்ற பித்தளைக் குழாய்களால் தடுக்கப்பட்ட ஓரிடத்தில், "பில்" குத்தும் ஊசியொன்றும், "டேபிள் பெல்" ஒன்றும் வைத்த "காஷ் டேபிளின்" அடியில் சுற்றும் குஷன் நாற்காலியொன்றில் தேவபவன் எஜமானர் 'அய்யர்' வீற்றிருந்தார். மழைநாளில் வாரியில் கொட்டும் ஜலம்போல் அவருக்கு முன்னுள்ள டேபிளில் வெள்ளி வந்து விழுந்து கொண்டிருந்தது. கண்ணால் பார்க்காமலேயே கைநிதானத்தால், அய்யர் இடது கையால் பில்களை ஆணியில் குத்துவதும் நினைக்கமுடியா வேகத்தில் வலது கையால் சில்லரைகளைக் கொடுத்தும், வாங்கியும், கிண்ணம் வாரியாய்ப் போட்டுக்கொண்டுமிருந்தார்.

வண்டியொன்று வாசலில் வந்து நின்றதும் அய்யர் தலை தூக்கிப்பார்த்துவிட்டு, 'காக்கிச்சட்டை'யைப் பார்க்க, அவன் இரண்டு ஆட்களை உள்ளிருந்து அழைத்தான். அய்யர் ஏதோ பேர் சொல்லித் தன் 'அஸிஸ்டெண்ட்' ஒருவனை வரவழைத்து டேபிளடியில் உட்காரவைத்துவிட்டு புதிதாக வந்தவரைத்தாமே கவனிக்க எழுந்தார். இரு பக்கங்களிலுமுள்ள சலவைக் கல் டேபிள்களின் நடுவே, இப்படியும் அப்படியும் திரும்பிக்கொண்டு சுவரில் தொங்கும் பெருங்கண்ணாடிகள் ஒவ்வொன்றிலும் தன்னைப் பார்த்துக்கொண்டு, அய்யரைப் பின்தொடர்ந்த வண்ணம் நம் யுவா ஹோட்டலின் உட்புகுந்து மாடியில் ஏறினான். அய்யர் ஓர் அறையைத் திறந்து வந்திருக்கும் அதிதியை அதில் அமர்த்தினார்.

"சேலம் ஸைடோ" என்றார் அய்யர். நம் யுவாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. வியப்புடன் "ஆமாம்" என்று சொல்லிவிட்டு, "அதெப்படித் திடீரென்று சொன்னீர்" என்றான் சேலத்திலிருந்து வந்த பையன்.

"எவ்வளவு பேர் இங்கு வந்து போயிண்டு இருக்கா ஸார்; நானும் அந்த 'ஸைட்' எல்லாம் ரொம்ப நாள் இருந்திருக்கேன் பார்த்தேன், ஏதோ தோணித்து, சேலமாகத்தானிருக்கணம்னு முருகப்பச்செட்டியார்னு கூடச் சேலத்துலே பெரிய கடலைக் கொட்டை வியாபாரம்; அவாள்ளாம் நமக்கு ரொம்பப் பழக்கம்" என்றார் அய்யர்.

முன்னிலும் பன்மடங்கு வியப்புற்று "என்ன!" என்றான் வநத பையன். சிறிது நேரத்திற்குப் பிறகு "முருகப்பச் செட்டியார் உமக்கு என்னமாகப் பழக்கம்' என்றான்.

"அதான், சொன்னேனே, நான் மொதல்லே சேலத்லே தான் 'பிஸினஸ்' ஆரம்பித்தேன். நமக்கு அவர் ரொம்ப வேண்டியவர், ரொம்ப ஒத்தாசை பண்ணிருக்கார்."

"எங்க அப்பா ஸார் அவர்"

"அதானே, என்னடாப்பா, 'பேஷ்' அதே சாயலாருக்கேன்னு நானும் பாக்ரேன். ரொம்ப வேண்டியவளாப் போயிட்டேங்க நீங்க, இங்கே பட்டணத்லே எவ்வளவு நாள் தாமஸமோ? எவ்வளவு நாளிருந்தாலும் இங்கேயே இருக்கணும். எல்லா வஸதியுமுண்டு. நான் உங்களுக்கெல்லாம் கடமைப்பட்டிருக்கேன்...ஸரி, நீங்க எழுந்து கால் கை அலம்புங்க" என்று உபசரிக்க ஆரம்பித்தார் தேவபவன் அய்யர். சின்னசெட்டியார் சிற்றுண்டி செய்து, சிறிது நேரத்திற்கெல்லாம் ஸ்நானம் செய்து, உண்டு வண்டியில் வந்த களைப்பையாற்றிக்கொள்ள, தன்னறையிலுள்ள கட்டிலில் உறங்கினார்.

முன் 'வூயி டிரைபஸ்' 'ராலி' முதலிய பெரும் அயல் நாட்டுக் கம்பனிகளுக்குப் போட்டியாய் முருகப்பசெட்டியார் சேலம், பொள்ளாச்சி இரண்டிடத்திலும் தனியாய்த் தம்முடைய கடலைக் கொட்டை வியாபாரத்தை நடத்தி வந்தார். ப்ரான்ஸ், இங்கிலாந்து முதலிய இடங்களுக்கு ஏராளமாய்க் கடலை வாங்கி ஏற்றுமதி செய்து, தம் இரும்புப் பெட்டியிலும் ஏராளமாய் ரூபாய்களை ஏற்றுமதி செய்து வந்தார். கொடுக்கல் வாங்கல் வியாபாரமும் அவருக்கு உண்டு. ரொக்கமாயும், வீடுகள் ரூபமாயும், பாங்குஷேர்கள் ரூபமாயும், இருப்பது எவ்வளவு என்று தெரிந்துகொள்ள முடியாதபடி அவருக்குப் பணம் இருந்தது. ஒன்றன்பின் ஒன்றான ஆறு பெண்களை அவர் மனைவி அவருக்குக் கொடுத்து வந்தாள். பிறகு ஏழாவதாக, அவ்வகத்தின் அழகுக்காக, ஆண்குழந்தையொன்றை ஆண்டவன் அருளினான். அழகப்பன் என்று பெயரிடப்பட்டுப் பேருக்குத் தக்கபடி பையன் வளர்க்கப்பட்டான். அவனுக்கு இல்லா அலங்காரங்களெல்லாம் செய்து, அவனை அரைப்பெண்ணாகச் செய்து, அவனுக்குக் கேட்டதை எல்லாம் கொடுத்து, மூளை அதிகமாய் வளரமுடியாதபடி முடிந்த வரையில் பாடுபட்டு அவனை அவன் தந்தை தாய்களும் ஸஹோதரிகளும் வளர்த்து வந்தார்கள் அவனை இங்கிலீஷ் படிக்க வைக்க வேண்டுமென்று பேராவாக்கொண்டு முருகப்ப செட்டியார் உள்ளூர் ஹைஸ்கூலில் அவனைச் சேர்த்து, அவனுக்கு வருஷா வருஷம் உள்ள வாத்யாரையே வீட்டில் 'ப்ரைவேட்' படிப்பு சொல்லிக் கொடுக்கச் சொல்லி, அவ்வாத்யார்களின் தாரித்திரியத்தைத் தாராளமாய்த் தீர்த்துவந்தார் முருகப்ப செட்டியார். பையன் பரீக்ஷைகளில் தேற வேறு என்ன உபாயம் வேண்டும்? அழகப்பன் பரீக்ஷைகளை அலக்ஷ்யமாய் ஒன்றன்பின் ஒன்றாகத் தாண்டி வந்தான். பள்ளிக்கூடத் தலைமையுபாத்யாயர் முருகப்ப செட்டியாருக்கு நண்பர், கடைமைப் பட்டவர்; அதாவது, கடன் பட்டவர். ஆகையால் செட்டியாரைப் பார்த்தபொழுதெல்லாம், அவர் வட்டி கேட்பதற்கு முன், "என்ன போங்கோ, செட்டியார்வாள், குழந்தை அழகப்பனுக்குப் படிப்பு விஷமேறுகிறாப்போல் ஏற்றுகிறது" என்று செட்டியாரின் காதிற்குக் குளுமையாய்ச் சொல்லுவார்; செட்டியாருக்கும் கொடுத்த கடனும் வர வேண்டிய வட்டியும் மறந்து போய்விடும்.

நாம் கதை சொல்லும் வருஷம் பையன் அழகப்பன் ஐந்தாம் வகுப்பைத் தாண்டி முதல் முதலாய் எஸ். எஸ். எல். ஸி என்ற கோட்டையைத் தாக்கியிருந்தான். செட்டியாரின் பணமோ, அந்தஸ்தோ ஐந்தாம் வகுப்பு வரையில்தான் செல்லும்; பையன் எஸ். எஸ். எல். ஸி யைத் தாண்டினானோ, இல்லையோ, முருகப்பச் செட்டியார் தம் அழகப்பன் உயர்தரப் படிப்பிற்காக சென்னையிலுள்ள பெருங் காலேஜில் சேர வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டார்.

பையனுடைய எஸ். எஸ். எல். ஸி பரீக்ஷை ஆனதும் ஒரு நாள் தம் மனைவியுடன் இன்பமாயிருக்கும் பொழுது செட்டியார் குழந்தை அழகப்பனை லோகானுபவம் அடைவதற்காகவும், தான் படிக்கப் போகுமிடத்தை முந்தியே தெரிந்துகொள்வதற்காகவும், கையில் கொஞ்சம் பணம் கொடுத்து, பட்டினத்திற்கு அனுப்பப்போவதாகச் சொன்னார். அழகப்பனை விட்டுப் பிரியவோ, அவனைப் படிப்பிற்காகச் சென்னைக்கு அனுப்பவோ அவன் தாயாருக்கு மனம் வரவில்லை. அவன் ஒன்றும் படிக்கவேண்டாம், ஒன்றும் கற்றுக்கொள்ளவேண்டாம், "அம்மா" என்று

(36-ம் பக்கம் பார்க்க)


# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவாகள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ 5; தபால் செலவு 7-அணா

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P O Box 2186 Bombay.

# ஜம்புலிங்கத்தின்

## திருவிளையாடல்கள்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

V

டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடு வெகு வேகமாய் ஆபீசுக்கு வந்து, தன் அறையில் நுழைந்தார். மேஜைமீது வைக்கப்பட்டிருந்த பெட்டியிலிருந்து ஓர் சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டே எலக்டிரிக் பொத்தானை அழுத்தி ரைடரைக் கூப்பிட்டார்.

"இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கத்தையும், ராம்லிங்கையும், கூப்பிடும்" என்றார்.

ரைடர்:—தாங்கள் டெலிபோனில் கூப்பிட்டதாகச் சற்று முன் அவர்கள் தங்களைக் காணவந்தார்களே!

டெ கமி:—என்ன? நான் டெலிபோன் செய்யவேயில்லையே!

ரைடர்:—ஏதோ தவறுதல் நடந்துவிட்டது போலிருக்கிறதே! முதலில் கிளப்பிலிருந்து டெலிபோன் செய்தீர்கள். அதன்பிறகு சற்று நேரத்திற்கெல்லாம், ஓர் ஆள்மூலமாய் தாங்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. கடிதம் வருமுன்பே அவர்கள் புறப்பட்டு விட்டார்களாகையால், ஒரு சேவகன் மூலம் அக்கடிதத்தை யனுப்பி வைத்தேன். அவன் இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையிடம் நேரிலேயே கடிதத்தைக் கொடுத்ததாய் வந்து சொன்னான்.

டெ. கமி:—என்னைக் காணவா கிளப்பிற்குச் சென்றார்கள்? நானா டெலிபோன் செய்தேன்!

ரைடர்:—நான் கேட்கவில்லை. இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையே பேசினார். பிறகு டெலிபோனை வைத்துவிட்டு, இன்ஸ்பெக்டர் ராம்லிங்கையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

டெ கமி:—அடயிழவே! உம்-லெட்டர் வந்ததென்றீரே—அது?

ரைடர்:—ஒரு ஆள் வசமாய் வந்தது. வழக்கம்போல அதைப்பிரித்தேன். தாங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ள நேரிட்டதாயும், அவர்களை நேராய்த் தங்கள் பங்களாவிற்கு வந்து காணும்படிக்கும் எழுதியிருந்தது. தங்களுடைய கையெழுத்துத்தான்.

டெ. கமி:—எல்லாம் வேடிக்கையாக விருக்கிறதே! நான் டெலிபோனும் செய்யவில்லை. கடிதமும் எழுதவில்லையே!

ரைடர்:—தாங்கள் எழுதவில்லையா!

டெ. கமி:—ஒருதரம் சொன்னால் போதாதோ? டெலிபோன் ஆபீசைக் கூப்பிட்டு கடைசியாய் இந்த ஆபீசுக்கு யார் டெலிபோன் செய்தது என்று கேளும், சீக்கிரம்.

அதன்படியே வெளியே சென்று நாலைந்து நிமிடங்களில் திரும்பி வந்தார். "யாரோ ஸெண்டிரல் ஸ்டேஷனிலிருந்து ஆபீசைக் கூப்பிட்டார்களாம்" என்றார்.

டெ. கமி:—அட சங்கடமே! அப்படியா போய்விட்டது?

ரைடர்:—தாங்கள் இங்குவர இரண்டு நிமிடங்களுக்குமுன், ராம்லிங், தங்கள் கிளப்பிலிருந்து டெலிபோன் செய்தார். இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம்பிள்ளை ஏறிச் சென்ற மோட்டாரின் நம்பரை சப் இன்ஸ்பெக்டர் குருராவிடம் சொல்லி அதைக் கண்டு விசாரித்து ரிப்போர்ட்டு செய்யும்படியாகச் சொன்னார்.

என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே டெலிபோன் மணி அடித்தது. கிருஷ்ணசாமிநாயுடு டெலிபோனை எடுத்து "ஹலோ! யார் அது! குரு ராவ், என்ன விசேஷம்? டிமெல்லோஸ் ரோட்டிலேயா? வண்டியில் ஒருவரும் இல்லையா? டிரைவரைக் கூடக் காணவில்லையா? சரி" கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு மனது குழம்பிக் கொண்டிருக்கிறது. இன்னது செய்வதென்று தோன்றவில்லை. சேவகன் கடிதமொன்றைக் கொண்டு வந்தான். அப்பொழுது கிருஷ்ணசாமி நாயுடு கடிதத்தை வாங்கி உறையைக் கிழித்து, அதைப் படிக்கலானார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

என் பிரியமுள்ள டெபுடி கமிஷனருக்கு,

மறுபடி இவ்வளவு சீக்கிரத்திலேயே தங்களுக்குக் கடிதம் எழுதச் சந்தர்ப்பம் வாய்த்ததற்கு மிக்க சந்தோஷமடைகிறேன். தங்கள் இலாகா இன்ஸ்பெக்டர்கள் சொக்கலிங்கம் பிள்ளையும், ராம்லிங்கும் என்னிடம் சுகமாய் வந்து சேர்ந்தார்கள். சொக்கலிங்கம் மோட்டாரில் பிரயாணம் செய்ய நேரிட்டபொழுது வண்டியின் ஆசனத்தினடியிலிருந்து உண்டான விஷக்காற்றை சுவாசிக்க நேரிட்டதனாலேற்பட்ட அசௌக்கியத்தையும், ராமலிங்கிற்கு, தலையில் பலமாய் விழுந்த அடியினால் சிறிது நேரம் ஸ்மரணையிழந்தும், சிறிது தலையில் வலியையும் தவிர, மற்றப்படிக்கு சௌக்கியமாயிருக்கிறார்களென்றே சொல்லவேண்டும்.

மேற்சொன்ன இரண்டு பேர்களும் என் விஷயத்தில், மற்றவர்களைவிட அதிக சிரத்தை கொண்டதால், இச்சிறிய இக்கட்டிற்கு அவர்களை உட்படுத்த நேரிட்டது. உண்மையாக, அவர்களிடத்தில் எனக்கு எவ்விதக் கோபமோ, துவேஷமோ கிடையாது. ஜம்புலிங்கத்தின் காரியத்தில் தலையிடுபவர்கள், யாராயிருந்தபோதிலும், தப்பமுடியாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளவே இச்சிறிய வேலையைச் செய்யநேரிட்டது. ஆகையால், என் காரியத்தில் பிரவேசிக்காமலிருந்தால் தங்களுக்கும், தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் எவ்விதமான இடைஞ்சலும் உண்டாகாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிக்கின்றி, மேலும் மேலும் உங்கள் பிடிவாதத்தைக் காண்பிக்க நினைத்தீர்களானால், வீணாக, என் வசம் இருக்கும் இவ்விருவரின் உயிரையும




அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.




உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2**

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,
68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

**நீரிழிவு, மதுமேகம்**

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

**மயூரகாய கற்பம்**

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு இன்றே எழுதுங்கள்.

**ஸ்கந்தாசிரமம்**

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

## நகர விஜயம்

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் காலையே சுற்றிக்கொண்டு அங்கேயே இருக்க வேண்டுமென்று அவளுடைய எண்ணம்.

“அதெல்லாம் கூடாது; நான் நேற்று ஸாயங்காலம் அழகப்பனின் ஹெட் மாஸ்டருடன் பேசிக்கொண்டிருந்தேன்; ‘லீவுக்கு எங்கேயாவது பையனை அனுப்பட்டும்; செட்டியார்வாள்; படிக்காது கொஞ்சம்தான், பாக்கியெல்லாம் லோகத்தைப் பார்த்து அனுபவத்தால் தெரிந்து கொள்ளவேண்டும்’’ என்று சொன்னார். ‘பட்டணத்துக்குப் போய்ட்டு வரட்டும் ஸார், அப்படிப் பசங்களைக் கொஞ்சம் விடணும்’ என்றும் சொன்னார். ஆகையால் நான் தீர்மானித்துவிட்ட இந்தக்கார்யத்தில் நீ தடையொன்றும் சொல்லாதே’’ என்று மனைவியிடம் சொன்னார் முருகப்பச் செட்டியார்.

உள்ளடி உலக அனுபவம் நன்கு அடையச்சென்னையைவிட வேறு எவ்விடம் மேலானது? ஆகையால்தான் தற்பொழுது இளம் மு. அழகப்பச்செட்டியார் சென்னை, தங்கசாலை, ‘தேவ பவன்’ மாடியில் கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறார்.

III

மறுநாள் ஞாயிறு காலை. தேவ பவனுக்கு ஒரு பக்கத்தில் வெற்றிலை பாக்கு, புகைச்சரக்கு, ஸோடா முதலிய பான வகைகள் முதலியன உள்ள கடையொன்று, மற்றொரு பக்கத்தில் “சிங்கப்பூர் ஹேர் கட்டிங் ஸலூன்’’ என்று போடப்பட்டிருந்தது. அது முதலில் என்னவென்று செட்டியாருக்குத் தெரியவில்லை. காலைச் சிற்றுண்டியானதும், டேபிளடியில் உட்கார்ந்தபடியே செட்டியார் எதிரிலுள்ள கண்ணாடியைப் பார்த்துக்கொண்டு, தம் உள்ளங்கையினால் முகவாய்க் கட்டையைத் தடவிப் பார்த்தார். உடனே இதைப் பார்த்துக்கொண்டிருந்த தேவபவன் அய்யர், “ஏன், பக்கத்திலே ஸலூன் இருக்கு, ரொம்ப “நீட்’’டாய் பண்ணுவான்; “பேஸ்’’ மட்டும் “ஷேவ்’’ பண்ணிக்கலாமே?’’ என்று சொல்ல, அழகப்பன் எழுந்திருந்து முகத்திற்கு அழகு செய்துகொள்ளச் சிங்கப்பூர் ஹேர் கட்டிங் ஸலூனுக்குள் நுழைந்தான்.

ஸலூன் நிரம்பியிருந்தது; அழகப்பன் நுழைந்ததும் அவனைப் பார்த்து, வேலை செய்யாமல் மேற்பார்வை செய்துகொண்டிருந்த கிழவன் மந்தஹாஸத்தினால் வரவேற்புச் செய்தான். சுவரில் ஐந்தாறு பெரும் கண்ணாடிகள்; அவற்றுக்கெதிரில் உள்ள நாற்காலிகளில் கழுத்துவரையில் வெண்துணியால் போர்த்தப்பட்டு, கன்னங்களில் ஸோப்பு நுரைப்படுவோரும், க்ஷவரம் செய்யப்படுவோருமாயிருந்தது. ‘கிராப்’ வெட்டும் கத்திரியின் ‘சிக் சிக்’ என்ற சப்தம். சத்தியைத் தோலில் தீட்டும் சப்தம், ஸோப் பிரஷ்களை பீங்கான் தொட்டிகளில அலம்பும் சப்தம், இவற்றைப் பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருந்த செட்டியாரை அவரறியாமலேயே ஸலூன் ‘ப்ரொப்ரைடர்’ பெரியார், ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். ரொம்பப் பெரிய மனுஷர்களையும், புதிதாக வந்தவரையும் மாத்திரம் பெரியவர் தாமே கவனிப்பது. பெரிய கிழவன் தன் புன்னகை பூத்த முகத்துடன் ஸலூன் வாசலில் நின்றுகொண்டிருந்தால், போகிறவர்கள், அதற்கு முந்திய நாளே க்ஷவரம் செய்து கொண்டிருப்பினும், தாமறியாமல் தம் முகவாய்க் கட்டையைத் தடவிப் பார்த்துக்கொண்டு ஸலூனுக்குள் நடப்பார்கள். பெரியவர் நாற்பது வருஷமாய்த் தொழில் செய்பவர்; அகத்தின் அழகைக் காட்டும் முகத்தின் அழகைத் தம் கையில் வைத்துக் கொண்டிருக்கும் ‘சிங்கப்பூர் ஸலூன்’ யஜமானர் மிகப் பெரியவர். கிராப்பே இல்லாத பழங்காலத்திலிருந்து அவர் தம் விருத்தியை நடத்தி வருகிறார். டிராமாக்காரர் முதலியவர்களுக்கு அலங்கார ‘மின்னிச்சி’ கள் முன்பு நன்றாப் ஜோடிப்பார். நாளடைவில் தலைமயிரைப்பற்றியும் முகத்தைப்பற்றியும் ‘அழகு’ என்ற விஷயத்தில் ஜனங்களுக்கு அபிப்பிராயங்கள் மாறிவிட்டன; வெளியூர்களில் அவ்வளவாக இல்லாவிட்டாலும், சென்னையில் நன்றாய்க் ‘கிராப்’ செய்து வாரப்பட்டு, ப்ரதிதினமோ, இரண்டு தினங்களுக்கு ஒரு தரமோ செவ்வனே மயிரில்லாமல் சீர் செய்யப்பட்டு முகமே அழகு, நாகரீகம், என்பது கொள்கை. குடுமியின் நாளும் கட்டு மயிரின் நாளும், கோரா, கித்தா முதலியவற்றின் காலமும் கழிந்து விட்டது. நம் பெரியாருக்கு ‘அமெரிக்கன் ஆக்ஸ்போர்ட்’ என்று பல பரிபாஷைகளினால் குறிக்கப்பட்ட பல விதமான கிராப்புகள் செய்வதில் உள்ள திறமை சென்னை முழுதும் தெரிந்த விஷயம்.

அழகப்பச் செட்டியார் உட்கார்ந்து ‘பேஸ்’ மட்டும் என்றும் சொல்ல, பெரிய பண்டிதர் செட்டியாரின் தலையைத் தடவிக் கொடுத்து, பெண்கள் பார்த்து விரும்பும்படி வளர்ந்திருந்த தலைமயிரின் முடிப்பை அவிழ்த்தார். “ஸார், நான் சொல்றேன்னு ஏதாவது நினைச்சுக்காதேங்க; இதெல்லாம் இப்ப அழகுலே சேத்தியில்லே ஸார்; ‘பாஷன்’ மாறிப் போச்சு; ஏன் ஸார், ‘நீட்’டாய் கிராப் ஒண்ணு வெச்சூடுறேன் பாருங்க’’ என்றார். அழகப்பனுக்கு வெகு நாளாய்க் கிராப் செய்துகொள்ள வேண்டும் என்று உள்ளூற ஆசை; ஆனாலும் அவனுடைய தாயார் குழந்தைக்கு வாரவேண்டும் பின்னவேண்டுமென்று வெகு அருமையாய் அவன் கேசபாசத்திற்கு பலவகைத் தைலங்கள் அபிஷேகித்து, அதை வளர்த்து வந்தாள். இப்பொழுது அழகப்பன் பெரியாருக்கு ‘ஸரி’ என்று சொல்ல வில்லை; ஆனால் அவன் தயங்கின தயக்கத்தில் அவனுக்குக் கிராப் செய்துகொள்ள முக்கால் எண்ணம் இருக்கிறதென்று தீர்மானித்துக்கொண்டு, ஆபரேஷன் செய்யும் டாக்டரைவிட நிர்தாக்ஷண்யமாய் அம்பட்டப் பெரியார் அழகப்பனின் கட்டு மயிரைத் தனியாய் எடுத்து டேபிளின்மேல் போட, அது பாவம், ‘தேமேனு’ அங்கு கிடந்தது. அதைப்பார்க்க அழகப்பனுக்குச் சற்று வருத்தமுண்டாயிற்று. அழகப்பன் நாகரீகமான தோற்றத்துடன் வெளிவந்தான்; நகரவாஸ தீக்ஷை அவனுக்கு ஆயிற்று. அவனை விட்டுப் பிரிந்த அவனது கேசபாசம் சென்னை ‘அமெசூர்’ டிராமாக் கம்பெனியொன்றின் ஸ்த்ரீ பார்ட்டின் பெட்டியில் டோபாவாய்க் கிடக்கிறது. பெரிய துணியை எடுத்து முறுக்குவது, பிழிவது, வெகு நேரம் துவட்டுவது, ஆற்றுவது, தட்டுவது, முடிவது முதலிய கேசகர்மாவெல்லாம் போய், கண்ணாடி, சீப்பு, வகுடு, வாருதல், ப்ராஷ், போமேட் முதலிய புதுக்கேச விதிகள் தோன்றின. இரண்டு மூன்று நாட்களுக்கு மட்டும் அழகப்பனுக்கு ஏதோ தன் ஸொத்து ஒன்று போய்விட்டாற் போலும், வேண்டியவர் யாரோ இறந்து போய் விட்டாற்போலும் தோற்றிக் கொண்டிருந்தது. ஆனால் நகரத்திலிருந்தால் நாகரீகமாய் இருக்க வேண்டியது நியாயம் தானே என்று தன்னைத் தேற்றிக்கொண்டான்.

இக் கதையின் முடிவை அடுத்த வாரம் படியுங்கள்.


## சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.



விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

## ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

**The Anglo Indian Drug & Chemical Co**
**BOMBAY 2.**



## யானைப்படை

யானைப்படைபோல் சில வருஷங்களுக்கு மேல்பட்டிருக்கும் எல்லா விதமான மேக காரகப் படைகளையும் ஓர் நிமிஷத்தில் ஆயிரக்கணக்கான புழுக்களைக் கொன்று வேருடன் நாசம் செய்யும்.

ரிங்கு வர்மிஸைட்
பெரிய சீசா ரூ 1.
சிறிய சீசா 9 அணா.

ஆங்கில ஆயுர்வேத பார்மசி,
290, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# மகாபாரதம்

## சாந்தி பர்வம்

—

(மோக்ஷ தர்மம்)



(25ப)

### எந்தத் தேவதையை ஆராதிக்கவேண்டும்?

யுதிஷ்டிரர், "கிருஹஸ்தனாலும், பிரம்மசாரியானாலும் வானப்பிரஸ்தனானாலும் அல்லது ஸந்யாஸியானாலும் ஸித்தியை அடைய விரும்புகிறவன் எந்தத் தேவதையை ஆராதிக்க வேண்டும்? இவனுக்கு எதனால் நிலைத்ததான ஸ்வர்க்கம் ஏற்படும்? எதனால் பரமான மோக்ஷமுண்டாகும்? எந்த விதியினால் தேவகர்மத்திலும், பித்ரு கர்மத்திலும் ஹோமம் செய்யவேண்டும்? ஸ்வர்க்கத்தை அடைந்தவன் தான் அதினின்றும் நழுவாமலிருப்பதற்கு எதைச்செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

இதற்குப் பீஷ்மர் பதில் சொன்னதாவது:—இது ரஹஸ்யமான விஷயம். இது தேவருடைய அருளில்லாமலும் ஞானப் பிராப்தியில்லாமலும் தர்க்கத்தினால் நூறு வர்ஷங்களானாலும் சொல்லுவதற்கு இயலாது. இவ்விஷயத்திலும் நாரதருக்கும் ரிஷியான நாராயணருக்கும் நடந்த ஸம்வாதம் சரித்திர ரூபமாக விருக்கிறது.

எல்லாவற்றிற்கும் ஆத்மாவும் ஸநாதனருமான நாராயணர் முன்காலத்தில் ஸ்வாயம்பு மன்வந்தரத்தில் கிருதயுகத்தில் தர்மருக்குப் புத்திரராகி நரரென்றும், நாராயணரென்றும், ஹரியென்றும், கிருஷ்ணரென்றும் நான்கு மூர்த்திகளுடையவரானார். அவர்களுக்குள் அழிவற்றவர்களான நரநாராயணர்களிருவரும் பதரிகாஸ்ரமத்தையடைந்து ஸ்வர்ணமயமான வண்டியிலிருந்து கொண்டு தவம் செய்தார்கள்.

அப்பொழுது நாரதர் அங்கு வந்தார். "எவரிடத்தில தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், முதலியவர்களுடன் கூடிய உலகங்களெல்லாம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அவருடைய இருப்பிடம் இது. முன் ஒன்றாயிருந்த இந்த மூர்த்தியானது தர்மருடைய குல பரம்பரையை விருத்தி செய்வதற்காகத் தர்மரிடமிருந்து நான்கு விதமாக உண்டாயிற்று. இவர்களால் தர்மர் விருத்தி செய்யப்பட்டார். இவ்விடத்தில் இப்பொழுது தர்மானவர், நரநாராயணர்கள், கிருஷ்ணர், ஹரியென்கிற இந்தத் தேவர்களால் அனுக்ரஹிக்கப்பட்டார். இந்த விடத்தில் தர்மரின் புத்தி

ரும் வேறு ஒரு காரணத்துக்காகத் தவத்தில் நிலைத்திருந்தார்கள். அவர்களுக்கு ஆன்ஹிகங்களின் அநுஷ்டானம் ஏது? எல்லாப் பிராணிகளுக்கும் தந்தைகளும் தேவர்களுமான இவர்கள் எந்தத் தேவதையை ஆராதிக்கிறார்கள்?" என்று நினைத்து நாரதர் நாராயணரை நமஸ்கரித்துப் பின்வருமாறு சொன்னார்:—

வேதங்களில் நீர் உற்பத்தியில்லாதவரும் சாஸ்வதமானவரும், உலகங்களைச் சிருஷ்டிக்கிறவரும் மோக்ஷ ஸ்வரூபமாகவும் சொல்லப்படுகிறீர். இந்த எல்லா உலகமும் உம்மிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய நீர் எந்தத் தேவரை ஆராதிக்கிறீர்?

இதற்குப் பகவான் "நீர் கேட்கும் இவ்விஷயம் ரகஸ்யமானது. ஆயினும் பக்தியுள்ள உமக்குச் சொல்லுகிறேன். அந்த வஸ்துவானது ஸூக்ஷ்மமும், அறிவதற்கு அரியதும், இந்திரியங்களும், இந்திரிய விஷயங்களும் எல்லாப் பூதங்களும் இல்லாததுமாயிருக்கிறது. அது எல்லாப் பிராணிகளுக்கும் அந்தராத்மாவும் ஜீவனுமாகச் சொல்லப்படுகிறது. அது மூன்று குணங்களுக்கும் வேறான புருஷனென்றும் சொல்லப்படுகிறது. அதனிடமிருந்தும் மூன்று குணங்களுள்ள அவ்யக்தமானது உண்டாயிற்று. அவ்யக்தமும் வியக்தமான பதார்த்தங்களில் இருப்பதுமான அது அழிவற்ற பிரகிருதி யென்று சொல்லப்படுகிறது. அந்தப்பிரகிருதியை எங்களுக்குக் காரணமாக அறியும். பிரகிருதியுடன் கூடிக் காரிய காரணரூபமான அவர் எங்களால் பூஜிக்கப்படுகிறார். தேவகர்மாவும் பித்ரு கர்மாவும் செய்ய வேண்டியவை யென்பது அவருடைய ஆஜ்ஞை. பிரம்மா, ஸ்தாணு, மனு, தக்ஷன் முதலிய இருபத்தொரு பேர் உண்டானார்கள். அவர்கள் ஸ்ருஷ்டி கர்த்தர்களாகக் கருதப்பட்டார்கள். பிராம்மணர்களில் சிறந்த அவர்கள் அவருடைய தெய்வ கர்மத்தையும் பித்ரு கர்மத்தையும் எப்பொழுதும் உண்மையாகத் தெரிந்துகொண்டு அந்தத் தேவருடைய ஸநாதனமான மர்யாதையைப் பூஜித்துப் பிறகு தங்களாலடையப்பட்ட பயன்களையும் அறிகின்றார்கள். ஸ்வர்க்கத்திலிருப்பவர்களெல்லாம் வணங்குகின்ற தேகிகள் அவர்களுடைய பிரஸாதத்தால் அவரால் கொடுக்கப்பட்ட பயனையுடைய கதியை அடைகின்றார்கள். முக்தியடைந்தவர்களுக்குக் கதியானது க்ஷேத்ரஜ்ஞனென்கிற சிதாத்மாவென்று கல்பிக்கப்பட்டது. அவன் எல்லோருக்கும் கதியாகவும் நிர்க்குணனாகவுமே சொல்லப்படுகிறான். நாங்கள் இருவரும் அவனிடமிருந்து வந்தவர்களென்று ஞான யோகத்தால் தெரிகிறது. இவ்விதம் அறிந்துகொண்டு ஸநாதனனான அந்த ஆத்மாவைப் பூஜிக்கிறோம்.

அநேகம் சரீரத்தை ஆஸ்ரயித்த அவரை வேதங்களும் ஆஸ்ரமங்களும் இப்பொழுது பக்தியுடன் நன்றாகப் பூஜிக்கின்றன. அவரும் இவைகளுக்குக் கதியைக் கொடுக்கின்றார். உலகத்தில் எவர்கள் அவரையே தியானம் செய்துகொண்டு ஏகாந்தியாயிருப்பதை நன்றாகப் பற்றினார்களோ அவர்கள் அவரையும் அடைவார்களென்பது அவர்களுக்கு அதிகமாயுள்ளது" என்று பதில் சொன்னார்.

(தொடரும்.)



ஓரியண்டல் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியின் இன்ஸ்பெக்டர் ஆபீஸை வேலூரில் ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் எஸ். எ. வெங்கட்ராமன் திறந்து வைத்தார்.

# புஸ்தக விமர்சம்

**கவிச்சக்ரவர்த்தி**
**சுப்பிரம்மண்ய பாரதி**
**சரிதம்**

''கவிச்சக்ரவர்த்தி சுப்பிரம் மண்ய பாரதி சரிதம்.'' ஆக்கியோன்—ஆக்கூர் அநந்தாச்சாரி. கிட்டப்பா புலர் பிரசுராலயம், செங்கோட்டை. அணா ஆறு.

இந்த ''சுப்பிரம்மண்ய பாரதியார் சரித்திர''த்தில் கடைசி எட்டுப் பக்கங்களில் 'சில ருசிகரமான சம்பவங்கள்' என்று போட்டப்பட்டு சம்பவங்களைத் திரட்டி வெளியிடப்பட்டிருக்கிறது. புஸ்தகத்திலேயே ''சுப்ரம்மண்ய பாரதியார் வாழ்க்கையில் பல ருசிகரமான சம்பவங்கள் என்று மகுடமிட்டுப் பிரசுரித்திருந்தால் பொருத்தமாகவிருக்கும். இந்தப் புஸ்தகத்திற்குச் சிறப்புரை எழுதியுள்ள பாலி சு. நெல்லையப்பர் கூறியுள்ளதுபோல் ''பெரியோர்கள் வாழ்க்கையில் நிகழும் சிறிய நிகழ்ச்சிகளே அவர்கள் பெருமையை விளக்குவனவாயிருக்கின்றன.'' இதில் வெளியிட்டுள்ள பல சம்பவங்கள் மூலமாக பாரதியார் நம் கண்முன் இருப்பது போல் தோற்றுகிறது. ஆனால் ஸ்ரீமான் ஆக்கூர் அநந்தாச்சாரி இன்னும் விரிவாக, பாரதியார் சரித்திரம் என்று சொல்லும்படியாக இதை எழுதியிருந்தால், மிகவும் நன்றாயிருந்திருக்கும். இந்தமாதிரி சரித்திரம் எழுதுவது படிப்பதற்கு இந்தக் காலத்தில் ருசிகரமாக இருந்தாலும் பிற்காலத்தில் கெடுதல் விளைவிக்கலாம்.

''தை மாதப் பிறப்பின் போது ஒருதரம் பாரதியாருக்குக் கையில் பணம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டாராம். அப்பொழுது அவர் சீடர்களில் ஒருவரான உத்திராதிச் செட்டியார் கனவில் பராசக்தி வந்து பாரதியாருக்குப் பணம் கொடு என்று தம்மிடம் சொன்னதாகச் சொல்லி பாரதியாரிடம் பணம் கொடுத்தாராம்'' என்று ஒரு சம்பவம் இதில் சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் எவனும் வந்து ஒருவன் காளமேகம் சமாச்சாரம் மாதிரி பாரதியார் நாக்கில் பராசக்தி எழுதினாள் என்று சேர்த்துவிடுவான். அதைவிடப் பாரதியாருக்கு (அவர் ஸ்வாமி அனுக்கிரஹம் பெற்றவராயிருந்தாலும்) வேறு கெடுதல் வேண்டாம். இதே மாதிரி சம்பவங்களாக நமது ஆச்சாரியார், ஆழ்வாராதிகள், மற்ற கம்பன், ஒட்டக்கூத்தன், ஔவை முதலியோரின் சரித்திரங்கள் வெளிப்பட்டு இப்பொழுது ஐதிகமாக மாறி மகா அபத்தமாக இருக்கின்றன.

அதனால் ஸ்ரீமான் அநந்தாச்சாரி இதே சரித்திரத்தை சரித்திரப்பான்மையில் எழுதுவாராக! சரித்திரங்கள் எழுதக் கூடிய நடை அவர் பாஷையில் இருக்கிறது. அத்துடன் பிழைகள் மிக மிகக் கொஞ்சமாகக் காணப்படும் தமிழ் புஸ்தகங்களில் இது ஒன்று.





## ''அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்''

சற்று முன் தான் குழந்தை ராஜம் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள். ''கம்'' என்று ஒரு வாசனை உள்ளிருந்து வெளிக் கிளம்பியது. தாயார் பக்ஷணங்கள் தயார் செய்கிறாளென்றெண்ணி ஓடோடியும் உள்ளே வந்து,

''அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்''

''கண்ணே! ரசமல்லவோ அடுப்பில் கொதிக்கிறது. தின்பண்டமேதுமில்லையே'' என்றாள்.

''அன்னையே! ரசத்திற்கு இவ்வளவு அபரிமிதமான வாசனையேது?'' என்று குழந்தை ஆவலுடன் வினவினாள்.

''செல்வமே! இது எல். ஜி. பெருங்காயத்தின் இன்பகரமான வாசனை, கொஞ்சந்தான் ரசத்தில் போட்டேன். அதற்குள் வாசனை ஊரைத் தூக்குகிறது'' என்று அம்மையார் பதிலளித்தார்.

உடனே சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்ட குழந்தையை அன்னையும் எடுத்து அமுது படைத்தாள். வயிறு நிறைய உண்டபின் குழந்தை ராஜம் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடத்திற்கு ஓட்டம் பிடித்தாள். எல். ஜி. தான் எல். ஜி. அதற்கு ஒப்பும், உயர்வும் இல்லை. எல். ஜி. கொள்வோர் எழில் பெறுக.

**லால்ஜி கோது & கம்பெனி,**
பிரபல பெருங்காய வியாபாரிகள்.
**பம்பாய் — சென்னை — கும்பகோணம்**





**உங்கள்**
**குழந்தைக்கு**
டோங்கரேயின்
**பாலாம்ருதமும்**
கொடுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன?

1. **டோங்கரேயின் பாலம்ருதம்** குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.
2. நீடித்த தொந்தரவான இருமலையும் சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.
3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.
4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

ஏ. பி. பரேக், 268, சைனாபஜார் ரோட்.



## ''ஜலஜ க்ரீம்''

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும், சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.

கிடைக்குமிடம்:—

SHIVLAL & CO.,
Princess Street, Bombay 2.



## கண்ணோட்டம் — பிரமுகர்கள்



மைசூர் ஜில்லா போர்டு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமதி டி. சாக்கம்மா.



மைசூர் ஜில்லா போர்டு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமதி கே. டி. ருக்மணி அம்மா.



சிலோன் கவர்ன்மெண்ட் பிரதம காரியதரிசி ஸர் க்ரீம் டைரல். இவர் இம்மாதம் உத்தியோகத்திலிருந்து விலகிக் கொள்ளுகிறார். இலங்கையில் 1900-வருஷத்திலிருந்து உத்தியோகம் வஹித்துவருகிறார். மத்தியில் நான்கு வருஷங்கள் மட்டும் மஹாயுத்தத்தில் சேவை செய்தார்.



நாயபுகுதில் ஆரம்பிக்கப்பட்டுவரும் ஹிந்து பான்லே படைப் பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்காக ஒரு லக்ஷரூபாய் நன்கொடை அளித்துள்ள ஸ்ரீமான் பிரதாப் சேத்.



வில்வித்தையில் தேர்ச்சிபெற்றுள்ளவரும் 'நவயுக அர்ஜுனன்' என்ற பெயர்பெற்றவருமான ப்ரொபஸர் யாஸ்தால். இவர் தரது திறமையைக் காட்டுவதற்காகச் சமீபத்தில் ஐரோப்பாவுக்குப் பிரயாணமாவார். பூமிக்குள் சேர்ந்தார்ப்போல் 14-மணி நேரமிருப்பது, ஹிருதயம் துடித்துக்கொள்வதை நிறுத்திக் காட்டுவது முதலியவற்றைச் செய்வதிலும் இவர் பெயர் பெற்றவர்.



ரேடியோ மின்சார இஞ்சினீரிங் முதலியவற்றில் மேல்படிப்பிற்காக அமெரிக்கா சென்றுள்ள ஸ்ரீமான் எல். முத்து கிருஷ்ணன்.



போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸர் சார்லஸ் கன்னிங்ஹாம் ரஜாவில் செல்லுகையில் அவருக்குப் பதிலாக உத்தியோகம் வஹிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஸேயர்ஸ்



முள்ளங்குடி மிராசுதார் ஸ்ரீமான் மகாலிங்கய்யர் சகோதரன் எம். வி. கிருஷ்ணமூர்த்திக்கும் பட்டவர்த்தி மிராசுதார் ஸ்ரீமான் நடேசய்யா பேத்தி விசாலாக்ஷிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



காலி (இலங்கை) திருநாவுக்கரசு வாசகசாலைத் தலைவர் செ. காசி விஸ்வநாதன் தாய் நாடு [illegible] முன்னிட்டு எடுத்தபடம்.

## இந்திய வர்த்தமானம்
(2ம் பக்கத் தொடர்ச்சி)

### இண்டோ—பிரிட்டிஷ் வியாபாரம்

இங்கிலாந்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் நடக்கவிருக்கும் வியாபார ராஜிப் பேச்சில் இந்தியா கவர்ன்மெண்டிற்கு ஆலோசனை கூறுபவர்களாக இருக்க வேண்டுமென்று இந்திய சர்க்கார் அனுப்பிய அழைப்பை அடியிற்கண்ட கனவான்கள் ஒப்புக் கொண்டிருப்பதாகக் கவர்ன்மெண்ட் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது:—(1) ஸர் எட்வர்ட் பெந்தால், (2) ஸ்ரீமான் ஜி. டி. பிர்லா, (3) சர்தார் தத்தர்சிங், (4) ஸ்ரீமான் கஸ்தூர்பாய் லால்பாய், (5) நவாப் ஸ்டாலியாகுட் அலி கான், (6) ஸர் புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ், (7) டாக்டர் பி. சுப்பராயன்.

### காங்கிரஸ் காரியக் கமிட்டி புதிய அங்கத்தினர்கள்

ஸ்ரீமான்கள் ஸி. ராஜகோபாலாச்சாரியாரும் ஜெயப்பிரகாச நாராயணரும் ராஜிநாமாச் செய்த காரியக்கமிட்டி மெம்பர் பதவிகளுக்கு ஸ்ரீமதி சரோஜனி நாயுடுவையும் ஸ்ரீமான் கோவிந்த வல்லப பந்தையும் நியமித்திருப்பதாகவும் ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸை இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரிகள் பந்தோபஸ்தில் வைத்திருப்பதால், அவர் காரியக் கமிட்டி மெம்பர் வேலை பார்க்க வரும்வரை ஸ்ரீமான் சரத்சந்திரபோஸை ஆக்டிங் மெம்பராக நியமித்திருப்பதாகவும் பண்டித ஜவஹர்லால் நேரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

### ராஜப்பிரதிநிதியும் அவசரப் பிரேரணையும்

ஒரு அவசரப் பிரேரணையை இந்தியா சட்டசபைத் தலைவர் அனுமதிக்குமுன் அதை ராஜப்பிரதிநிதி நிராகரிக்கக் கூடுமாவென்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் ஸ்ரீமான் புலாபாய் தேசாயும் இந்தியா சட்டசபையில் ஒரு ஆக்ஷேபம் எழுப்பினர். இதற்கு இந்தியா சட்டசபைத் தலைவர் ஸர் அப்துர் ரஹீம் முடிவு கூறுகையில், ஒரு பிரேரணையைப் பிரேரிக்கச் சபைத் தலைவர் அனுமதி கொடுத்த பின்னரே ராஜப்பிரதிநிதி அதை நிராகரிக்கக் கூடுமென்று சொன்னார்.

### அந்நிய நாடுகளுக்கு இந்தியக் குரங்குகள்

இந்தியா சட்டசபையில் பண்டித கிருஷ்ணகாந்த மாளவியாவின் ஒரு கேள்விக்கு ஸர்க்கார் பதிலளிக்கையில் 1935-36-ம் வருஷத்தில் இந்தியாவினின்று குரங்குகள் முக்கியமாக அமெரிக்க யுனைடெட் ஸ்டேட்ஸ், சிங்கப்பூர் பிரதேசம், பெல்ஜியம், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன வென்றும், என்ன நோக்கத்துடன் இந்தக் குரங்குகள் அந்த நாடுகளில் இறக்குமதி செய்யப்படுகின்றன வென்பதுபற்றிக் கவர்ன்மெண்டிற்குத் தகவல் கிடையாதென்றும் அறிவிக்கப்பட்டது.

### இந்தியாவின் தலைநகரை அந்தமானுக்கு மாற்ற வேண்டும்

அனுமானங்கள் அடங்கியிருப்பதாலும், பரிஹாஸமான வார்த்தைகள் இருப்பதாலும் உத்தியோகப் பற்றற்றவர்கள் நோட்டீஸ் கொடுத்திருந்த இரண்டு தீர்மானங்களை அனுமதிக்கவில்லையென இந்தியா சட்டசபைத் தலைவர் அறிவித்து விட்டார்.

நிர்வாகத் திறமையையுத் தேசித்தும், இந்தியர் தன் மதிப்பைக் காட்டவும் தேசத்தில் எல்லாக் கீழ்த்தர உத்தியோகங்களையும் ஐரோப்பியமயமாக்க வேண்டுமென்ற ஸ்ரீமான் ஸ்ரீ பிரகாசரின் தீர்மானம் இதில் ஒன்றாகும்.

மற்றொரு தீர்மானம் லாலா ஷாம்லாலுடையதாகும். அந்தமான் தீவு கைதிகளின் சுவர்க்கம் என்று உள்நாட்டு மெம்பர் கூறியிருப்பதைக் கொண்டு இந்தியா கவர்ன்மெண்டு தலைநகரை அந்தமான் தீவுக்கு மாற்றலாமென்று இத்தீர்மானத்தில் அவர் யோசனை கூறியிருந்தார்.

### ஸ்ரீமான் மஸானி கைதியானார்

அபேதவாதக் கட்சியின் காரியதரிசியான ஸ்ரீமான் மஸானி பஞ்சாபை விட்டு 24-மணி நேரத்தில் வெளியேறிவிடவேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டனர். அவர் அவ்விதம் செய்யாததால் சென்ற 4-ந் தேதி கைது செய்யப்பட்டார். ஸ்ரீமான் மஸானி தாம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

பஞ்சாப் சர்க்கார் அதிகாரத்தைத் துர்விநியோகம் செய்து விடுத்த இவ்வுத்தரவுக்குப் பணிவது சரியல்லவென்று நான் கருதுகிறேன். நான் சர்க்கார் உத்தரவைப் பொருட் படுத்தாமல் கைது செய்யப்படாத வரையில் என் நியாயமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கப் போகிறேன். அபேதவாதக்கட்சிக் காரியதரிசியென்ற ஹோதாவில் மாகாணந்தோறும் கட்சியை அமைக்க உதவுவது என் கடமை. பஞ்சாப் அபேதவாதக் கட்சிக்கும் தீவிர வாதிகள் சங்கத்திற்கும் ஒற்றுமையை உண்டு பண்ணவே நான் வந்திருக்கிறேன். எனக்குச் சட்ட விரோதமான நோக்கமிருப்பதாக நிரூபிக்கும்படி நான் சர்க்காரை அறைகூவி அழைக்கிறேன். என்னுடையவும் என் கட்சியினுடையவும் சாதாரண காரியங்களைத் தடை செய்வதே சர்க்கார் உத்தரவின் உத்தேசமெனக் காண்கிறது. கட்சியை வலுப்படுத்துமாறு நான் அபேதவாதிகளையெல்லாம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான் மஸானி டில்லிக்கு அழைத்து வரப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பது பற்றி ஸ்ரீமான் மஸானி அபேதவாதக் கட்சியின் நிர்வாகக் கமிட்டியைக் கலந்தாலோசிப்பார்.


விஷம்!



நல்ல பாம்பின் விஷம் தீண்டினால் உடனே மரணமேற்படுகிறது
பலவீனமும் அவ்வளவு ஆபத்தானதே
இது தேக உருப்புகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று விடுகிறது. நல்ல பாம்பின் விஷத்துக்கு மருந்தோ மாயமோ இல்லை. ஆனால் பலவீனத்தைப்போக்க மருந்துண்டு
அதுதான் "அமிர்தா"
இது பலவீனத்தை ஒழித்து, தேக, மனோதிடத்தை யளிக்கிறது.
அமிர்தா எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்
கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.

# இந்தியத் தேத்தண்ணீரால்



## தேக திடத்தை விருத்தி செய்

சரீரம் ஆலயத்திற்கொப்பாக அடிக்கடி சொல்லப்படுகிறது. அதை நம்பி நாம் நம் சரீரத்தை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் திடமாயும் வைத்துக் கொள்ள முயலுகிறோம். களைத்த சரீரமோ அல்லது சுறுசுறுப்பில்லாத மனமோ இயற்கையான நிலைமையிலிருப்பதில்லை. அவைகளை சரியான நிலைமையில் வைத்துக்கொள்ள ஆரோக்கியமான பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்.

நம்முடைய வீரியம் குறையாமல் ஒரே நிலைமையில் வைத்துக்கொண்டு வருவதற்கும் தேக திடத்தை விருத்தி செய்வதற்கும் தேத்தண்ணீரை வழக்கமாக அருந்துவதை விட சிலாக்கியமான வழி வேறொன்றுமில்லை.

இந்திய தேயிலை மிகவும் பரிசுத்தமானது. மனித சரீரத்திற்கு யாதொரு கெடுதலும் செய்யாதது.



**தேத்தண்ணீர் செய்யும் முறை**—சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. உலர்ந்த பாத்திரம் ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்திய தேயிலையைப் போட்டு உடனே கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும் பெருமையும் –

### இந்திய தேயிலையே!

Regd No. 2544


# காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

பாரத தேசத்து சுதந்திரப் போரின்

அரிய விருத்தாந்தம்

---

தேசியத் தலைவர்களின்

வீர உரைகள் நிறைந்தது

---

மூன்று பாகங்கள் கொண்டது

---

## பாகம் 1-க்கு விலை ரூபா 2.

---

உடனே ஆர்டர் செய்யுங்கள்

---

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

மவுண்ட் ரோட் - - மதராஸ்.

---

எல்லா "மித்திரன்" ரெயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்


[illegible] Viswanatha Iyer [illegible] at the Swadesamitran Power Press, Mount Road, Madras—Editor C. R. Srinivasan B. A.